301

வசந்தம்

விலை
8
அணா

சுபானு - தை

1944 - ஜனவரி

சிறந்த ஆபரணங்களுக்கும்
வைரங்களுக்கும்
P.A. ராஜசெட்டியார் & பிரதர்
கடைத்தெரு, கோயமுத்தூர்.
போன் 218A - தபால்பெட்டி 139 - தந்தி "ராஜா"

தந்திவிலாசம்: **FLOWER.** டெலிபோன் நெ. **175.**

சௌத் இந்தியா கார்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்.

இரும்பு, எலக்ட்ரிக், மில் ஸ்டோர்ஸ் வியாபாரிகள்,
அவனாசி ரோடு, கோயமுத்தூர்.

8-MAY 1944
MADRAS

சேர்மன் போர்டு ஆப் டைரக்டர்ஸ்

டாக்டர். ராஜா. சர் அண்ணாமலை செட்டியார், KT. LL. D.

ஆப் செட்டிநாடு.

தலைமை ஆபீஸ் செட்டிநாடு.

எங்களிடம், எல்லாவிதமான டாட்டா இரும்புச் சாமான்களும், கலாய் குழாய்களும், நீலகிரி மார்க் சிமிண்டும், குட்லஸ் வால்வர்ணம் வகையறுக்களும், சானிபட்டரிச் சாமான்களும், எலக்ட்ரிக் பல்புகள், வயர்கள், பங்காக்கள், மோட்டார், சுவிட்சுகள், முதலியவைகளும், மில் ஸ்டோர்ஸ், பாபின்ஸ், தோல் பெல்ட்டுகள், கிராப்ட் பேப்பர், ஊப் தகடுகள், கித்தான்கள் கிடைக்கும்.

★

பிராடியூஸ் டிபார்ட்மெண்டு,

21/138, 139, ரெங்கய்ய கவுடர் தெரு

நெல், அரிசி, கோதுமை, ரவை, மாவு தினுசுகள், சர்க்கரை நவதானியங்கள், மற்றுமுள்ள மளிகை சாமான்கள் எங்களிடம் மொத்தமாகக் கிடைக்கும்.

பீஸ் கூட்ஸ் டிபார்ட்மெண்டு ("கமர்ஷியல் எம்போரியம்")

21/138, 139 ரெங்கய்ய கவுடர் தெரு

பல மில்களில் தயாராகும் ஷர்ட்டிங், கோட்டிங், மல், லாங்க்ளாத், வாயில்ஸ், சீட்டி தினுசுகள், டிரில், டுவில், வேஷ்டிகள், துண்டுகள், இன்னும் பலவிதமான மில் ஜவுளி தினுசுகளும், எங்களிடம், மொத்தமாகவும், சில்லரையாகவும், சகாயமாகவும் கிடைக்கும்.

சுத்த தனி வசீகரம்

மைசூர் சந்தன சோப் உனக்கு உறுதியாக அளிப்பது அதுதான்.

அது குளிர்ச்சியுள்ளது. மிருதுவானது. கூச்சம் மிகுந்த சருமங்களிலும் உபயோகிக்கத்தக்கது.

மைசூர்

சந்தன சோப்

கவர்மெண்ட் சோப் பாக்டரி,
பெங்களூர்.

புனிதமான

பொங்கல்

பண்டிகைக்கு எங்கும் புகழ் பெற்ற
கோவை, புதுமார்க்கட்டு

A. P. ராமசாமி செட்டியாரின்

உத்திரவாத நல்லெண்ணெயை வாங்கி
உபயோகித்து திருப்தி அடையுங்கள்

எமது நல்லெண்ணெயின் குணங்கள் :—
கலப்பற்றது, கசப்பற்றது, கமுறற்றது, மணமுற்றது, நோயற்றது, என 30 வருஷங்களாக விற்பனை செய்து அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றது.

தயாரிக்கும் இடம் :

ஏ. பி ஆர். ஆயில் மில்ஸ், கோட்டை, கோயமுத்தூர்.

R. L. சுப்பிரமணிய செட்டி
ஜெனரல் செக்ரடரி

சின்னப்பா
கண்ணாம்பா
கிருஷ்ணன்...
மதுரம் நடித்த
ஹரிச்சந்திரா
ஜனவரி
14 உ
பொங்கல் தினத்தன்று
சென்னையிலும் மற்றும்
பல முக்கிய நகரங்களி
லும் ஆரம்பமாகிறது.....
ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பிக்சர்ஸ் தயாரிப்பு.......... ஜெமினி ரிலீஸ்.

PSG

மோட்டார்களை

ஸ்தாபனம் செய்து



செலவை

சிக்கனம் செய்யுங்கள்

PSG அண்டு சன்ஸ் தர்மஸ்தாபன இண்டஸ்டிரியல்
இன்ஸ்டிடியூட், பூளமேடு, கோயமுத்தூர்.

The Fashionable
Furnishing Fabrics

DRESS
TEXTILES

Ladies', Gents', Children's
Underwear Sport Shirts etc.

S. BEEMIAH CHETTY,
"WHITE SHOP"
COIMBATORE.

THE VASANTHA DYEING WORKS.

181. Oppanakara Street
Coimbatore.

Phone No. 155. **Estd., 1921.**

Proprietor
C. M. Subramanya Chettiar
CONTRACTOR
To
THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.

For all kinds of dying border yarn and tie yarn etc., undertakes any variety of colour dying at reasonably cheap rates for dying all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colourguaranteed.

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ் : நார்த் பீச் ரோடு, மதருஸ்.

மதருஸ் ஆபீஸ்கள் :
எஸ்பிளனேட், மவுன்ட் ரோட், திருவல்லிக்கேணி, தியாகராயநகர்,
மயிலாப்பூர், புரசைவாக்கம்.

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும்
பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

அதிகார மூலதனம்	...	ரூ.	1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ.	60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் (28—5—'43)	...	ரூ.	27,55,229
ரிசர்வும் மற்ற நிதிகளும் (25—5—'43)	...	ரூ.	29,44,259

மொத்த ஆஸ்தி 7 கோடிக்கு மேல்.

எல்லாவித பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்.

வேண்டிய விவரங்களுக்கு பாங்கின் எந்த ஆபீசுக்காவது
எழுதி தெரிந்துகொள்ளலாம்.

செக்ரடரி : N. கோபால அய்யர்.



501 ஸோப்பு சிறு துண்டு துக்கடாக்களையெல்லாம் சேர்த்துக் கொதிக்கும் நீரில் கரையவைத்து அந்த ஸோப்பு ஜலத்தைப் பாட்டிலில் ஊற்றி வையுங்கள். மேலும் உபயோகிக்கலாம்.



ஸோப்பை எப்பொழுதுமே ஜலம் படாதபடிரப்பர் அல்லது ஒயர்ட்ரே யின் மேல் வைத்திருங்கள்.



அழுக்கெல்லாம் இளக, துணிமணிகளை வெந்நீரில் நன்கு ஊற வையுங்கள்.



துணிகள் மீது ஸோப்பை லேசாகத்தேயுங்கள். அழுத்தமாகத் தேய்க்க வேண்டாம். ஸோப்பும் துணிகளும் நீடித்துநிற்கும்

மேலும் முக்கியமாக :

உங்கள் தேவைக்கு அதிகமாக ஸோப்பு வாங்கவே வாங்காதீர்கள்.

உங்கள் ஸோப்பு நீடித்து நின்று வருகிறதா ?

மற்ற எத்தனையோ ரகங்களைப் போலன்றி 561 ஸோப்புகள் நீடித்துழைக்கின்றன. காரணம் அவற்றில் அதிக ஸோப்பு உள்ளதனால் தான். சிக்கனம் அதிமுக்கியமான இந்நாட்களில் நீங்கள் உங்கள் சலவைக் காரியத்தில் கீழ்வரைந்துள்ள அல்ப விஷயங்களை சற்றுக் கவனத்துடன் பின்பற்றி வருவீர்களானால் ஸோப்புகளை இன்னும் நீடித்து நிற்கச் செய்ய முடியும்.

501 ஸோப்புகள்

நீளக் கட்டிகளாகவும் கியூபுகளாகவும் டாப்லெட்டுகளாகவும், சீவல்களாகவும் கிடைக்கும். கூட, எல்லா மெல்லிய ஆடைகளுக்கும் உபயோகிக்க 501 ஸ்பெஷல், ஸில்க் ப்ளேக்குகள் இவையும் கிருமி நாசமான கார்போலிக்கும் கார்ட்போர்ட் பெட்டிகளிலும் விற்கப் படுகின்றன.

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா :

பெரிய கடைத் தெரு, பாலக்காடு.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்,
டாடாபுரம் & பம்பாய்.

F. S. 4128

வசந்தா

தையல் நூல்

No. 600

ஆரம்பம் முதல் கடைசி வரையில் அருமையாக வருகிறது.

உங்களுக்கு பூரண திருப்தி தரும் என்பதற்கு உறுதி கூறுகிறோம்.

The Vasanta Sewing Thread Company

14/280. Oppanakara Street

COIMBATORE.

பொருளடக்கம்

மலர் 2] [இதழ் 10

யுத்தச் செலவு
சர். ஆர். கே. எஸ்

தமிழ் இசை
டி. கே. சி ... 15

வழக்குச் சொற்கள்
"சுகி" ... 22

சிலப்பதிகாரம்
சர். சண்முகம் செட்டியார் ... 25

சொக்கியின் கதை
பூவாளூர் சுந்தரராமன் ... 34

தைக்குரவை
சுத்தானந்த பாரதியார் ... 41

மனிதசுபாவம்
"சாமி" ... 42

வசந்தம்
"மோனம்" ... 44

புத்தக ஆராய்ச்சி
... ... 45

நோயா மருந்தா?
ரா. நா ... 46

சாவித்திரி
ஆர். ஷண்முக சுந்தரம் ... 48

கோடையும் குளிர்நிழலும்
வித்துவான் அ. கிருஷ்ணமூர்த்தி 61

பீபிநாச்சியார்
ஜயலட்சுமி ஆர். சீனிவாசன் 66

அட்டைச் சித்திரம்
"கதிரவன்" ... 69

கலைக் கோயில்
சுத்தானந்த பாரதி ... 70

தமிழிசை விமரிசை
"ஆனந்தன்" ... 77

குழலின் கனவு
"அருணன்" ... 81

மலர் மணம்
... ... 86

இரண்டு இலைகளும் ஒரு தளிரும்...

'இரண்டு இலைகளும் ஒரு தளிரும்' உள்ளபடி பார்த்துத் தேயிலை கொய்வதுதான் உயர் ரகத் தேயிலைக்கு அடையாளம். இந்த முறைப்படி, மிகவும் இளசான, தளிர் போன்ற மெல்லிய தேயிலைகளே சேகரிக்கப்படுகின்றன.

ப்ரூக் பாண்ட் கம்பெனியார் தங்கள் விற்பனை அதிகாரிகள் மூலம் எல்லா வியாபாரிகளுக்கும் அடிக்கடி புதிய சரக்குகள் சப்ளை செய்கிறார்கள். இந்த ஏற்பாட்டின் பயனாய் 'இரண்டு இலைகளும் ஒரு தளிரும்' உள்ள தேயிலை புது மணங் கமழ உங்களுக்குக் கிடைக்கிறது.

எங்கள் பாக்டரிகளிலிருந்து புத்தப் புதிய தேயிலை இந்தியாவில் எல்லா முக்கியமான ஊர்களிலும் உள்ள எங்கள் டிப்போக்களில் ஸ்டாக் செய்யப்படுகிறது. இந்த டிப்போக்களிலிருந்துதான் எங்கள் விற்பனை அதிகாரிகள் அவ்வப்பொழுது சரக்குகள் எடுத்து வினியோகிக்கிறார்கள்.

மணமும் சுவையும் மிகுந்த புத்தப் புதிய தேயிலை வேண்டுபவர்களுக்கு எங்கள் டார்ஜீலிங் பிளெண்ட் மிகவும் உகந்தது.



ப்ரூக் பாண்ட்

நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான்

கம்பர்

யுத்தச் செலவு

[சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்]

இரவு சுமார் ஒன்பது மணி. ஆறுமுகஞ் செட்டியார் பங்களாவில், புத்தக அறையில் வேலுசாமி நாயுடுவும், ஆறுமுகஞ் செட்டியாரும் சாப்பாட்டை முடித்துக் கொண்டு சாய்வு நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இருவர் வாயிலும் நீண்ட சுருட்டுக்கள் புகைந்து கொண்டிருக்கின்றன. வேலுசாமி நாயுடு ஆங்கில தினசரிப் பத்திரிகை ஒன்றை வாசித்துக் கொண்டிருக்கிறார். திடீரென்று பத்திரிகையை வைத்து விட்டுச் செட்டியாரிடம் பேசுகிறார்.

வேலுசாமி நாயுடு: என்ன கணக்கு இது? 1943-ஆம் வருடம் மார்ச்சு மாதம் வரையில் பிரிட்டிஷ் சர்க்காருக்கு 1500 கோடி பவுன் யுத்தச் செலவு ஆகியிருக்கிறது என்று பத்திரிகையில் போட்டிருக்கிறதே! இது சரியான கணக்கா? அல்லது தப்பாகச் சில பூஜ்யங்களைச் சேர்த்து விட்டார்களா?

ஆறுமுகஞ் செட்டியார்: தப்பொன்றுமில்லை. சரியான கணக்கைத்தான் பத்திரிகையில் போட்டிருக்கிறார்கள். மொத்தத் தொகை 1500 கோடி பவுன் என்பதைக் கவனித்தீர்களா? ரூபாயல்ல. நம்முடைய ரூபாய்களாகச் சொல்ல வேண்டுமானால், இந்த எண்ணிக்கையை, 14-ஆல் பெருக்க வேண்டும். அப்படிப் பெருக்கிப் பார்த்தால், சண்டைச் செலவின் உண்மையான நிலைமை இன்னும் நன்றாக விளங்கும்.

வே: 1500 கோடியை, 14-ஆல் பெருக்கினால், வரும் தொகை என் வாயிலும் நுழையாது; மனசிலும் தங்காது.

இவ்வளவு செலவுக்கும் பணம் எங்கிருந்து வந்தது? இவ்வளவையும் வரி மூலமாக வசூல் செய்தார்களா?

ஆ: இங்கிலாந்தில் ஜனங்களிடம் ஏராளமான செல்வமுண்டு. ஆனால் அந்த நாட்டிலுங்கூட இவ்வளவு பெரிய தொகையை வரி மூலமாக வசூல் செய்ய முடியாது. பெரிய யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் போது, எந்த நாட்டிலும் யுத்தச் செலவில், ஒரு பாகத்தைத் தான் வரியாக வசூல் செய்வது வழக்கம். மீதி ஏற்படும் செலவைக் கடன் மூலமாக வசூல் செய்வார்கள். பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்குச் சென்ற மார்ச்சு மாதம் வரை, சண்டையில் செலவான 1500 கோடி பவுனில், சுமார் 700 கோடி பவுனை வரி மூலமாகவும், பாக்கியுள்ள 800 கோடிப் பவுனைக் கடனாகவும் வசூல் செய்திருக்கிறார்கள்.

வே: பிரிட்டிஷ் அரசாங்கத்தாருடைய கணக்கு எப்படியோ இருக்கட்டும். நம்முடைய நாட்டில் இது வரையில் யுத்தச் செலவு எவ்வளவு ஆகியிருக்கிறது என்று சொல்லுங்கள் பார்ப்போம்.

ஆ: 1939-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் யுத்தம் ஆரம்பமானது முதல், நாளது வரையில், நம்முடைய அரசாங்கத்தாருக்குச் சுமார் 675 கோடி ரூபாய் யுத்தச் செலவு ஏற்பட்டிருக்கிறது. யுத்தத்திற்கு முன், நம்முடைய நாட்டில், பாதுகாப்புக்காக வைத்திருக்கும் சைன்யங்களுக்கு வருடம் ஒன்றுக்குச் சுமார் 48 கோடி ரூபாய் செலவேற்பட்டுக் கொண்டிருந்தது.

வே: யுத்த ஆரம்பத்திலிருந்து இந்த நாலரை வருடங்களில், நமக்கு 675 கோடி ரூபாய் சண்டைச் செலவு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னீர்களே! நம்முடைய நாட்டின் எல்லைக்குள் எதிரிகள் புகுந்து சண்டை ஒன்றும் ஏற்படவில்லையே! எதற்காக இவ்வளவு பணம் செலவாயிற்று? ஆப்பிரிக்காவிலும், இத்தாலியிலும், சிங்கப்பூரிலும் நடந்த சண்டைகளுக்கெல்லாம், நம்முடைய சர்க்காரும் பணங் கொடுத்திருக்கிறார்களா?...

ஆ: நீங்கள் கேட்பது பெரிய கேள்வி; கூடுமான வரையில் சுருக்கமான பதிலைச் சொல்லுகிறேன். நாம் செலவிடும் யுத்தச் செலவை எப்படிப் பங்கீடு செய்வதென்று பிரிட்டிஷ் அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் ஒரு ஏற்பாடு முன்னமேயே செய்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் பட்டாளங்களுக்கு ஆட்கள் சேர்ப்பதற்கும், அவர்களைப் பழக்குவதற்கும், அவர்களுக்கு வேண்டிய ஆயுதங்களையும், மற்ற சாமான்களையும் வாங்குவதற்கும் ஏற்படும் எல்லாச் செலவுகளையும் நம்முடைய அரசாங்கத்தார் ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்படி நாம் திரட்டி வைக்கும் சைனியங்களை வெளி நாடுகளுக்கு அனுப்ப நேரிட்டால், சைனியங்கள் இந்தியாவிலிருந்து புறப்படும் தேதி முதல் திரும்பி வரும் வரையில் ஏற்படும் செலவுகளைப் பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இப்படி வெளியே அனுப்பப்படும் பட்டாளங்களைப் பழக்கின செலவையும் அவர்களிடமிருக்கும் ஆயுதங்களின் விலையையும் பிரிட்டிஷ் சர்க்கார் நமக்குத் திருப்பிக் கொடுத்து விடுகிறார்கள். இதல்லாமல், இந்தியாவின்

பாதுகாப்புக் கென்று ஏற்படும் சகல செலவுகளையும் நம்முடைய சர்க்கார்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த ஏற்பாட்டின் படி, நமக்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால், வரவு வந்த தொகை போக, நம்முடைய நாட்டிற்கு மட்டும் 675 கோடி ரூபாய் செலவு இது வரையில் ஏற்பட்டிருக்கிறது.

வே: நம்முடைய பட்டாளங்கள், இந்தியாவை விட்டு, வெளி நாடுகளுக்கு யுத்தத்திற்குப் போகும் போது, உண்டாகும் செலவுகளைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நமக்குக் கொடுத்து விடுவதாகச் சொன்னீர்கள். அப்படியிருந்தும், நமக்கு இது வரையில் 675 கோடி ரூபாய்க்கு மேல் சைனியச் செலவுகள் ஏற்பட வேண்டிய காரணம் என்ன?

ஆ: சண்டைக்கு முன், நம்முடைய பட்டாளத்தின் எண்ணிக்கை எவ்வளவிருந்ததோ அதைவிட, இப்போதுள்ள எண்ணிக்கை பத்து மடங்கு அதிகமாகி விட்டது. 1938ஆம் வருடம் நம்முடைய சைனியங்களில் சுமார் இரண்டு லட்சம் சிப்பாய்கள் தான் இருந்தார்கள். இப்போது 20 லட்சம் சிப்பாய்கள் இருக்கிறார்கள். சென்ற வருடம் மாதம் ஒன்றுக்குச் சுமார் 70,000 வீதம் சிப்பாய்களைப் பட்டாளத்தில் சேர்த்தார்கள். முக்கியமாய் ஜப்பானால், நம்முடைய நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் அபாயத்தை உத்தேசித்து, இவ்வளவு பெரிய சைனியத்தை வைக்க வேண்டி ஏற்பட்டது. பட்டாளத்தை இவ்வளவு அதிகப் படுத்தியதல்லாமல், விமானப் படை, கப்பற் படை ஆகியவைகளையும் ஏராளமாக அதிகப் படுத்தியிருக்கிறார்கள். நாடு முழுதும் அநேக இடங்களில் பெரிய விமான நிலையங்கள் (ஏரோட்ரோம்) கட்டப் பட்டிருக்கின்றன. பட்டாளங்களுக்கு வேண்டிய விடுதிகள், ஆஸ்பத்திரிகள், பண்டகசாலைகள் முதலியன ஏராளமாக அமைக்கப் பட்டிருக்கின்றன. சைனியத்திற்கு வேண்டிய தபால், தந்தி வசதிகளும் அதிகமாகியிருக்கின்றன. இந்தியாவிலிருந்து பர்மாவுக்கு மலைப் பிரதேச வழியாய்ப் புதிய பாதைகள் போடப் பட்டிருக்கின்றன. சிப்பாய்களையும், கப்பற் படைகளையும், விமான ஓட்டிகளையும் பழக்குவதற்குக் கோடிக் கணக்காகச் செலவிட்டுப் புதிய ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன. இந்தச் செலவுகளை யெல்லாம் கணக்கிடும் போது, இவ்வளவு கோடிப் பணம் நமக்கு என் செலவாயிற்று என்பது தெரிய வரும்.

வே: இவ்வளவு பணம் சர்க்காருக்கு எங்கிருந்து வந்தது?

ஆ: யுத்தச் செலவில் ஒரு பாகத்தை வரி மூலமாகவும், மற்ற பாகத்தைக் கடன் மூலமாகவும் வசூல் செய்வது வழக்கமென்று சொன்னேன், அல்லவா? இது வரையில் ஏற்பட்ட 675 கோடி ரூபாய் யுத்தச் செலவில் சுமார் 520 கோடி ரூபாய் வரிகளிலிருந்தும் சுமார் 155 கோடி ரூபாய் கடனாகவும் நம்முடைய அரசாங்கத்தார் வசூல் செய்திருக்கிறார்கள்.

வே: வரிகள் என்னவோ தலைக்கு மேல் போய் விட்டது என்று பொதுவாக எல்லோருக்கும் தெரிகிறது. எந்தெந்த வரிகளை உயர்த்தி யிருக்கிறார்கள் என்று

கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்கள்.

ஆ: சொல்லுகிறேன்; 1938-ஆம் வருடம் இந்திய அரசாங்கத்திற்கு எல்லா வரிகளிலிருந்தும் சுமார் 72 கோடி ரூபாய் வருமானம் வந்தது. நடப்பு வருடத்தில், 154 கோடி ரூபாய்க்கு மேல், வரிகளிலிருந்து வசூலாகிறது. சண்டைக்கு முன்பு இருந்ததை விட, இப்போது வரி வசூல் இரட்டிப்புக்கு மேல் ஆகிவிட்டதென்று தெரிகிறதல்லவா? சண்டை ஆரம்பத்திலிருந்து, ஒவ்வொரு வருடமும் வரிகளை உயர்த்திக் கொண்டே போயிருக்கிறார்கள். ஆனால், எல்லா வரிகளும் உயர்த்தப் படவில்லை. சில வரிகளிலிருந்து வசூல் குறைந்து விட்டது. உதாரணமாகச் சுங்க வரியைப் (துறை முகத்தில் ஏற்றுமதி இறக்குமதிக்கு இடும் வரி) பார்த்தால், குறைந்து போயிருப்பது தெரிய வரும். 1938-ஆம் வருடம் 40 கோடி ரூபாய் சுங்க வரி வசூலாயிற்று. நடப்பு வருடத்தில் 30 கோடி ரூபாய் தான் வசூலாகும். சண்டையினால், கப்பல் போக்கு வரவுகள் குறைவுபட்டு, வெளி நாடுகளிலிருந்து வரும் சரக்குகள் ரொம்பவும் குறைந்து போயிற்று. இதுதான், சுங்கவரி இவ்வளவு குறைவு பட்டதற்குக் காரணம். இந்த வரித்தொகை குறைந்து போய் விட்ட போதிலும், மற்றும் சில வரிகளை, ஏராளமாக உயர்த்தப் பட்டிருக்கிறது. ரொம்பவும் உயர்த்தப்பட்ட வரி வருமான வரி. 1938-ஆம் வருடத்தில் வருமான வரிகளிலிருந்து 17 கோடி ரூபாய் வசூலாயிற்று. நடப்பு வருடத்தில் சுமார் 102 கோடி ரூபாய் வசூலாகும். நாம் சாதாரணமாகக் கொடுக்கும் வருமான வரியை அதிகப் படுத்தியதல்லாமல், அதிக லாப வரி என்று ஒரு புதிய வரியையும் போட்டிருக்கிறார்கள். இந்த வரிகளல்லாமல், நாட்டில் உண்டாகும் சில பண்டங்களுக்குக் கைத்தொழில் உற்பத்தி வரி (எக்சைஸ்) என்ற ஒரு வரியையும் அதிகப் படுத்தியிருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் உண்டாகும் இரும்பு, சர்க்கரை, தீப்பெட்டி, சிமென்ட் முதலிய பண்டங்களின் பேரில் இந்த வரியைப் போடுகிறார்கள். 1938-ஆம் வருடம் இந்த வரியின் மூலம் 9 கோடி ரூபாய்தான் வசூலாயிற்று. நடப்பு வருடத்தில் 25 கோடி ரூபாய் வசூலாகும்.

வே: அதிகலாபவரி என்று சொன்னீர்களே, அதைப் பற்றி இன்னும் கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்கள். நம் ஊரிலிருக்கும் மில்களுக்கு லட்சக் கணக்காக வரும்படி வந்த போதிலும், பெரும் பாகமும் அதிக லாப வரியாகப் போய் விடுகிற தென்று சொல்லுகிறார்கள். இது எனக்குச் சரியாகப் புரியவில்லை.

ஆ: சண்டைக்கு முன், என்ன லாபம் வந்ததோ, அதற்கு மேல் வரும் லாபத்திலிருந்து, மூன்றில் இரண்டு பாகம் அதிக லாப வரி என்று சர்க்கார் வசூல் செய்து விடுகிறார்கள். உதாரணமாக, 1938-ஆம் வருடம் ஒரு மில்லுக்கு 4 லட்சம் ரூபாய் லாபம் வந்தது என்றும், இந்த வருடம் அதே மில்லுக்கு 25 லட்சம் லாபம் வருகிறதென்றும் வைத்துக் கொள்வோம். 21 லட்சம் அதிக லாபமல்லவா? இந்தத் தொகையிலிருந்து 14 லட்சம் ரூபாயைச் சர்க்காருக்கு அதிக லாப வரியாகக் கொடுத்து விட வேண்டும். இதல்லா

மல், பாக்கி இருக்கும் லாபத்தி லிருந்து வருமான வரி கொடுக்க வேண்டும். இதை யெல்லாம் கணக்கிடும் போது, மொத்த லாபத்தில் 100-க்கு 80-க்கு மேல் இந்த வரிகளில் போய் விடும்.

வே: 25 லட்சம் ரூபாய் லாபத்தில் 20 லட்சத்திற்கு மேல் வரியாகக் கொடுப்பதென்ருல், கொள்ளை மாதிரியல்லவா இருக்கிறது! எப்படி இது நியாயமாகும்?

ஆ: இந்த விஷயத்தைப் பற்றிக் கொஞ்சம் சிந்தனை செய்து பார்த்தால், இதில் அநியாயம் ஒன்றுமில்லை என்று உங்களுக்குத் தெரியும். 4 லட்சம் ரூபாய் சம்பாதித்த ஒரு மில், எப்படி இப்போது 25 லட்சம் சம்பாதிக்கிறது? மில் நடத்தும் முதலாளிகளுடைய சாமர்த்தியத்தினுல், இவ்வளவு லாபமும் வந்ததா? ஒருபோதும் இல்லை. சண்டையின் காரணமாக வெளிநாட்டுச் சரக்குகள் வருவது குறைவு பட்டும், யுத்தத்திற்காகச் சர்க்கார் ஏராளமாகச் சாமான்கள் வாங்குவதனுலுந்தான், விலைகள் உயர்ந்து, இவ்வளவு லாபமும் வந்தது. யுத்த காரணமாக வந்த லாபத்தை யுத்தச் செலவுக்கே கொடுத்துவிட வேண்டுமென்று சொல்வதில் நியாயமில்லையா?

வே: இங்கிலாந்திலும் இவ்வளவு அதிகலாப வரியையும் வருமான வரியையும் விதித்திருக்கிருர்களா?

ஆ: அந்தக் கதையைக் கேட்டால் நீங்கள் ஆச்சரியப் படுவீர்கள். நம்முடைய நாட்டில் அதிக லாபத்தில் நூற்றுக்கு $66\frac{1}{3}$%பங்கைத்தான், அதிக லாப வரியாகச் சர்க்கார் எடுத்துக் கொள்ளுகிருர்கள். இங்கிலாந்திலோ வென்ருல், முழுவதையுமே வரியாக எடுத்துக் கொள்ளுகிருர்கள். நான் மேலே சொன்ன மில்லின் உதாரணத்தில், 21 லட்சம் ரூபாய் அதிகலாபம் என்று பார்த்தீர்கள். இந்த மில் இங்கிலாந்தில் இருந்தால், இந்த 21 லட்சத்தையும் சர்க்காருக்கு அதிகலாப வரியாக கொடுத்து விட வேண்டும். இதல்லாமல், இங்கிலாந்தில் வருமான வரியும் நம் நாட்டை விட மிகவும் அதிகமாக இருக்கிறது. இங்கிலாந்தில் ஒரு மனிதனுக்கு வருடமொன்றுக்கு 50,000 பவுன் வரும்படியிருந்தால், அந்த வரும்படியிலிருந்து 45,319 பவுனை வருமான வரியாகச் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டும். நம்முடைய நாட்டில் ஒருவனுக்கு வருடமொன்றுக்கு ரூ. 50,000 வரும்படி யானுல், அவன், ரூ.16,000 தான் வருமான வரி கொடுக்க வேண்டியிருக்கிறது.

வே: வருமானவரி நோட்டீஸ் எனக்கு வரும்போது, ஒரே சங்கடமாய் இருப்பது வழக்கம். நீங்கள் சொல்வதைப் பார்த்தால், நம்முடைய நிலைமை பரவாயில்லை என்று தோன்றுகிறது. அதிருக்கட்டும்; வரிகளிலிருந்து, வசூலாகும் பணமல்லாமல், நம்முடைய சர்க்காருக்கு வேறு விதங்களில், பணம் வருவதுண்டா?

ஆ: நல்ல கேள்வி கேட்டீர்கள். நானும் இந்த வருமான வரி, அதிக லாப வரி — இவைகளைப் பற்றிப் பேசிக் கொண்டேயிருந்ததில், ஒரு முக்கியமான விஷயத்தை மறந்து விட்டேன். நம்முடைய சர்க்காருக்கு வரியல்லாமல் வேறு சில வரும்படிகளும் உண்டு. ரயில்வே இலாகா, தபால், தந்தி இலாகா — இவைகளிலிருந்து, இப்போது ஏராளமாகப் பணம் வசூலா

கிறது. சென்ற 5 வருடங்களில், சகல செலவுகளும் போக, ரயில்வே இலாக்காவில் 84 கோடி ரூபாயும், தபால், தந்தி இலாக்காவில் 19 கோடி ரூபாயும் ஆகமொத்தம் 103 கோடி ரூபாய் மிச்சம் ஏற்பட்டிருக்கிறது. இந்த வரும்படியையும் சர்க்கார் உபயோகித்திருக்கிறார்கள்.

வே: நீங்கள் இதுவரை சொன்னதிலிருந்து சென்ற 5 வருடங்களில் நம் நாட்டிற்கு 675 கோடி ரூபாய் யுத்தச் செலவு ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அதாவது, சராசரி வருடம் ஒன்றுக்கு 135 கோடி ரூபாய். இந்தச் செலவினால், நம் நாட்டில் இவ்வளவு கஷ்டமும், பஞ்சமும் ஏற்பட்டு விட்டதா?

ஆ: சரியான கேள்வி கேட்டீர்கள்! நமக்கு ஏற்பட்ட 675 கோடி ரூபாய்ச் செலவல்லாமல் பிரிட்டிஷ் சர்க்காருக்காக நம்முடைய நாட்டிலிருந்து ஏராளமாக அநேகவிதச் சரக்குகளும், பண்டங்களும் வாங்கப் பட்டிருக்கின்றன. நாளிது வரையில், சுமார் 700 கோடி ரூபாய் பொறுமான சாமான்கள் பிரிட்டிஷ் கவர்ன்மென்டின் உபயோகத்திற்கு இந்தியாவில் வாங்கப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம், பிரிட்டிஷ் கவர்ன்மென்டார், நம்முடைய சர்க்காருக்கு ரொக்கமாகப் பணம் கொடுக்கவில்லை. கடனுக்குப் பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுப்பது போல், நம்முடைய சர்க்காருக்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பிராமிசரி நோட்டுகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு கரன்சி நோட்டுகளை நம்முடைய சர்க்கார் அச்சிடுகிறார்கள். இந்தப் பிராமிசரி நோட்டுகளுக்கெல்லாம், எந்தக் காலத்தில் எந்த விதமாக நமக்கு வரவேண்டிய தொகையை பிரிட்டிஷ் சர்க்கார் திருப்பிக் கொடுப்பார்கள் என்று இப்போது சொல்ல முடியாது.

இந்தியாவிற்கு யுத்த வகையில் இது வரையில் ஏற்பட்ட மொத்தச் செலவைக் கணக்கிடும் போது, நம் கணக்கில் செலவானது 675 கோடி ரூபாய்; பிரிட்டிஷ் கவர்ன்மென்டார் சார்பாகச் செலவானது ரூ. 700 கோடி. ஆக மொத்தம் 1375 கோடி ரூபாய், இது வரையில் செலவாயிருக்கிறது என்று வைத்துக்கொள்ள வேண்டும். இந்தியாவின் எளிமையான நிலைமையை உத்தேசித்துப் பார்க்கும் போது இது பெரிய தொகை என்றே சொல்ல வேண்டும். இந்த யுத்தத்தில் சேர்ந்த நேச நாட்டார் ஒவ்வொரு வரும் யுத்தத்திற்காக என்னென்ன கஷ்டத்தையும், செலவையும் தாங்கினார்கள் என்று கணக்கெடுக்கும் போது, இந்தியாவானது, தான் பொறுக்கக்கூடிய அளவுக்கு மேல் யுத்தச் சுமையைத் தாங்கியது தெரியவரும்.

★

தமிழ் இசை

[டி. கே. சி]

உலகத்தில் எங்குமில்லாத காட்சி ஒன்றைத் தமிழ் நாட்டில் பார்க்கிறோம். போன போன இடங்களில் எல்லாம் கோயில்களும் கோபுரங்களும் எழுந்து நிற்கின்றன. மௌனமாகவா அவை நிற்கின்றன? அல்ல. காலை, நண்பகல், மாலை மூன்று காலங்களிலும் இதயத்தைத் தொடுவதான சங்கீதம் நாதஸ்வரத்தின் வழியாக வந்து கொண்டிருக்கிறது. ஆயிரக் கணக்கான வருஷங்களாகவே வந்து கொண்டிருக்கிறது.

கோயில்களும் கோபுரங்களும்

நாதஸ்வரத்தின் வாயிலாக வரும் இந்த தெய்வீக சங்கீதத்துக்கு மூலம் எங்கே? தமிழ்க் கவிஞரது இதயத்திலும் நாவிலும் தான். இதயத்தில் உண்டான உணர்ச்சிகளையும் பக்தி ஈடுபாடுகளையும் தமிழ்க் கவிகளாக இசையில் வைத்துப் பாடினார்கள். அந்தப் பாடல்கள் கோயில் சந்நிதியை நிறைத்தன; சேவித்து நின்ற பக்தர்களது இதயத்தையும் நிறைத்தன. வழிபாடு முடிந்து வீடு போன பிறகும் இதயத்தில் ஒலித்துக்கொண்டே யிருந்தன அந்தப் பாடல்கள். பாடல்களின் உருவம் மறைய நேரும்போது நாதசுரம் வந்து உருவங்களை நினைவூட்டித் துலாம்பரமாக்கின.

நாதஸ்வரமும் தமிழும்

சங்கீதமும் சாகித்தியமும் ஒரு அருமையான முறையில் தெளிவுபட்டு வந்திருக்கின்றன. சங்கீதத்தை நாதசுரம் தெளிவு படுத்தியது. சாகித்தியத்தைக் கோயில் சன்னிதியில் எழும் பாடல் தெளிவுபடுத்தியது. காவடி யாட்டங்களில் வாய்ப்பாட்டும் நாதசுரமும் மாறிமாறி வந்து ஒன்றை ஒன்று தெளிவுபடுத்தி இன்ப மூட்டுவதை இன்றைக்கும் பார்க்கிறோம்.

இந்தவிதமாக வாய்ப்பாட்டும் வாத்தியமும் சேர்ந்து நம்மவரது சங்கீத ஞானத்தை அபூர்வமான முறையில் வளர்த்து வந்திருக்கின்றன.

*　　　*　　　*

இப்படி வளர்ந்து வந்த—நெடுநாளாக வளர்ந்து வந்த—இசைச் செல்வம் நம்முடைய பூர்வ புண்ணியத்தால் நம் கைக்கே வந்திருக்கிறது. இந்தச் செல்வத்தின் உயர்வும் பண்பாடும் எத்தன்மையது என்று அறிந்து கொள்ளுவதற்குக் கொஞ்சம் கூர்ந்து யோசிக்க வேண்டும். பூர்வ சரித்திரத்தைக் கொஞ்சம் எட்டிப் பார்க்க வேண்டும். அப்போது தான் நம்முடைய கடமை இன்னது என்று தெரியவரும்: பூர்வமாக வந்த செல்வத்தை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டாமா?

இன்றைய சங்கீதம் பூர்வமானதே

சங்கீத உலகில் புதிய காரியங்களை அவ்வளவாகச் செய்து விட முடியாது. பூர்வத்தை வைத்துத் தான் கலைவளம் எல்லாம். ஆர்டர் கொடுத்துச் செய்கிற மேஜை நாற்காலி அல்ல கலை. எவ்வளவுக் கெவ்வளவு நமக்குரித்தான பூர்வ கலையைப் பாதுகாக்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு செல்வம் படைத்தவர்கள் நாம். உண்மையான கலையை உணருவதற்கே நீண்ட காலம் ஆகிறது.

புதிய காரியம் முடியாது

அதைக் கற்றுப் பிறருக்கு ஓதுவதற்கோ அதைவிட நீண்டகாலம் வேண்டும். அப்படியானால் அந்தக் கலையைச் சிருஷ்டிப்பதற்கு எத்தனை நீண்ட காலம் வேண்டுமென்று எடுத்துச் சொல்லவா வேண்டும்? நூற்றுக் கணக்கான ஆண்டுகள் போதாது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளே வேண்டுமென்றால் மிகை அல்ல.

கலைவளர நீண்ட காலம்

நம்முடைய சங்கீதம் அதாவது தமிழ் நாட்டை இப்போதே வளஞ் செய்துவருகிற சங்கீதம் ஆயிரக் கணக்கான வருஷங்களாக வளர்ந்தேறி வந்த அரிய வஸ்து.

எத்தனையோ பண்கள் அதாவது ராகங்கள் நம்முடைய இசையை வளப் படுத்துகின்றன. தமிழ் நாட்டிலுள்ள பண்களின் தெளிவையும் வேறுபாடுகளையுங் கண்டு அதிசயிக்காதவர் கிடையாது. வட இந்தியாவிலிருந்துவந்த பூர்வ மக்களும் அதிசயித்தவர்களாய்த் தங்கள் நாட்டிற்கே அவைகளைக் கொண்டு போயிருக்கிறார்கள். பெயர்களை எப்படி எப்படியோ கொடுத்துக் கொண்டார்கள்.

பண்கள் வடநாடு சென்றன

மேல்நாட்டார் ஏதோ இரண்டு பண்களைக் கண்டு பிடித்து, முப்பது வருஷமாக அனுபவித்து வருவது பற்றி எவ்வளவோ எக்களிப்புடன் பேசுகிறார்கள். அப்படியானால் நம்முடைய பண்களின் தொகையையும் பூர்வமாக ஏற்பட்டுள்ள நயங்களையும் கண்டார்களானால் அவர்களுடைய அதிசயத்தை எப்படிச் சொல்லவேண்டியிருக்கும்!

மேல் நாட்டாரது இரண்டு பண்கள்

நமது இசைச் செல்வம், இவ்வளவு வளமாயும், பண்பட்டதாயும் இருப்பது வெளிப்படை. அதிசயிக்க வேண்டிய விஷயம். ஆனாலும் அதிசயித்திலும் அதிசயம் என்னவென்றால் அந்தச் செல்வத்தை நம்முடைய முன்னோர்கள் பாதுகாத்து வந்த முறைதான்.

இசைக்குப் பாதுகாப்பு

சங்கீதமானது கண்ணுக்குத் தெரியாத பொருள் ஆயிற்றே, காற்றோடு காற்றாய்க் கரைந்துபோகிற பொருள் ஆயிற்றே என்று கருதிக் கருங்கல்ப்பணிக்குள் பொதிந்து வைத்தார்கள் போலும்! தமிழ் நாடெங்கும் சிறிய கோயில்களையும், பெரிய கோயில்களையும் எழுப்பி, அக்கோயில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளின் திருவடிகளில் வைத்தல்லவா சங்கீதக் கலையை பாதுகாத்து வந்திருக்கிறார்கள்!

நடனகலையும் கவிதையும் ஒன்றோடு ஒன்று இணங்கி தெய்வ வழி பாட்டுக்குரிய மார்க்கமாய் இருந்து வந்திருக்கின்றன. நமது சங்கீதத்தின் சராம்சமான ராகங்கள், நடனத்தோடும் கவிதையோடும் ஒன்றாய்க் கலந்து, அவைகளின் உணர்ச்சி பாவங்களைப் பிழிந்து தங்களிடம் நிறைத்து வைத்துக் கொண்டன. நமக்குத் தெரியாமலே உணர்ச்சி பாவங்கள் ராகங்களில் ஊறிக் கிடக்கின்றன. அக்காரணத்தினலேயே ராகங்கள் தனியாகவே நம்மை வசப்படுத்துகின்றன. ராகங்களை அதாவது தனி இசையைத் தமிழ் நாட்டில் நாம் அனுபவிப்பது போல உலகில் வேறு யாரும் அனுபவிப்பதில்லை. இதில் இருந்து பாஷை வேண்டாம், சாகித்தியம் வேண்டாமென்று சொல்லி விடலாமா? ராகங்களின் விந்நியாச நயங்கள் எல்லாம் சாகித்தியத்திலுள்ள உணர்ச்சியின் விந்நியாசங்கள் தான் என்று அறிந்து கொண்டோமானல், சங்கீதத்தில் ராக விஸ்தாரத்துக்குள்ள இடம் இன்னது தான் இவ்வளவுதான் என்ற தாரதம்மியம் தெரிந்து விடும். தெரியாமல் போனல், தனி ராகமாக நாலு மணிக்கச்சேரி என்று விளம்பரம் பண்ணிப் பார்க்க வேண்டும், தெரிந்து விடும்.

நடனமும் கவிதையும் பாவத்தைத் தந்தன

எல்லாக் கலைகளையும் போல சங்கீதக் கலையும் சமுதாய உணர்ச்சியிலிருந்தே எழுவது. சமுதாயத்தின் உணர்ச்சி, கலைஞனது இதயத்தில் உருவெடுக்கிறது. அந்த உருவமும் சமுதாயத்தின் இதயத்தை நோக்கியே நிற்கிறது.

சபை ஒரே தத்துவம்

மூர்த்தி வழி பாட்டில் நாம் ஈடுபட்டவர்கள். நடராஜர் என்றால், முருகப்பெருமான் என்றால் அந்த மூர்த்திகள் மனக்கண்முன் எழுந்து பக்திபரவசத்தை அளிக்கின்றன. பக்தி பரவசத்தைக் கலைஞர் ஒருவர் உணர்ந்து அனுபவிக்கும் போது வார்த்தையாகவும் தாளமாகவும் ராகமாகவும் சேர்ந்து உருவெடுக்கிறது அது. 'காலைத் தூக்கி நின்றாடும்' என்ற எதுகுல காம்போதிப் பதம் பக்தி பரவசம்எடுத்த உருவந்தான். அதைப் பாடியவர் நம்மவர் இதயத்தை நோக்கியே பாடினர். விஷயம் வார்த்தை, ராகம் எல்லாம் நமக்குப் பழக்கமானவை: அது காரணமாக நம்மை நோக்கிப் பாடுகிறார் என்று சொல்லுகிறோம்.

தெலுங்கு சாகித்தியம் செய்த பக்தர்கள், தெலுங்கோ பாடலின் விஷயமோ, அதிலுள்ள உணர்ச்சியோ, தெரிய முடியாத கூட்டத்தைப் பார்த்துப் பாடினர்கள் என்று சொல்ல முடியுமா? முடியாது. பாடியபோது தெலுங்கு பாஷையில் நன்றாய்த் தோய்ந்தவர்களாயும் விஷயத்தில் ஈடுபட்டவர்களாயும் உள்ள கூட்டத்தை நோக்கியே பாடினர்கள் அவர்கள்.

சபை என்றால் பாடுகிறவர் வேறு, கேட்பவர்கள் வேறு என்று அமைந்திருந்தால் அதை சபை என்று சொல்லலாமா? பாடகரும் கேட்பவரும் ஒரே இதயப் பாங்கு படைத்தவர்களாய், ஒரே உணர்ச்சியில் மிதக்கவேண்டும். அப்போதுதான் உண்மையான சபை ஏற்படுகிறது. நடராஜப் பெருமானது நடனம் என்றால் சகல ஜீவராசிகளும் பஞ்ச பூதங்களுமே ஒன்றாக உணர்ச்சியில் கலந்து ஆடுகின்றன என்றார்

கள் நம்மவர்கள். கண்ணனது குழலோசையோடு அண்ட பிண்ட சராசரங்கள் எல்லாம் கரைந்து சுழலுகின்றன என்ருர்கள்.

இவ்விதம் கலைஞரும் சபையோரும் உணர்ச்சியில் ஒன்று படுகிற தெய்வீக லக்ஷியத்தை ஒரு சங்கீத சபை எவ்வளவுக்கு அடைகிறதோ அவ்வளவுக்குத்தான் வெற்றியடைகிறது அது.

சங்கீதமும் இன்றியமையாதது

இந்த உண்மைகள் ஞாபகத்தில் இருந்தால் சங்கீதம் எவ்வளவு சக்தி வாய்ந்தது, சமுதாயத்துக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பது எளிதில் விளங்கும். ஞாபகத்தில் இல்லாத வரையில், வீட்டுக்கு வந்ததும் களைந்து எறியும் உத்தியோக உடைதான் சங்கீதம் என்று தோன்றிவிடும்.

*　　　*　　　*

நம்முடைய சாகித்தியத்தின் வளம்

நம்முடைய சமுதாயம் சங்கீதத்தின் ஒவ்வொரு அம்சத்தோடும் ஒட்டியனுபவித்துவந்த காரணமாக சங்கீதமும் சாகித்தியமும் விரிவாக வளர்ந்தன; சாகித்தியங்கள் பல்லாயிரக் கணக்காக நம்மிடை உலாவி வந்தன. இன்றைக்கும் அவைகள் இருக்கத்தான் செய்கின்றன. சாதாரணமான ஒரு தமிழ்ப் புஸ்தகக் கடைக்குப் போய்ப் பார்ப்போமானல் கீர்த்தனங்களாகவும் பதங்களாகவும், புஸ்தகங்கள் எத்தனை எத்தனையோ இருக்கின்றன. அந்தப் புஸ்தகங்களைக் கையால் தொடாததினுலும் பாடல்களைப் பாடாததினுலுமே அவைகள் நம் கண்ணுக்குத் தென்படாமல் போய்விட்டன. தமிழிலே சாகித்தியங்கள் இல்லை என்று நம்மவர்களே சொல்லத் தலைப்பட்டார்கள்.

இதைக் குறித்து மகா மகோபாத்யாய சாமிநாத ஐயரவர்கள், “தமிழில் கீர்த்தனங்களே இல்லை என்று கூறவும் அவர்கள் அஞ்சவில்லை” என்று மிக்க வருத்தத்துடன் சொல்லியிருக்கிருர்கள்.

இதெல்லாம் காரணமாக உணர்ச்சியுள்ள தமிழ்ப் பாடலைக் கேட்பதே அரிதாய்ப் போய்விட்டது. ஏன், உணர்ச்சியற்றுப் பாடுவதே கச்சேரி என்றும் ஏற்பட்டுவிட்டது. தமிழோடாவது உணர்ச்சியோடாவது பாடிஞல் ‘மட்ட ரகம்’ என்று பேசும் நிலைக்கே வந்து விட்டது. இந்த விதமாக ஒருவர் சொல்லிப் பத்துப் பேர் சொல்லி, நூறு பேர் ஆயிரம் பேர் என்றெல்லாம் சொல்லி வந்ததால், நம்முடைய சங்கீதத்துக்கு விமோசனமே கிடையாதோ என்று கையை நெரிக்கும்படியான நிலைமை வந்து விட்டது.

சரித்திரத்தில் அரிய சம்பவம்

இந்த நிலையில் சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பு நம்முடைய சங்கீதத்தில் ஆர்வங் கொண்ட சிலர், தமிழில்ப் பாடுவது என்று ஏற்பட்டா லொழிய, புராதனமான பண்பாடு கொண்ட சங்கீதம் உயிரற்று வறண்டு போய் விடும் என்பதாகக் கருதி, நமது கச்சேரிகளில் தமிழ்ப் பாட்டுப் பாடவேண்டு மென்று சொல்ல ஆரம்பித்தார்கள். இதனல் தமிழிசை உணர்ச்சி ஓரளவு பரவி

வந்தது. ஆனாலும் பிரமாத வெற்றியடைந்ததாகச் சொல்வதற்கு இல்லை.

தமிழிசை இயக்கம் இப்படி நின்ற நிலையில் தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் ஒரு அரிய சம்பவம் நேர்ந்தது.

தமிழிசைக்கு ரூ. 10,000

மூன்று வருஷத்துக்கு முன்பு (16-11-40) கனம் செட்டி நாட்டரசர் ஸர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள் தமிழிசைக் கென்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு பதினாயிரம் ரூபாய் நன்கொடை அளித்தார்கள். இந்த நன்கொடையைப் பட்டம் அளிப்பு விழாவில் வெளியிட்டபோது மண்டபத்திலிருந்த சபையோர்கள் ஆரவாரித்த ஆரவாரிப்பை யாரும் மறக்க முடியாது. ஒரு புதிய யுகத்தையே அந்தத் திருநாள் ஆரம்பித்து விட்டது. அன்று முதல் நாடெங்கும் தமிழிசை யுணர்ச்சி நாளுக்கு நாள் அதிகமாகப் பரவி வந்திருக்கிறது. எங்கே பார்த்தாலும் தமிழ்ப் பாட்டே வேண்டுமென்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். தமிழ் நாட்டில் நடக்கும் சங்கீதக் கச்சேரிகளில் இப்போது பெரும்பாலும் தமிழ்ப் பாட்டாகவே பாடிவருகிறார்கள். சங்கீதத்தை உணர்ச்சியுடன் கேட்க வேண்டும் அனுபவிக்க வேண்டும் என்ற மனப்பான்மை ஜனங்களுக்குள் ஏற்பட்டுவிட்டது.

இதர பாஷைகளில் துவேஷம் உண்டா?

தமிழிசை இயக்கம் இவ்விதம் ஒரு பக்கத்தில் பரவி வருகையில் அதைப்பலமாக எதிர்க்கவும் ஒரு சிலர் தொடங்கினார்கள். அனாவசியமான எதிர்ப்புத்தான். தமிழ்ப் பாட்டுப் பாட வேண்டும் என்பது பாஷைத் துவேஷமென்று சொன்னார்கள். இதில் பாஷைத் துவேஷமென்பது எது? நம்மைப் போலத்தானே மற்றவர்களும்? தெலுங்கர்களுக்கு உவந்தது தெலுங்குப் பாடலே. தமிழ்ப் பாடலை அவர்கள் கேட்க விரும்பவில்லை என்றால் தமிழ்ப் பாஷையில் அவர்களுக்கு துவேஷம் உண்டென்றாகுமா? அப்படியே கன்னடர்களுக்கும் வங்காளிகளுக்கும் காசிப் பக்கத்திலுள்ளவர்களுக்கும் தமிழ்ப் பாஷையிலுள்ள சங்கீதம் விளங்காதுதான். அது காரணமாக தமிழிடத்தில் துவேஷம் உண்டென்று அவர்கள் மேல் புகார் சொல்லலாமா? கூடாது. உலகம் இந்த நிலையிலிருக்கத் தமிழர்கள் தமிழ்ப் பாடல்தான் தங்களுக்கு விளங்குவது, உவந்தது என்று சொல்லும் போது துவேஷத்தை ஏன் கற்பிக்க வேண்டும்? அவசியமே இல்லை.

தமிழ் நாட்டில் நமக்கிடையே தெலுங்கு தெரிந்தவர்கள் இருக்கிறார்கள், கன்னடம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். ஹிந்துஸ்தானி பாஷையும் ஹிந்துஸ்தானி சங்கீதமுமே தெரிந்தவர்களும் இருக்கிறார்கள்: நூற்றுக்கு ஒருவர் இருவர் என்று இருக்கலாம். அவர்கள் அந்த அந்த பாஷையில் உள்ள சங்கீதத்தை அனுபவிப்பது இயல்புதான்; எவ்வளவு வேண்டுமானாலும் அனுபவிக்கலாம். ஆனால் தமிழ் பாஷை மாத்திரமே தெரிந்தவர்கள், "எங்களால் தமிழ் மூலமாகத்தான் சங்கீதத்தை அனுபவிக்க முடியும்: எங்களுக்குத்

தமிழ்ப் பாட்டுத்தான் வேண்டும்" என்று சொன்னால் அதை மேலே கூறியவர்கள் ஏன் ஆட்சேபிக்க வேண்டும்? ஆட்சேபிப்பதோடு, "மற்ற பாஷைகளின் மேல் துவேஷம்" என்பதாக ஏன் சொல்ல வேண்டும்? இப்படியெல்லாம், இல்லாத துவேஷத்தைக் கற்பித்துத் தமிழிசை இயக்கத்தைக் குறை கூறவேண்டாம் என்று சங்கீத அபி மானிகளை ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன்.

பாடகர்களுக்குத் தைரியம் ஏற்பட்டது

ஆரம்பத்தில்ச் சில பாடகர்களுக்கு உண்மையிலேயே அதைரியம் ஏற்பட்டது. எப்படி நாலுமணி நேரக் கச்சேரியைத் தமிழ்ப் பாடலைக் கொண்டே சமாளிப்பது என்று பயந்தார்கள். அனேகமாய் இதர பாஷையிலேயே பாடிவந்த காரணத்தால் தமிழ்ப் பாடல்களைக் கற்க அவசியமில்லாமல் போய்விட்டது அவர்களுக்கு. வருந்தத்தக்க காரியந்தான் அது. ஆனாலும் கேட்பவர்களுக்குத் தமிழ்ப் பாடல்களே உவந்ததாய் இருக்கின்றன என்று தெரியவரவும் அவைகளைப் பாடகர்கள் கற்கவும் பாடவும் ஆரம்பித்து விட்டார்கள்.

இப்போது முதலணியிலுள்ள சில பாடகர்கள் தமிழிலேயே முக்கியமாகப் பாடுகிறார்கள். அவர்களைக் கேட்டு அனுபவிக்கும் சபையோரின் தொகையை நூறு ஐந்நூறு என்றல்ல, ஐயாயிரம் பதினாயிரம் என்று கணக்கிட வேண்டியிருக்கிறது. இது நாம் கண்கூடாகக் காண்கிற காரியம்.

சபையோரின் உணர்ச்சி சங்கீதத்தைப் பண்படுத்துகிறது

இன்னொரு விஷயம்: சபையோடு ஐக்கியப்பட்டுப் பாடுகிற காரணத்தால் பாடுகிறவர்களுக்கும் என்றுமில்லாத புதியதொரு மன எழுச்சி யுண்டாகி விடுகிறது. அந்த மன எழுச்சி காரணமாகப் பாடுகிற சங்கீதத்தில் மெருகு, உணர்ச்சி, பண்பாடு எல்லாம் தாமாக ஏறிவிடுகின்றன. அத்தகைய பாடல், கேட்பவரது உள்ளத்தை உருக்குகிறது. அப்படிப் பண்பட்ட சங்கீதத்தில் மேலும் மேலும் அவர்களுக்கு ஆசை அதிகரிக்கிறது. இதுவும் இன்றைக்குக் காண்கிற காரியம்.

* * *

இனி நாம் செய்ய வேண்டுவது என்ன?

தமிழில் இருக்கவேண்டும்; உயர்ந்ததாயும் இருக்கவேண்டும்

தமிழிசை வேண்டுமென்று சொல்லும் போது ஏதோ பாஷை மட்டும் தமிழில் இருந்தால்ப் போதும் என்பதல்ல. பூர்வமான தமிழ் நாட்டு இசைப் பண்போடு கூடி, உயர்ந்த உணர்ச்சி பாவங்களோடு கலந்ததாக சங்கீதம் இருக்க வேண்டும் என்பதே நமது கொள்கை. பொதுவாக தற்போதைய சங்கீதத்தில் மேலே சொன்ன லக்ஷணம் அபூர்வமாகத்தான் இருக்கிறது. வட இந்தியாவிலுள்ள சங்கீத நிபுணர்கள் நம்முடைய சங்கீதம் உயர்ந்த பண்பாடுடையது என்று சொல்லுவார்கள். ஆனால்

பாடகர்கள் அநேகமாக பாவமில்லாமலே பாடுகிறார்கள் என்றும் குறை கூறுகிறார்கள். இந்தக் குறையெல்லாம் நிவர்த்தியாகும் பொருட்டு சங்கீதத்தின் உயர்ந்த லக்ஷியத்தையும் கண்முன்னால் வைத்துக் கொண்டே மாணவர்களுக்குச் சங்கீதம் கற்பிக்கவேண்டும். முதலில் ஏதோ கஷ்டமாகத் தோன்றும். கொஞ்சம் விடா முயற்சியோடு இந்தத் துறையில் வேலை செய்வோமானால் வெகு சீக்கிரத்தில் தமிழ்நாடு எங்கும் அதி அற்புதமான பாவசங்கீதம் ஒலிக்கக் கேட்கலாம். அந்தச் சங்கீதம் தமிழ் மக்கள் எல்லோருடைய இதயத்தையுமே அள்ளும்படியாக இருக்கும்.

தமிழிசையும் எதிர் காலமும்

கோயில்களிலும் சங்கீத சபைகளிலும் வீடுகள் தோறுமே உணர்ச்சி பாவம் நிறைந்து இதயத்தைப் பற்றும்படியான சங்கீதம் முழங்கப் பார்க்கலாம். நம்முடைய சங்கீதம் வெகு புராதனமான சங்கீதம்; ஆயிரக் கணக்கான வருஷங்களாகப் பழுத்த சங்கீதம்; தமிழ் மக்களுக்கு—ஆடவர் பெண்டிர் குழந்தைகள் எல்லோருக்குமே அமுதத்தை யூட்டிய சங்கீதம். கோயில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளுக்கு அர்ப்பணமான சங்கீதம். இந்தச் சங்கீதத்துக்குப் புத்துயிர் உண்டாகப் போகிறது.

தமிழ் நாட்டுக் கோயில்களும் கோபுரங்களும் உலகப் பரப்பில் எப்படி ஒப்பற்ற விதமாய் தலை நிமிர்ந்து நிற்கின்றனவோ அப்படியே தமிழ்நாட்டுச் சங்கீதம் தலை நிமிர்ந்து நிற்கப் போகிறது. நாம் பார்க்கப்போகிறோம். உலகம் பாராட்டப் போகிறது.

வழக்குச் சொற்கள்

"சுகி"

வழக்குச் சொற்கள் என்பது, வழக்காட உபயோகிக்கும் தாவா, மனு, பிரதிவாதி, வாதி, தாக்கல், படி, இவையல்ல. என்னதான் கரணம் அடித்தாலும், அப்பீல் செய்தாலும் இவை வழக்குச் சொற்கள் ஆகா.

வழக்குச் சொற்களை, 'வெளுத்து வாங்கி' 'கொடி கட்டிப் பறக்க விட்டு' முடி சூடா மன்னனாகத் திகழ 'மனப்பால்' குடித்தேன். 'கசகர்ணம்' போட்டும் பலன் எட்டுச் சுரைக்காயாக இருக்கிறது. நானும் 'திருகத்திருக' விழித்து 'நடுச் சந்தியில்' நிற்கிறேன்.

ஏதோ 'சரிக்கட்ட' 'நுனிப் புல் மேய்ந்து' கதை பண்ணுவோம் என்றால், அது 'சரடு திரிப்பதா'கப் படுவதோடு, 'உங்களுக்கு நாமம் சாத்தின'தாகும்.

தலை மேற்கொண்டதை, 'விழி பிதுங்க' யோசித்தும் 'காது குத்த' முடியவில்லை. தலை கீழாக நின்றாலும் விஷயத்துக்குத் 'தலை முழுக்குப்' போட முடியாது. நான் மெதுவாக 'கையைக் கழுவி' விட்டால், பிறகு என் பெயர் 'தலையெடுக்காது' 'உதவாக் கட்டை' என்று யாராவது 'இளிச்சவாய்ப்' பட்டம் கொடுத்தால், முகத்தில் ஈயாடாமல் உம் கொட்டுவதைத் தவிர வேறு கதியில்லை.

நான் இரண்டு நினைக்காமல் இருந்தும், என் நிலைமை 'இரண்டும் கெட்டானாக' இருக்கிறது.

ஆகவே, கண்ணில் எண்ணெய் விட்டுக் கொண்டு, மெய் மறந்து வழக்குச் சொற்களைக் கரைத்துக் குடிக்க நினைத்தேன். ஆரம்பத்தில் 'குரங்குப் பிடி'யாக இருந்த மனசு இடங்கேடாக இழுக்கடித்து என் உத்சாகத்திற்கு 'இடக்கு முடக்கு'க் கொடுத்து மட்டந் தட்டியது.

'ஆற அமர' என் வயிற்றில் 'புளி கரைக்க' ஆரம்பிக்கவே விஷயத்தைக் கொஞ்சம் 'பழுக்கப் போடு'வோம், அப்புறம் 'கண்ணெடுத்துப் பார்க்கும்;' 'கை கொடுக்கும்;' நாம் 'கரை யேறலாம்.' இல்லையோ நமக்குக் 'கடுக்காய் கொடுத்து' விடுமென நினைத்து 'ஆறப் போடப்' போன சமயம்.

நண்பன் வந்தான். எனக்கு 'மூக்கில் வேர்த்தது.' வரும் போதே, "என்ன நடக்கிறது?" என்றான்,

"வழக்குச் சொல் ஆராய்ச்சி"

"அதென்ன 'பொடி வைத்து'ப் பேசுகிறாய்?"

"இல்லையே. விளக்கிச் சொல்லுகிறேன். 'வாலை அறுத்தல்' மனிதனுக்குச் சொல்லப் படுவது. மிருகத்திற்கு அல்ல. 'நரி குளிப் பாட்டுதல்' என்ற சொல், நரியைக் குளிப்பாட்டுதல் என்றாகாது. அது மனிதனைத் தன்னுளாக, கைக்குள் போடுவது.

"காக்காய் பிடித்தலுக்குத் தாயாதி; குல்லாய்ப் போடுதலுக்குப் பந்து; குழையடித்தலுக்கு நெருங்கிய சிநேகிதன்"

"இப்படிப் பட்ட சொற்களைத்தான் ஆராய்ச்சி செய்

கிறேன். ஒவ்வொரு மொழியிலும் இப்படிப் பட்ட வழக்குச் சொற்கள் உண்டு. இதன் பொருள் பாஷையோடு ஒட்டிப் பழகினால் தான் தெரியும்."

" ஒத்துப் பாடுகிறேன்."

'உதவாக்கட்டை' என்பது ஒரு மரத்தின் கட்டையென அந்நியன்-தமிழின் வழக்குத் தெரியாதவன் நினைப்பான். ஒரு சமயம் நான் ஆங்கிலம் படித்தபோது இந்த மாதிரி பொருள் தெரியாமல் இருந்திருக்கிறேன். கதை முடிவில் 'கிக்கிட் தி பக்கட்' என்று போட்டிருந்தது."

"வாளியை உதைத் தானுக்கும்."

"அதுதான் இல்லே. அந்த ஆள் 'கயா' ஆகி விட்டான்."

"பரலோக யாத்திரையா? அந்த 'கிக்டு தி பக்கட்' வழக்குச் சொல்லிற்குப் பொருள் தெரியா விட்டால் அனர்த்தந்தான்.

"தமிழைப் புதிதாகக் கற்றவன் பாடு வேடிக்கை தான்."

"நாம் 'விளக்கை உயர்த்து' என்று சொல்லுகிறோம்.

"பொருள் தெரியாதவன் தூண்டுவான்! தெரிந்தவன் அணைப்பான்."

"வழக்குச் சொற்களில் மங்கள வழக்கு, குழூக்குறி, தகுதி வழக்கு இப்படிப்படும்."

"அப்பா தலே சுற்றுகிறதே"

"பேஷ் நல்லபடியாக தகுதி வழக்கிற்கு இலக்கணம் சொன்னாய். நீ, 'உன் பேச்சு எனக்குப் பிடிக்கவில்லே; நிறுத்து' என்பதை தலே சுற்றுகிறதே என்ற தகுதி வழக்கால் பிரயோகம் செய்தாய்."

"அப்பனே உன்னுடைய டக்டரடக்கலே நிறுத்து."

"இடக்கரடக்கல் என்பது, சொல்லத் தகாத அசங்கியத்தை நாலு பேர் முன் சொல்லுகிறது. வாய் கழுவி என்பது அசங்கியம்."

"அதனால் தான் வாய்ப்பூசி வருகிறேன் என்கிறோமா? நம் பேச்சு குழூஉக்குறியாக இருக்கப் போகிறது."

"குழூஉக்குறி என்பது தொழிலாளர் கையாளும் பரி பாஷை. குணவெள்ளே என்றால் மூன்று ரூபாய்; காலேக் கொம்பு என்றால் இரண்டு ரூபாய்; இது தரகர் பாஷை. சரி, சங்கீதத்துக்குள் நுழைந்தால்"

—என்ன சேட்டோ? ½ ரூபாய் உங்களுக்கும் நாலு அவதாரம் வயிலினுக்கும் 6 கண்டம் மிருதங்கத்திற்கும் இருக்குமா?

–பல்லவியை அப்படிச் சொன்னீர்கள்—

–மேல் எடுப்பு என்ன?—

–செலவு போக எனக்கு ½ ரூபாய்க்கு அவதாரம் குறைச்சல்–

வயிலினுக்கு ¾ ரூபாயும் 2 திச்சமும்; மிருதங்காரருக்கு மேளகர்த்தா—

"இதில் என்ன புரிகிறது?"

"கண்ணேக் கட்டி காட்டில் விட்டது போல் இருக்கிறது."

"ஒரு ரூபாய் நூறு; அவதாரம் பத்து; கண்டம் 5; திச்சம் 3; மேளகர்த்தா 72... கணக்கைப் போட்டுக் கொள்வாய். பாட்டுக்கு 140ரூ; வயலின் 81 ரூ......"

"சரி, வழக்குச்சொற்களின் அர்த்த பாவம் புரியாதவன் திணற வேண்டியது தானே?"

"அந்த வேடிக்கையும் பாரேன்–

—தங்கவேல் ஆசாரி சும்மா காது குத்துகிறான்.

—அவர் விலாசம் என்ன?

—இந்த இடம் தான் உள்ளே போங்கள்—

ஆசாமி உள்ளே போகிறான்.

—வரணும் வரணும் — என்ன வேணும்?

—நீர் சும்மா காது குத்துவீரா?

—ஐயைய்யோ... அட போமையா போம். அந்த அயோக்கியன் சொன்னதை நம்பி வந்தீரே—

வெளியே வந்த ஆசாமி,

—ஏனய்யா, அவன் காது குத்தவில்லை?

—இந்த ஆசாரியும், குல்லாப் போடும் ஜவுளிக் கடைக்காரனும் சரி—

—இந்த சவுளிக் கடைதானே—

கடை முதலாளியைப் பார்த்தான் ஆசாமி.

—குல்லாய்ப் போடுங்கள்—

குல்லாய் போடறதா? பெரிய தலைப்பாமாறி யென்று நினைச்சாயா?—

—தலைப்பாகை, குல்லாய் இரண்டும் என்னிடம் இல்லை—

கூழைக் கும்பிடு போடாதையா. நட வெளியில்—

"எப்படிக் கதை?"

"பேஷ்! பேஷ்!"

"பார். வழக்குச் சொல், பாஷைக்கு எவ்வளவு வசமாக இருக்கிறது என்று. என் நண்பர் ராமசாமி ஐயர் தூண்டில் போட்டார்; பலன் இல்லை. பிறகு வலை வீசினார்."

"அய்யர், தூண்டிலாவது வலையாவது, வீசுகிறதாவது."

"வரன் பிடிக்க தூண்டில்ப் போட்டார்; வலை வீசினார். கொழுத்த மீன் அகப்பட்டது. அது பசியாமல் சாப்பிடும் இடம்."

"பசியாமல் சாப்பிடுகிறது கெடுதல் ஆயிற்றே!"

"இல்லையடா... பசியாமல் சாப்பிடுகிறது என்றால் பணக்கார இடம். உடனே உச்சி குளிர்ந்தது."

"ஜன்னி பிடிக்க வில்லையே!"

"ஆனால் பெண் விட்டார், உமக்கோ சிங்கியடிக்கும் பிழைப்பு. ஆகவே, உம் பாச்சா பலிக்காது. அந்தப் பருப்பு இங்கே வேகாது என்றார்கள்."

"ராமசாமி அய்யர் ஏழையாக்கும்."

"ஆம், இப்படிப் பெண் வீட்டார், எதிர் பாராமல் நட்டாற்றில் கைவிடவே, நடுத்தெருவில் வந்து என் நண்பர் நின்றார். கொஞ்ச நாளாக, பெரிய இடம் பார்க்கப் போவதாக கங்கணம் கட்டிக் கொண்டு, எடுப்பார் கைப் பிள்ளையாகத் தயாராக இருக்கிறார்!"

"கதை இருக்கட்டும். வழக்குச் சொல்......"

"வழக்குச் சொற்கள் பாஷையின் சொல்ச் செட்டும், கம்பீரமும் ஹாஸ்ய ரசமும் சேர்ந்த ரத்னங்கள். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் கலங்கரை விளக்கம். பாஷைக்கு ஊனும் உயிரும் போல இருக்கிறது. அதன் ஜீவனை, பாஷா ஞானம் உள்ளவர்கள் உபயோகித்தால் இந்திர மந்திர மகேந்திர ஜாலங்கள் செய்யும்."

"தவறாக உபயோகித்தால்?"

"பாஷையையும் உபயோகித்தவனையும் பொங்கல் செய்து விடும்"

"பேச்சில் கொஞ்சம் புளிப்புத் தட்டுகிறது. நமஸ்காரம்."

நான் வெளுத்து வாங்கலாம் என நினைத்தது போக விஷய ஆராய்ச்சி கல்லில் நார் உரிக்கிற கதையாக முடிந்ததே. நண்பர்கள் சிரிப்பாய்ச் சிரிக்கு முன் நான் மூட்டை கட்டுகிறேன்.

சிலப்பதிகாரம்

சர் ஆர். கே. சண்முகம் செட்டியார்

அந்திமாலைச் சிறப்புச்செய் காதை

(1—20) உலகத்தில் சூரிய வெப்பம் இல்லாவிட்டால், எந்த உயிரும் வாழ முடியாதென்பது, அறிவு நூல்களை ஆராய்ச்சி செய்தவர்கள் கண்ட முடிவு. சூரியன், இல்லா விட்டால் உலகில் எந்தக் காரியமும் நடைபெறாது. பொதுவாகவே உலக மக்களுக்குச் சூரியனைப் போல் பெண்களுக்கு அவருடைய கணவர்; குடிகளுக்கோ நாட்டு மன்னன். சூரியன் மறையும் பொழுது நிலமகள், தன் கணவனைப் பிரிந்த ஒரு பெண்ணைப் போலத் துயரத்தில் ஆழ்ந்து, கணவன் பிரிந்து விட்டாலும், தன் அருமைப் புதல்வனான இளம் பிறை இன்னும் வரவில்லையே என்று புலம்புகிறாள்.

இது வரை நிலமகளை ஒரு பெண்ணாகக் கருதி வந்ததை விட்டு, வெறும் நிலம் என்று வைத்துக் கொண்டு பார்க்கும் போது, சூரியன் மறைந்த காலமானது, அரசன் இல்லாத நாடு போல் தோன்றுகிறது. அரசனில்லாத நாடு என்று மட்டுமல்ல; அரசனிருந்தும் இல்லாதது போல் உள்ள நாடு. ஏனென்றால், தன் குடிகளைக் காப்பாற்ற அந்த அரசனிடம் சரியான படைகள் இல்லை. ஒழுங்காக வரி செலுத்தும் குடிகளை அவ்வரசன் காப்பதுமில்லை. வரி செலுத்தாமல் சூழ்ச்சிகள் செய்யும் குடிகளை அவன் தண்டிப்பதுமில்லை. இவ்விதம் நிலைகெட்ட ஒரு நாட்டில் எங்கு பார்த்தாலும் குழப்பம். அடுத்த நாட்டிலுள்ள மன்னன், வெகு நாளாக இந்த நாட்டின் மேல் கண் வைத்துக் கொண்டிருக்கிறான். குழப்பம் ஏற்படவே, இந்தப் பகையரசனுக்கு நல்ல சந்தர்ப்பமும் வாய்த்து விடுகிறது: சூழ்ச்சி செய்யும் மக்களைத் துணையாகக் கொண்டு, வெகு எளிதில், நாட்டைக் கைப்பற்றுகிறான். உலகத்திற்கு அரசன் போல் விளங்கிய சூரியன் மறைந்து, உலகம் மயங்கியிருக்கும் பொழுது, பகையரசனைப் போல், மாலைப் பொழுது எங்கும் சூழ்ந்து விடுகிறது.

மாலைப் பொழுது வந்த காலத்தில், அரசனுக்கு வரியைச் செலுத்தியும் வருத்தத் தோடிருக்கும் குடிகளைப் போல், கணவர் இருந்தும், அவரைப் பிரிந்த பெண்கள், துயரத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். கண்ணகி இந்நிலைமையி லிருக்கிறாள். வரி செலுத்தாத குடிகளைப் போல்,

தங்கள் காதலரைக் கூடிய பெண்கள் களிப்படைந் திருக்கிறார்கள். இது மாதவியின் நிலை.

இது ஒருபுறமிருக்க, மாலைப் பொழுதில் ஆடு மாடுகளைத் தம் வீட்டிற்கு ஓட்டிக் கொண்டு போகும் இடையர்கள் குழலில் அருமையான இசையைப் பொழிகிறார்கள். பெண்களின் கூந்தலில் உள்ள முல்லைப் பூக்களில் வண்டுகள் வாய்வைத்து ஊதுகின்றன.

பூக்களில் படிந்திருக்கும் வண்டுகளை ஓட்டி, அரும்புகளில் நிறைந்த நறுமணத்தை வீசித் தென்றல் அசைந்து கொண்டிருக்கிறது. இருளைப் போக்க வளை குலுங்கும் அழகிகள் வீடுகளில் அழகான விளக்குகள் ஏற்றுகிறார்கள்.

மாலைப் பொழுது தோன்றுவது

விரிகதிர் பரப்பி உலகமுழுது ஆண்ட,
ஒரு தனித் திகிரி உரவோன் காணேன் ;
அங்கண் வானத்து அணிநிலா விரிக்கும்,
திங்களம் செல்வன் யாண்டு உளன் கொல்? எனத்,
திசைமுகம் பசந்து, செம்மலர்க் கண்கள்
முழுநீர் வார, முழுமெயும் பனித்துத்,
திரைநீர் ஆடை இருநில மடந்தை
அரைசுகெடுத்து அலம் வரும் அல்லற்காலைக் ;
கறைகெழு குடிகள் கைதலை வைப்ப,
அறைபோகு குடிகளொடு ஒரு திறம் பற்றி,
வலம்படு தானை மன்னர் இல்வழிப்,
புலம்பட இறுத்த விருந்தின் மன்னரின்,
தாழ்துணை துறந்தோர் தனித்துயர் எய்தக்,
காதலர்ப் புணர்ந்தோர் களிமகிழ்வு எய்தக்,
குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு,
மழலைத் தும்பி வாய்வைத்து ஊத ;
அறுகாற் குறும்பு எறிந்து, அரும்பு பொதி வாசம்
சிறுகாற் செல்வன் மறுகில் தூற்ற ;
எல்வளை மகளிர் மணி விளக்கு எடுப்ப,
மல்லல் மூதூர் மாலைவந்து இறுத்தென ;

பதவுரை

[விரிகதிர் பரப்பி — விரிந்த ஒளிக்கதிர்களைப் பரப்பி; உலகமுழுது ஆண்ட — உலகம் முழுவதையும் ஆண்ட: ஒரு தனித்திகிரி — ஒப்பில்லாத ஒரே சக்கரத்தையுடைய; உரவோன் — அழிவில்லாதவனாகிய சூரியனை; காணேன் — நான் காண முடியவில்லை; அம் கண் வானத்து — அழகிய இடத்தையுடைய வானத்தில்; அணி நிலா விரிக்கும் — அழகிய நிலாவொளியைப் பரப்புகின்ற; திங்கள் அம் செல்வன் — சந்திரனாகிய அழகிய செல்வன்; யாண்டு உளன்கொல் என — எங்கே இருக்கிறானோ என்று; திசை முகம் பசந்து — தன் முகங்களாகிய நான்கு திசைகளும் பசலை பூத்து; முழுநீர் வார — கண்ணில் நீர் ததும்ப; முழுமெயும் பனித்து — தன் உடலெல்லாம் நடுங்கி; திரை நீர் ஆடை இருநில மடந்தை — அலைகள் மோதும் கடல் நீரை ஆடையாகக்

கொண்ட பெரிய நிலமகளானவள்; அரைசு கெடுத்து அலம் வரும் — அரசன் இல்லாமல் நெஞ்சு கலங்குகின்ற; அல்லற்காலை — துன்ப காலத்தில்;

கறைகெழு குடிகள் கை தலைவைப்ப — அரசனுக்குச் செலுத்தும் வரியைச் செலுத்திய குடிகள்; கையைத் தலையில் வைத்து வருந்தும் படி; அறை போகு குடிகளோடு — வரி செலுத்தாது சூழ்ச்சி செய்யும் குடிமக்களை; ஒரு திறம் பற்றி — ஒரு பெருந்துணையாகக் கொண்டு; வலம்படு தானை மன்னர் இல்வழி — வெற்றி கொள்ளும் படையினை யுடைய வேந்தர் இல்லாத நாட்டில்; புலம்பட இறுத்த — அந்நாடு அழியும் படியாக அங்குச் சென்று படையுடன் தங்கிய; விருந்தின் மன்னரின் — புதிய பகை மன்னர்களைப் போல; தாழ் துணை துறந்தோர் தனித் துயர் எய்த — உள்ளத்தில் ஆழ்ந்த துணைவரைப் பிரிந்த மகளிர் ஒப்பற்ற துயரத்தை அடையவும்; காதலர்ப் புணர்ந்தோர் — காதலரைக் கூடிய மகளிர்; களி மகிழ்வு எய்த — களிப்பினலே நிறைந்த மகிழ்ச்சியை அடையவும்; குழல் வளர் முல்லையில் — புல்லாங் குழலில் வளர்கின்ற முல்லை என்று சொல்லப்படும் இசையையும்; மகளிர் கூந்தலில் விளங்கும் முல்லைப் பூவையும்; கோவலர் தம்மொடு மழலைத் தும்பி வாய் வைத்து ஊத — முறையே இடையர்களும், வண்டு களும் தம் வாயிலே வைத்து ஊதவும்! அறுகால் குறும்பு எறிந்து — ஆறுகால்களையுடைய வண்டின் கூட்டத்தை யோட்டி; அரும்பு பொதி வாசம் — அரும்புகளில் நிறைந்த நறுமணத்தை; சிறுகால் செல்வன் — மெல்லிய தென்றற் காற்ருகிய செல்வன்; மறுகில் தூற்ற — தெருவெல்லாம் வீசவும்; எல்வளை மகளிர் மணி விளக்கு எடுப்ப — ஒளி வீசும் வளையில் அணிந்த மகளிர் அழகிய விளக்குகளை ஏற்றவும்; மல்லல் மூதூர் மாலை வந்து இருத்தென — வளப்பம் மிக்க பழைய நகரத்திலே மாலைப் பொழுது வந்து தங்கிற்று என்று;]

★

(21—34) பகையரசனைப் போல் வந்து தங்கிய மாலைப் பொழுதை வெருட்டி ஓட்டு வதற்கு வெள்ளிய இளநிலா வானத்தில் தோன்று கிறது. சந்திர குலத்தைச் சேர்ந்த பாண்டியர்களின் குலத்திற்கு முதல்வனை படியால், இளம்பருவமுள்ள நிலாவுக்குப் பகையரசர்களை வெருட்டி யடிக்கும் சக்தி இருக்கிறது. மாலைப் பொழுது ஓடியவுடன் பால் போன்ற வெள்ளிய நிலாவின் கதிர்கள் எங்கும் பரவி ஒளி வீசு கிறது. நிலா வெளிச்சத்தில் மாதவியும், கோவலனும் நிலா முற்றத்தை அடைகிருர்கள். அவ்விடத்தில் முல்லை மல்லிகை முதலிய பூக்களால் பரப்பப்பட்ட படுக்கையின் மேல், இருவரும் காதலின்பத்தில் மூழ்கி இருக்கிருர்கள். ஆசை நிறைந்த நெஞ்சோடு தன் காதலனைத் தழுவிய தால், கலைந்த அழகைத் திருத்திக் கொண்டு, மாதவி கோவலனுக்கு பின்னும் இன்பத்தை ஊட்டுகிருள்.

மாதவி கோவலனுடன் இன்புற்றிருப்பது

21 இளைய ராயினும், பகை அரசு கடியும்
செருமாண் தென்னர் குலமுதல் ஆகலின்,

அந்தி வானத்தின் வெண்பிறை தோன்றிப்,
புன்கண் மாலைக் குறும்பு எறிந்து ஓட்டிப்,
பான்மையில் திரியாது பால்கதிர் பரப்பி,
மீனரசு ஆண்ட வெள்ளி விளக்கத்து
இல்வளர் முல்லையொடு மல்லிகை அவிழ்ந்த
பல்பூம் சேக்கைப் பள்ளியுட் பொலிந்து,
செந்துகிர்க் கோவை சென்று ஏந்து அல்குல்
அந்துகில் மேகலை அசைந்தன வருந்த,
நிலவுப் பயன் கொள்ளும் நெடுநிலா முற்றத்துக்
கலவியும் புலவியும் காதலற்கு அளித்து, ஆங்கு —
ஆர்வ நெஞ்சமொடு கோவலற்கு எதிரிக்,
கோலங் கொண்ட மாதவி அன்றியும்;

பதவுரை

[இளையராயினும் — தாம் வயதில் சிறியவராயினும்; பகை அரசு கடியும் — பகை அரசர்களை வெருட்டி யடிக்கும்; செருமாண் தென்னர் — போரில் வல்லவராகிய பாண்டியர்களின்; குல முதல் ஆகலின் — குலத்திற்கு முதல்வன் ஆதலால்; அந்தி வானத்தின் வெண் பிறை தோன்றி — சிவந்த அந்தி வானத்திலே வெள்ளிய இளநிலா தோன்றி; புன்கண் மாலைக் குறும்பு எறிந்து ஓட்டி — கணவரைப் பிரிந்தோர்க்கு வருத்தந் தரும் மாலைக் காலமாகிய குறு நில மன்னனை வென்று வெருட்டி; பான்மையின் திரியாது — அரசியல் முறைமை தவறாமல்; பால் கதிர் பரப்பி — புகழாகிய பால் போன்ற வெள்ளிய கதிர்களைப் பரப்பி;

மீனரசு ஆண்ட — நிலா வொளி ஆட்சி செய்த; வெள்ளி விளக்கத்து — வெள்ளை நிறமான வெளிச்சத்தில்; இல் வளர் முல்லையொடு — வீட்டில் வளர்கின்ற முல்லைப் பூக்களும்; மல்லிகை — மல்லிகைப் பூக்களும்; பல் பூ — மற்றைப் பல பூக்களும்; அவிழ்ந்த — நன்கு மலர்ந்து அவிழ்த்து விடப்பட்ட; சேக்கைப் பள்ளியுள் — படுக்கையின் மேல்; பொலிந்து — அழகு பெற்று! செந்துகிர்க் கோவை — சிவந்த பவளத்தால் கோக்கப் பட்ட மேகலை என்னும் ஆபரணம்; சென்று ஏந்து அல்குல் — அகன்று உயர்ந்த இடையை; அசைந்தன வருந்த — அசைந்து அசைந்து வருத்த; நிலவுப் பயன் கொள்ளும் — நிலா வொளியின் இன்பத்தை அனுபவிக்கக் கூடிய; நெடு நிலா முற்றத்து — உயர்ந்த நிலா முற்றத்தில்; கலவியும் புலவியும் — கூடலும் ஊடலும்; காதலற்கு அளித்து — தன் காதலனாகிய கோவலனுக்குத் தந்து; ஆங்கு —; ஆர்வ நெஞ்சமொடு — ஆசை நிறைந்த நெஞ்சத்தோடு; கோவலற்கு எதிரி — கோவலனுக்கு எதிரேற்று அணைந்து; கோலங் கொண்ட — அணைந்ததால் கலைந்த அழகைத் திருத்திக் கொண்ட; மாதவி அன்றியும் — மாதவி மட்டுமல்லாமல்;]

★

(35—46) குளிர் காலமாயிருந்தால், பெண்கள் கூந்தலுக்குக் கற்கண்டும், அகிற் கட்டையும் சேர்த்து எரிக்கப் பட்ட வாசனைப் புகையைப் போடுவது வழக்கம். நூலில் சொல்லப்பட்ட நிகழ்ச்சி நடக்கும்

காலம் கோடைகாலம். ஆகையால் இவ்விதப் புகைக்கு அவசியம் ஏற்படவில்லை. கோடைகாலத்திற்கு ஏற்ற வண்ணம் நல்ல சந்தனத்தை அணிந்து கொள்ளுகிறார்கள். இமைய மலையில் உண்டான சந்தனக் கல்லில், பொதிய மலையில் விளைந்த சந்தனக்கட்டையால் அரைக்கப் பட்ட சந்தனம் இது. காதலர் வீற்றிருக்கும் மெத்தையின் மேல், தாமரைத் தளிர்களும், குவளை மலரும், செங்கழு நீர்ப் பூவும், பச்சிலைகளும் ஆகிய இவைகளால் தொடுக்கப்பட்ட மாலைகளும், முத்துமாலைகளும் வாசனைப் பொடிகளும் சிந்திக் கலந்து கிடக்கின்றன. தென்றற் காற்று வீசுகின்றது. காதலர் இன்பத்தில் மூழ்கியிருக்கிறார்கள். காதலி, தன் காதலன் மார்பில் ஒன்றி இன்பக் களிப்பான துயிலில் இருக்கிறாள். மாதவியைப் போலத் தம் காதலருடன் கூடியிருக்கும் பெண்களின் இன்ப நிலை இப்படி உல்லாசத்திலிருக்கிறது.

மாதவிய்யைப் போல் தம் காதலரைக் கூடிய மகளிரின் நிலை

குடதிசை மருங்கின் வெள் அயிர் தன்னொடு,
குணதிசை மருங்கில் கார்அகில் துறந்து,
வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத்
தென்மலைப் பிறந்த சந்தனம் மறுகத்;
தாமரைக் கொழு முறித் தாதுபடு செழுமலர்க்,
காமரு குவளைக் கழுநீர் மாமலர்ப்,
பைந்தளிர்ப் படலை, பரூஉக்காழ் ஆரம்,
சுந்தரச் சுண்ணத் துகளொடும் அளைஇச்,
சிந்துபு பரிந்த செழும்பூஞ் சேக்கை
மந்த மாருதத்து மயங்கினர் மலிந்து; ஆங்கு,
ஆவியங் கொழுநர் அகலத்து ஒடுங்கிக்,
காவிஅம் கண்ணார் களித்துயில் எய்த;

பதவுரை

குடதிசை மருங்கின் — மேற்குத் திசையில் உண்டான; வெள் அயிர் தன்னொடு — வெள்ளை நிறமுடைய கற்கண்டுடன்; குண திசை மருங்கில் கார் அகில் துறந்து — கீழ்த் திசையில் விளைந்த கரிய அகிற் கட்டையின் புகையை ஊட்டும் அவசியமில்லாமல்;

வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்து — வட திசையிலுள்ள இமயமலையில் உண்டான மிகுந்த ஒளியை யுடைய சந்தனக்கல்லில்; தென்மலைப் பிறந்த சந்தன மறுக — தென் திசையிலுள்ள பொதிய மலையில் உண்டான சந்தனக் கட்டையானது நன்கு அரைபட;

தாமரைக் கொழு முறி — தாமரையின் கொழுமையான தளிர்களையும்; தாதுபடு செழுமலர் — மகரந்தப் பொடி நிறைந்த செழுமையான மலர்களையும்; காமரு குவளை — அழகிய குவளை மலரையும்; கழுநீர் மாமலர் — செங்கழுநீர்ப் பூவினையும்; பைந் தளிர்ப் படலை — பசிய தளிர்களோடு தொடுக்கப் பட்ட பச்சிலை மாலையுடன்; பரூஉக் காழ் ஆரம் — பெரிய முத்து மாலையும்; சுந்தரச் சுண்ணந் துகளொடும் — அழகிய வாசனைப் பொடிகளுடன் அளைஇ — கலந்து; சிந்துபு பரிந்த —சிந்திச் சிதறிய; செழும் பூஞ் சேக்கை — செழுமையான பூக்கள்

பரப்பின படுக்கையில்; மந்த மாருதத்து — தென்றற் காற்றால்; மயங்கினர் மலிந்து — கூடித் தெளிந்து மீண்டும் காதற் களிப்பிலே மயங்கி; ஆவி அம் கொழுநர் அகலத்து ஒடுங்கி — தம் உயிர் போன்ற காதலர் மார்பில் ஒன்றி; காவி அம் கண்ணார் களித்துயில் எய்த — நீலப் பூப் போன்ற அழகிய கண்களையுடைய மகளிர் இன்பத்துயிலிலே மயங்கிக் கிடக்க;]

★

(47—57) மாதவி கோவலனுடன் கூடி, மகிழ்ந் திருக்கிறாள். பத்தினியாகிய கண்ணகியின் நிலைமை எப்படி இருக்கிறது என்பதைப் பார்ப்போம். கண்ணகி ஆறாத துன்பத்தில் மூழ்கி இருக்கிறாள். கணவனைப் பிரிந்த பத்தினிக்கு ஆடை, ஆபரணம், அழகு — இவையெல்லாம் எதற்காக? காலில் அணிந்திருந்த சிலம்பை கழற்றி எறிந்தாள். இடையில் மேகலாபரணம் இல்லை. மார்பில் குங்குமத்தாலும் சந்தனத்தாலும் தொய்யில் எழுதவில்லை. எல்லா ஆபரணங்களையும் களைந்தெறிந்து விட்டாலும் கணவன் கட்டிய தாலியை எடுக்க முடியுமா? கயிற்றில் கோத்த தாலி மட்டுந்தான், அவளுடைய ஆபரணமாயிருந்தது. காதிலுங்கூட குழை இல்லை. மனக் கலக்கத்தால், முகத்தில், சிறிய வியர்வைத் துளிகள் உண்டாகின்றன. கண்ணிலோ அஞ்சனமில்லை. நெற்றியிலோ திலகமில்லை. கூந்தலில் வாசனைத் தைலங்களும் இல்லை. கணவனைக் காணாத வருத்தத்தால், முகமலர்ச்சியும் புன்சிரிப்பும் இல்லவே இல்லை. இவ்விதமாக, உடல் அழகு மங்கி, மனம் செயலற்று செய்வதறியாது சோர்ந்திருக்கிறாள் கண்ணகி.

கணவனைப் பிரிந்த கண்ணகியின் துயரம்

அம்செம் சீறடி அணிசிலம் பொழிய,
மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்,
கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்;
மங்கல அணியின் பிறிது அணி மகிழாள்;
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்;
திங்கள் வாண்முகம் சிறுவியர் பிரியச்,
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்,
பவள வாள்நுதல் திலகம் இழப்பத்,
தவள வாள்நகை கோவலன் இழப்ப,
மை இரும் கூந்தல் நெய் அணி மறப்பக்,
கையறு நெஞ்சத்துக் கண்ணகி அன்றியும்;

பதவுரை

[அம் செம் சீறடி — அழகிய சிவந்த சிறிய அடிகளில்; அணி சிலம்பு — அணிகின்ற சிலம்பு; ஒழிய — ஒழிந்து போக; மென் துகில் அல்குல் — மெல்லிய ஆடை யுடைய இடையில்; மேகலை நீங்க — மேகலை என்னும் அணி நீங்க; கொங்கை முன்றில் — தன் கொங்கைப் பரப்பில்; குங்குமம் எழுதாள் — குங்குமம் பூசாதவளாய்; மங்கல அணியின் — மங்கலநாணாகிய தாலியைத் தவிர; பிறிது அணி மகிழாள் — வேறோர் அணியை அணிந்து மகிழாதவளாகி; கொடுங்குழை துற

ந்து — வளைந்த குழை என்னும் காதணியை நீக்கி; வடிந்து வீழ் காதினள் — துவண்டு விழுகின்ற காதையுடையவளாகி; திங்கள் வாள் முகம் சிறுவியர் பிரிய—நிலாப் போல ஒளி விளங்கும் அழகிய முகத்தில், கூடலில் உண்டாகும் சிறிய வியர்வைகள் தோன்றாமல்; செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப — சிவந்த கயல் மீன் போன்ற நீண்ட கண்களை மை மறந்து விட, (அதாவது விழிகளில் மை தீட்டாமல்) பவள வாள் நுதல் திலகம் இழப்ப — பவளம் போல் ஒளி வீசும் நெற்றியைப் பொட்டு இழந்து விட; தவள வாள்நகை கோவலன் இழப்ப — முத்தைப் போன்ற ஒளியுடைய புன்சிரிப்பு கோவலனை இழந்துவிட; மை இரும் கூந்தல் நெய் அணி மறப்ப — மேகம் போலக் கருத்த கூந்தல் வாசனைத் தைலங்கள் பூசுவதை மறந்துவிட; கையறு நெஞ்சத்துக் கண்ணகி அன்றியும் — செயலற்ற நெஞ்சையுடைய கண்ணகி அல்லாமலும்;]

★

(58—71) கண்ணகியைப் போல் கணவரைப் பிரிந்திருந்த மாதர், மிகுந்த வருத்தத்தில் மூழ்கியிருக்கிறார்கள். தம் கணவரை நினைக்கும் போதெல்லாம், உலைக்களத்திலுள்ள துருத்தியைப் போலப் பெருமூச்சு விட்டு, மேனி ஒடுங்குகிறார்கள். கோடைக் காலமாயிருந்த போதிலும், தென்றல் வீசும் நிலா முற்றத்திற்குப் போக மனமில்லை. ஏனென்றால், நிலாவின் பரந்த ஒளியைப் பார்க்கும் போது, அவர்களுக்குத் தம் கணவருடைய நினைவு அதிக மாகிறது. இருண்ட அறையில் போய் படுத்துக் கொள்ளுகிறார்கள். தம் கணவரை நினைவூட்டும் நிலா வெளிச்சமும், தென்றல் காற்றும் புகாமலிருக்கும்படி, அந்த அறையின் சாளரங்களையும் அடைத்து விடுகிறார்கள். மார்பில் அணிந்திருந்த முத்தாரங்களைக் கழற்றி எறிந்து விடுகிறார்கள். மார்பில் சந்தனமும் இல்லை. படுக்கையிலோ செங்கழுநீர்ப் பூக்களும், குவளைப் பூக்களும் இல்லை. தாம் படுத்திருந்த படுக்கை அன்னப் பறவையின் மெல்லிய சிறகினால் திணித்துச் செய்யப் பட்டிருந்த போதிலும், முன் தம் கணவருடன், கூடலும் ஊடலும் நடந்த பின், உண்டான களித்துயில் உண்டாக வில்லை. இப்பெண்கள் கலங்காத நெஞ்சம் உடையவராயினும், இப்போது விளைந்த துன்பம், அவர்களுடைய நெஞ்சத்தைக் கலக்கி விட்டது. அழுத கண்களும் சிவந்து விட்டன. இந்த நிலைமையில், தூக்கங் கொள்ளாமல், படுக்கையில் புரண்ட படியே எப்போது விடியுமோ என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

கண்ணகியைப் போல் கணவரைப் பிரிந்தவர் வருத்தம்

காதலர்ப் பிரிந்த மாதர் நோதக,
ஊதுலைக் குருகின் உயிர்த்தனர் ஒடுங்கி,
வேனிற் பள்ளி மேவாது கழிந்து,
கூதிர்ப் பள்ளிக் குறுங்கண் அடைத்து,
மலையத்து ஆரமும், மணிமுத்து ஆரமும்
அலர்முலை ஆகத்து அடையாது வருந்தத்;
தாழிக் குவளையொடு தாழ்செங் கழுநீர்
வீழ்பூஞ் சேக்கை மேவாது கழியத்;
துணைபுணர் அன்னத் தூவியிற் செறித்த

இணை அணை மேம்படத் திருந்து துயில் பெறா அது
68 உடைப் பெருங் கொழுநரோடு ஊடற்காலத்து
இடைக் குமிழ் எறிந்து கடைக்குழை ஓட்டிக்
கலங்கா உள்ளங் கலங்கக் கடைசிவந்து
விலங்கிநிமிர் நெடுங்கண் புலம்புமுத்து உறைப்ப ;

பதவுரை

[காதலர்ப் பிரிந்த மாதர் நோதக — தமது கணவர்களைப் பிரிந்த மகளிர் வருத்தம் மிகும்படி ; ஊது உலைக் குருகின் — ஊதப்படுகின்ற உலைக்களத்திலுள்ள துருத்தியைப் போல ; உயிர்த்தனர் ஒடுங்கி — பெருமூச்சு விட்டு ஒடுங்கி ; வேனிற் பள்ளி — இளவேனிற் காலத்தில் படுக்கின்ற நிலா முற்றத்தில் ; மேவாது கழிந்து — படுக்காமல் இருந்து; கூதிர்ப் பள்ளி — குளிர் காலத்தில் படுக்கின்ற நடுமாடியில் ; குறுங்கண் அடைத்து — சாளரங்களை அடைத்து ; மலையத்து ஆரமும் — பொதிய மலைச் சந்தனமும் ; மணி முத்து ஆரமும் — முத்து மணிகளால் கோக்கப் பட்ட மாலையும் ; அலர் முலை ஆகத்து — பரந்த கொங்கையினை யுடைய மார்பில் ; அடையாது வருந்த — பொருந்தாமல் வருந்த ; தாழிக் குவளையொடு — தாழியில் பூத்த குவளைப் பூவோடு ; தண் செங்கழுநீர் — குளித்து சிவந்த செங்கழு நீர்ப் பூக்களும் ; வீழ் பூஞ் சேக்கை — விரும்பப் படுகின்ற அழகிய படுக்கையில் ; மேவாது கழிய — பொருந்தாமல் கழிய (அதாவது அப் பூக்களைப் படுக்கையில் பரப்பி வைக்க வில்லை)

உடைப் பெருங் கொழுநரோடு — தம்முடைய பெருந் தன்மை யுள்ள கணவரோடு; ஊடற் காலத்து — முன் ஊடல் செய்த காலத்தில்; துணைபுணர் அன்னத் தூவியின் செறித்த — பெட்டை அன்னத்தைக் கூடுகின்ற அன்னப் பறவையின் சிறகைத் திணித்துச் செய்த ; இணை அணை மேம்பட — இரட்டையாகிய படுக்கை மேல், இன்ப முண்டாகும்படி; திருந்து துயில் — தூங்கும் அழகிய தூக்கத்தினை ; பெறாது — பெறாமல் ; இடைக் குமிழ் எறிந்து — இடையிலுள்ள குமிழை எறிந்து விட்டு ; கடைக் குழை ஓட்டி — கன்னத்தின் கடைப் பக்கமாக வுள்ள குழை என்ற காதணியை எறிந்து ; கலங்கா உள்ளம் கலங்க — எப்பொழுதும் கலங்காத நெஞ்சம் கலங்க ; கடை சிவந்து — கடைக் கண் சிவந்து ; விலங்கி நிமிர் நெடுங்கண் — குறுக்கு நெடுக்காக ஓடுகின்ற நீண்ட கண்கள் ; புலம்பு முத்து உறைப்ப — வருத்தத்தால் முத்து முத்தாகக் கண்ணீர் சிந்த ;

துணை — இரட்டை ; தூவி — சிறகு ; விலங்குதல் — குறுக்கிடுதல்; புலம்பு — தனிமையினால் வரும் வருத்தம். உறைத்தல் — நீர் துளித்தல்.]

★

(72—84) பொழுது விடியும் தோற்றத்தை இளங்கோவடிகள் வருணிக்கும் போது, புகார் நகரிலுள்ள குளத்தை ஒரு பெண்ணாக வைத்து வருணிக்கிறார். இந்தப் பெண், அன்னமாகிய மெல்லிய நடையையும் ஆம்பல் பூவின் நல்ல மணத்தையும், தாமரை யாகிய சிவந்த வாயையும், குளிர்ந்த கரு மணலாகிய கூந்தலையும் உடையவள் ; வண்டுகள் பாடிய இசையைக் கேட்டு, அவளுடைய கண்களாகிய குவளைப் பூக்

கள் மலர்கின்றன. பறவைகளின் முரசொலியும் கோழி கூவும் சங்கொலியும் ஊரைத் தூக்கத்தினின்றும் எழுப்பி விட்டன. சூரியன் மறைந்த காலம் முதல், பின்னும் தோன்றும் காலம் வரையில், தூங்காமல் இருக்கும் மன்மதன், கரும்பாகிய வில்லையும், மலராகிய அன்பையும் கையிலேந்திச் சிறப்பாக இரவு முழுதும் ஊர்க் காவல் செய்தான்.

பொழுது விடிவது

அன்ன மென்னடை நன்னீர்ப் பொய்கை,
ஆம்பல் நாறும் தேம்பொதி நறுவிரைத்,
தாமரைச் செவ்வாய்த், தண் அறல் கூந்தல்,
பாண்வாய் வண்டு நோதிறம் பாடக்,
காண்வரு குவளைக் கண்மலர் விழிப்பப்,
புள்வாய் முரசமொடு, பொறிமயிர் வாரணத்து
முள்வாய்ச் சங்கம் முறை முறை ஆர்ப்ப,
உரவு நீர்ப் பரப்பின் ஊர் துயில் எடுப்பி,
இரவுத் தலைப் பெயரும் வைகறை காறும்,
அரை இருள் யாமத்தும் பகலும் துஞ்சான்,
விரைமலர் வாளியொடு கரும்புவில் ஏந்தி,
மகர வெல் கொடி மைந்தன் திரிதர,
நகரங் காவல் நனி சிறந்தது என்.

பதவுரை

[அன்ன மென்னடை — அன்னமாகிய மெல்லிய நடையினையும்; ஆம்பல் நாறும் — ஆம்பற் பூவின் மணம் வீசுகின்ற; தேம் பொதி நறு விரை — தேன் நிறைந்த நல்ல மணத்தை யுடைய; தாமரைச் செவ்வாய் — தாமரையாகிய சிவந்த வாயினையும்; தண் அறல் கூந்தல் — குளிர்ந்த கருமணலாகிய கூந்தலையும் உடைய; நன் நீர்ப் பொய்கை — நல்ல நீரையுடைய பொய்கை என்னும் பெண்; பாண்வாய் வண்டு — பாடுகின்ற வாயினையுடைய வண்டுகள்; நோதிறம் பாட — வருத்தம் உண்டாக்கும் இசையைப் பாட; காண்வரு குவளை — அழகான குவளைப் பூக்களாகிய; கண்மலர் விழிப்ப — கண்ணாகிய மலர்கள் தூக்கத்தினின்றும் விழிக்க; புள்வாய் முரசமொடு — பறவைகளின் ஒலியாகிய முரசொலியுடன்; பொறி மயிர் வாரணத்து — புள்ளிகள் நிறைந்த ரோமமுடைய கோழிகளின்; முள்வாய்ச் சங்கம் — கூரிய வாயாகிய சங்குகள்; முறை முறை ஆர்ப்ப — விட்டு விட்டு முழங்கவும்; உரவு நீர்ப் பரப்பின் — வலிமையுடைய கடலைப் போலப் பரந்திருக்கின்ற; ஊர் துயில் எடுப்பி — ஊரைத் தூக்கத்தினின்றும் எழுப்பி; இரவுத் தலைப் பெயரும் வைகறைகாறும் — இராக்காலம் நீங்கிப் போகின்ற கடை சாமம் வரையில்; அரை இருள் யாமத்தும் — நல்ல இருளையுடைய நடுயாமத்திலும்; பகலும் — ஒரு சாமத்தின் பாதி நேரமாகிய மூன்றே முக்கால் நாழி கூட; துஞ்சான் — உறங்காதவனாகிய; மகர வெல் கொடி மைந்தன் — மீன் கொடியையுடைய மன்மதன்; விரை மலர் வாளியொடு — வாசமுள்ள மலராகிய அம்புடன்; கரும்பு வில் ஏந்தி — கரும்பாலாகிய வில்லையும் கையிலேந்தி; திரிதர — எங்கும் உலாவ; நகரங்காவல் — ஊர்க் காவலானது; நனி சிறந்தது — மிகச் சிறப்புடையதாயிருந்தது.]

[அந்திமாலைச் சிறப்புச்செய் காதை முற்றிற்று]

சொக்கியின் கதை

[பூவாளூர் சுந்தரராமன்]

அவள் உயிருடன் இருக்கும் பொழுது இந்த மலரை விரும்பினாள்; ஒரு மலர் மட்டுமல்ல; இந்த மலர்களால் தொடுக்கப்பட்ட ஒரு மாலையை — என்னால் எழுதப்பட்ட அவள் கதையை — பெறவேண்டுமென்று அவள் கொண்ட ஆசைக்குக் கணக்கு வழக்கில்லை; ஆனால், அவள் விரும்பிய பொழுது என்னால் தொடுக்க முடியவில்லை. உள்ளம் உற்சாகமாக இல்லை; எவ்வளவோ கட்டுப்பாடுகளுக்கு அடங்கி ஒடுங்கி இருந்தது. ஆனல் இன்று அவள் இவ்வுலகில் இல்லை! அவளுடைய பூதவுடல் நெருப்பில் இடப்பட்டு விட்டது. அவளுடைய ஆவி — அப்படி ஒன்று இருக்குமானல் — என்றும் இதை எதிர்பார்த்து அலையும் என்று என் மனம் அநேக முறை இடித்துக் காட்டிற்று. அதனல்தான் இதைத் தொடுக்க முற்பட்டேன். மாலை தொடுக்க வேண்டிய மலர்கள் மலர விருந்த கொடியே பட்டுப் போயிற்றே; ஆகையால் புதிய மலர் மாலை தொடுக்க முடியாது; அந்தக் கொடியில் இருந்து உதிர்ந்த இந்த சில உலர்ந்த மலர்களை — மறக்க வேண்டிய பழைய சம்பவங்களை மட்டும் — அந்த மானசீக ஆவிக்கு ஆரமாக அணிவிக்கிறேன்.

ஐந்து வருஷங்களுக்கு முன், பள்ளிப் படிப்பு முடிந்து நான் வேலைக்கு வேட்டையாடும் காலம். மத்திய மாகாணத்தில் உள்ள ஒரு சுதேச சமஸ்தானத்தில் காட்டிலாகாவில் ஒரு உத்தியோகம் கிடைத்தது. எனக்குக் காட்டையடுத்த மலையடிவாரத்தில் ஒரு ஜாகை. நானே சமைத்துச் சாப்பிட வேண்டும். பக்கத்தில் கூப்பிடு தூரத்தில் குறவர்கள் வசிக்கும் குடிசைகளின் கூட்டம்; இயற்கையின் பேரமைதி; கானகத்தின் இடைவிடாத கீதம். இதனிடையில் நாட்கள் கழிந்தன. துணைக்கும் இரவில் ஆட்களுக்குக் குறைவே கிடையாது.

அன்று ஆபீஸிலிருந்து வீட்டிற்கு வருவதற்குள் மழைபிடித்துக் கொண்டு விட்டது. அந்த மழையை நான் சிறிதும் எதிர் பார்க்கவில்லை. தாரை தாரையாகப் பொழியும் மழையில் தெப்பமாக நனைந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். வீட்டின் திண்ணையில் 'அவள்' நின்று கொண்டிருந்தாள். அவள் என்னைப் பார்த்ததும் சிரித்துக் கொண்டே 'என்ன, சாமி மழையிலே சிக்கிக் கொண்டீர்களா' என்று கேட்டாள். அவளுடைய பாஷை ஒரு தனி ரகம். இந்தி, மராட்டி எல்லாம் கலந்த ஒரு கதம்பம்.

'என்ன செய்வது? மழையை நான் எதிர்பார்க்கவேயில்லை' என்றேன். அவர்களோடு பழகியதிலிருந்து எனக்கும் அந்த 'பாஷை' யில் பேச முடிந்தது. அன்று தான் நான் முதல் முதலாக அவளைச் சந்தித்தது. அவள் அங்கே வசிக்கும் எந்தக் குறவனுடைய மகளோ என்று நினைத்தேன். காட்டு மலர் போல கள்ளங் கபடு இல்லாமல் நன்றாக வளர்ந்திருந்தாள். இயற்கையின் போக்கிலே அவளுடைய அழகு கண்ணுக்கு மயக்கத்தைத் தந்தது. வயது பதி

னெட்டுக்கு மேல் இராது. பூமியில் புரளும்படியான ஒரு நீண்ட பாவாடையும் மேலாக்கும் அணிந்து கொண்டிருந்தாள். கழுத்தில் பாசி மணி சரங்கள்; கையில் கண்ணாடி வளையல்கள்; கண்கள் தான் எவ்வளவு பெரியது!

உள்ளே போய் விளக்கு ஏற்றி வைத்து விட்டு 'ஸ்டவ்' பற்ற வைத்து 'டீ' போட்டு சாப்பிட்டேன். வாசல் திண்ணையில் குளிரில் நடு நடுங்கிக் கொண்டிருக்கும் அவளுக்கு ஒரு கிண்ணம் 'கரம் சாயா' கொடுக்காமல் இருக்க முடியவில்லை.

அவள் 'டீ'யை குடித்துக் கொண்டே "பொம்பிளைங்க ஒருத்தரும் ஊட்டிலே இல்லீங்களா?" என்று கேட்டாள். அதன் அர்த்தம் அவளுடைய கண்களில் பிரிதிபலித்தது.

'இன்னும் ஒரு பெண்ணிடமும் சிக்கிக் கொள்ளும் பாவம் செய்யவில்லை;" என்றேன்.

'கடகட' வென்று அவளும் சிரித்துவிட்டாள். அந்த சிரிப்பில் வெளி வந்த முத்துப் போன்ற பற்களில் விளக்கின் ஒளிபட்டு மின்னியது. பெரு மழை நின்றதும், 'சாமி, போயிட்டு வாரேன்' என்று சொல்லிக் கொண்டு போய்விட்டாள். அவள் போன பிறகுதான் என்னுடைய தனிமையின் ஏக்கம் முற்றிலும் தெரிய வந்தது.

அன்றிலிருந்து அவள் எப்பொழுதாவது இரண்டில் மூன்றில் என் வீட்டிற்கு வருவாள். அவள் வந்தால் அந்தக் காட்டு மலர்களின் மணம் 'கம்' மென்று வீசும். என்னைக் கேள்விகள் கேட்பதில் சலிப்பே கிடையாது. நான் பிறந்தது வளர்ந்தது எல்லாம் கேட்டுக் கொண்டிருப்பதில் அவளுக்கு அவ்வளவு உற்சாகம், ஆனால், எனக்கு அவளைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவள் பெயர் மட்டும் சொக்கி என்று தெரியும்.

சில வேளைகளில் அவள் என்னுடன் பேச மணிக் மணக்காகக் காத்துக் கொண்டிருப்பாள். நான் வாராந்திரக் கணக்கை மேஜையின் மீது வைத்துக் கொண்டு எழுதின வண்ணமாக இருப்பேன். அப்பொழுது பார்க்க வேண்டுமே அவளுடைய முகத்தை! பொறாமையால் — நான் அவளை அலட்சியம் செய்து விட்டு கணக்கை வைத்துக் கொண்டு மண்டையை உடைத்துக் கொள்வதால் எழுந்த குரோதத்தால் — அப்படியே வெந்து சாம்பலாகி விடுபவள் போல பெருமூச்சு விடுவாள்.

அதற்கு என்னைப் பழி வாங்கவும் தவறமாட்டாள். நான் பேச்சுத் துணைக்கு எவராவது வரமாட்டார்களா என்று தவிக்கும் பொழுது இவள் கைவீசிக் கொண்டு ஒய்யாரமாக நடந்து வருவாள். என் ஆவலைக் கண்டதும் பேசவே மாட்டாள். அன்று முழுதும் மௌனமாகவே இருந்து விடுவாள்.

அன்று ஒருநாள் ஏகாந்தமாக உட்கார்ந்து கொண்டு கதை எழுத ஆரம்பித்தேன். [சொக்கி வந்தது கூட எனக்குத் தெரியாது. வெகு நேரம் நின்று கொண்டிருந்தாள் போலத் தோன்றிற்று- உடனே அவளைப் பார்த்து சிரித்தேன். அப்பா! அவளுக்கு வந்த கோபத்தைப் பார்க்க வேண்டுமே அப்பொழுது! என் கையைப் பிடித்துக் கொண்டு 'எழுதினது போதும், எழுந்திருங்கள். இப்படி காலார நடந்து போவோம்' என்று கூப்பிட்டாள்,

எனக்கும் ஆசைதான். ஆனால் மனதில் அப்பொழுது எழுந்த எண்ணங்களை குறிக்காமல் விட்டு வர விருப்பமில்லை. தயங்கினேன். கையிலிருந்த பேனாவைப் பிடுங்கிக் கொண்டு வாசற்படியில் போய் நின்று கொண்டு 'வராது போனா பேனா உங்களது இல்லை' என்று கத்தினாள்.

மாலை மஞ்சள் வெயிலில் அந்த வன கன்னிகை பக்கத்தில் வர நான் போய்க் கொண்டிருந்தேன் அன்று தான் அவள் மனம் விட்டுப் பேசினாள். பேச்சு மிகவும் ரசமாகத்தான் இருந்தது. கடைசியில் ஒரு ஓடையின் பக்கத்தில் பிரமாண்டமாக வளர்ந்திருந்த ஒரு அரச மரத்தின் கீழ் உட்கார்ந்து கொண்டோம். அன்று அவளுடைய முகத்தில் சாதாரணமாகத் துள்ளும் சிரிப்பைக் காணோம். ஆழ்ந்த கருத்தை அவளுடைய கண்கள் தெரிவித்தன. அவளுடைய மனதில் ஏதோ அசாதாரணமான போராட்டம் ஒன்று நிகழ்வது போல என் மனதில் பட்டது. நேரம் கழிந்து கொண்டேயிருந்தது.

'உன்னை வீட்டில் காணவில்லையே என்று யாரும் தேட மாட்டார்களா?' என்று கேட்டேன்.

'என்னைத் தேட யார் இருக்காங்க அங்கே?' என்று மனம் வெறுத்து சொல்லிவிட்டு கடைக் கண்களால் என்னைப் பார்த்தாள். கண்களில் நீர் கசிந்திருந்தது. அவள் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் ஆசைகள் எனக்குத் தெரிய வந்தன, அவள் என்னுடைய வீட்டையும் உள்ளத்தையும் நிரப்ப விரும்பினாள்.

'என்னை ஏற்றுக் கொள்ள மாட்டீர்களா?' என்று வெட்கமும், சந்தேகமும். கலந்த பாவத்தில் அவள் பார்த்தாள். அவளை அன்று ஏற்றுக் கொண்டேன். அன்று முதல் சொக்கி என்னுடையவளானாள். அவளுடைய முகம் சந்திர காந்தியில் மிகவும் சோபித்தது.

அன்று முதல் சொக்கி என்னுடன் வசிக்க ஆரம்பித்தாள். பகல் வேளையில் வீட்டில் ஒருவரும் இருப்பது கிடையாது. எனக்கு ஆபீசில் வேலை; அவள் எங்கு போவாளோ எனக்குத் தெரியாது நான் மாலையில் வீட்டிற்குத் திரும்பும்பொழுது — புள்ளினங்களைப் போல — அவளும் என் வரவிற்காகக் காத்துக்கிடப்பாள். அவள் வந்துவிட்டால் என்னுடைய சிறு அமைதியான வீடு ஒரு பெரிய சந்தைபோல மாறிவிடும். அவளுடைய பேச்சும், சிரிப்பும் கேட்ட வண்ணமாகத்தான் இருக்கும். என்னை வேலை எதுவும் செய்ய விடமாட்டாள்.

ஆனாலும் எத்தனை நாட்கள் என்னுடைய எழுத்து வேலையைத் தள்ளிப் போடமுடியும். ஒரு வாரம் தள்ளிப் போட்ட பிறகு அடுத்த வாரத்திற்கு மலை போல பழைய கணக்குகள் காத்துக் கொண்டிருக்கும். எனக்கு வேலை கொடுத்தவர்கள் இந்த மாதிரி ஒரு பெண்ணிடம் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் இருக்க எனக்கு சம்பளம் கொடுக்கவில்லை யல்லவா? இந்த மாதிரியான சாக்குகளைச் சொல்லி அவளை என்னவோ சமாதானம் செய்ய முடியாது என்று எனக்குத் தெரியும்.

அன்று திரும்பும் பொழுது நல்ல வேளையாக அவளை வீட்டில் காணவில்லை. உள்ளே சென்று கதவை உட்புறம் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு உட்கார்ந்து எழுத ஆரம்பித்தேன். மூன்று மாதக் கணக்குகள் எழுதியாக வேண்டும். மீதியிருக்கும் வேலையைக் கண்

டாலே மனங்கலங்கிற்று. தொடர்ந்து நான்கு நாட்கள் எழுதினலும் தீராது போலத் தோன்றிற்று.

சொக்கி நேரம் கழித்து வந்தாள். கதவை இடித்தாள். நான் திறக்கவில்லை; கத்தினள்.

'அப்படியே; திண்ணையில் படுத்துக் கொள். எனக்கு எழுத்து வேலை மிகவும் இருக்கிறது'

'என்னல் திண்ணையில் படுத்துக் கொள்ள முடியாது. கதவைத் திறப்பீர்களா? மாட்டீர்களா?'

'முடியாது' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னேன்.

அவள் இறங்கிப் போகும் காலடி சத்தம் கேட்டது. அன்று முதல் ஒரு வாரம் அவள் என்னுடைய கண்களில் தென்படவே யில்லை. என் எழுத்து வேலை முடிந்ததும் அவள் மீது என் மனம் சென்றது. அவளைத் தேடிக் கொண்டு புறப்பட்டேன். வழியில் ஒரு குறவனைப் பார்த்து 'அவளுடைய வீடு எங்கே இருக்கிறது?' என்று கேட்டேன்.

'அவளுக்கு வீடு ஏது!' என்று கேலிச் சிரிப்புடன் கூறினன்.

'அவளுக்குத் தாய் தகப்பன் ஒருவரும் இல்லையா?'

'எல்லாரும் இருக்கிருர்கள். ஆனல் அவளை ஒருவரும் ஆதரிக்க வில்லை; அவளும் ஒருவருக்கும் கட்டுப்படவில்லை!

'அவள் இருக்கும் இடமாவது தெரியுமா?

'அவளுக்கென்ன சாமி! இன்னிக்கு ஒருத்தன்! இரண்டு நாள் கழித்துப் பார்த்தால் இன்னெருவன் வீட்டிலே பார்க்கலாம்' என்று சொல்லிக் கொண்டே போய்விட்டான்.

இதைக் கேட்டதும் எனக்கும் மிகவும் அருவருப்பாக இருந்தது. நான் அவளை நம்பி மோசம் போய் விட்டதாக நினைத்துக் கொண்டு இந்த மட்டாவது ஒழிந்தாளே என்று சந்தோஷத்துடன் வீட்டிற்குத் திரும்பினேன். வாசல் திண்ணையில் சொக்கி உட்கார்ந்திருந்தாள்.

அந்தக் குறவன் சொன்னது இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டுதான் இருந்தது. அவளுடன் பேசவே வாய் எழவில்லை. கதவைத் திறந்து கொண்டு நான் உள்ளே நுழையும் பொழுது அவளும் என்னைப் பின் தொடர்ந்தாள்

'எழுத்து வேலையெல்லாம் முடிந்ததா இல்லையா?'

'இன்னும் நிறைய இருக்கிறது! என்று வேணுமென்றே சொன்னேன்.

'இன்று ஒன்றையும் நான் எழுத விடப்போவதில்லை. நாம் இருவரும் உட்கார்ந்து பேசி எழு நாளாகி விட்டது. ஆமாம், என்னைப் பற்றிக் கதை யெழுதுகிறேன் என்றீர்களே; எழுதியாய் விட்டதா?'

'இந்தப் பதிவிரதையின் சரித்திரம் தான் பாக்கி!' என்று முணுமுணுத்தேன். ஆனலும் அது அவள் காதில் விழுந்துதானிருக்கும்.

'என்ன சொன்னீர்கள்? நான் பதிவிரதையல்ல வென்று தானே? நான் பதிவிரதை யென்று சொல்ல வரவில்லையே! என்னை நீங்கள் கவனிக்காவிட்டால் எனக்கு எத்தனையோ பேர் காத்துக் கிடக்கிருர்கள்' என்று பேய்ச் சிரிப்புடன் சொன்னள்.

'பின் ஏன் இங்கு வந்தாய்?'

'நீங்கள் என்னைத் தேடிக்

கொண்டு போனீர்களே, அதற்குத்தான்......'

'நீ இவ்வளவு மோசமானவள் என்று எனக்கு அப்பொழுது தெரியாது!'

'அது தெரிந்துகொண்டு உங்களுக்கு என்ன பிரயோஜனம்? நீங்கள் எனக்கு என்ன பிரமாதமாக வாங்கிக் கொடுத்து உசத்தி விட்டீர்கள்? இந்தப் பாவாடை மாலன் வாங்கித் தந்தது. இந்த மேலாக்கு கிரன் வாங்கித் தந்தது. உங்களது என்று சொல்ல என்னிடம் எந்த பொருள் இருக்கிறது?'

அன்று கடைசியில் அவள் தான் ஜெயித்தாள். திரும்பவும் அவள் என்னிடம் ஒட்டிக் கொண்டு விட்டாள். இம்மாதிரி நாலைந்து தடவைகள் பிரிவதும் சேர்வதுமாக இருந்தாள்.

உண்மையாகச் சொல்லுகிறேன்; நானும் அவளுடன் ஒரு வருஷம் பழகி இருப்பேன். அவளுடைய மனநிலை, ஆசை, மனோரதங்கள் என்ன என்பதே எனக்குத் தெரியவில்லை.

ஒருநாள் இரவு இவளைத் தேடிக் கொண்டு எவனோ ஒருவன் என் வீட்டிற்கு வந்து விட்டான். இவள் பெயர் சொல்லிப் பல முறை அழைத்தான். இவளும் அவன் பின்னாலேயே சென்று விட்டாள். சென்றவள் மூன்றாம் நாள் தான் திரும்பினாள்! அவளைப் பார்த்ததும் எனக்கு வந்த கோபத்திற்கும் ஆத்திரத்திற்கும் அளவேயில்லை! அவள் இருந்த திக்கில் கூட நான் அப்பொழுது கண்ணெடுத்துப் பார்க்கவில்லை.

'ஓகோ! கோபம் போல இருக்குது?' என்று ஆரம்பித்தாள்.

'நீ இப்படி கேவலமாக நடந்து கொள்வதாக இருந்தால் இந்த வீட்டு வாசற்படியே மிதிக்கக் கூடாது'

'ரொம்ப நல்லதாகப் போச்சு. என்னை இனிமேல் நீங்கள் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை' என்றாள், பழிக்குப் பழியாக.

அவளுடைய கண்களில் அப்பொழுதும் ஒரு குழந்தை போன்ற கள்ளங் கபடற்ற தன்மை வீசியது. நான் அவளுடைய நடத்தையை சந்தேகிப்பதைக் கண்டு நாகத்தைக் குத்தினால் சீறுவது போல, ஆத்திரமடைந்தாள். அவளுடைய உதடுகள் துடித்தன. கண்கள் கண்ணீரால் கலங்கின.

'போனால் போகிறது, இனிமேல் அப்படியெல்லாம் நடந்து கொள்ளாதே' என்று அவளுடைய மெல்லிய கையைப் பிடித்துக் கொண்டேன்.

'என் மேல் உங்களுக்கு இன்னும் வெறுப்பு ஏற்படவில்லையா?' என்று அவளுடைய பெரிய கண்களை அகல விரித்துக் கொண்டே கேட்டாள்.

'எப்பொழுதுமே வெறுப்பு கிடையாது' என்றதும் அவள் முகத்தில் திரும்பவும் அந்த களை வந்தது. திரும்பவும் அவளுடன் வாழ்க்கை! அடிக்கடி என்னை 'என் கதையெங்கே? எழுதியாயிற்றா?' என்று கேட்டுக் கொண்டே இருந்தாள்,

கடைசியில் நிகழ்ந்த ஒரு சம்பவம் தான் நான் அவளையும், என் வேலையையும் விட்டும், அந்த இடத்திற்கே ஒரு பெரிய 'முழுக்கு' போட்டதற்கும் காரணமாக இருந்தது: அன்று நள்ளிரவில் தாகம் எடுத்ததால் எழுந்த பொழுது என் பக்கத்தில் அவளைக் காணவில்லை. அன்று எனக்கு அதற்கு மேல் தூக்கமும் வரவில்லை.

அந்த சமயத்தில் என் மனோ நிலை கட்டுக் கடங்காததாக ஆகிவிட்டது. என்னுடைய காதலியெனக் கருதப் படுபவள், பிறன் ஒருவனது ஆலிங்கனத்தில் இருப்பதாக என் மனம் நினைத்த போது என் உள்ளத்தில் ஒரு பெரும் புயல் கொந்தளித்தது. வெளியில் இன்பமாக வீசின காற்றோ, மேற்கு திக்கை நோக்கி வெகு விரைவாக சென்று கொண்டிருக்கும் சந்திரனோ என் மனதின் கொந்தளிப்பை அடக்கவில்லை. வெறி பிடித்தவன் போல திண்ணையில் உட்கார்ந்து கொண்டு இருந்தேன். விடியற்காலை நான்கு மணிக்கு அவள் வெகு வேகமாக என் அறைக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள்.

வாசற்படியில் வழியை மறித்துக் கொண்டு கோபம், அவமானம், வெறுப்பு, பொறாமை முதலிய பல்வேறு குணங்களுடன் போராடிக் கொண்டிருக்கும் என்னைப் பார்த்தாள்.

'ஏன் இங்கு திரும்பி வந்தாய் பேயே, நட இதை விட்டு' என்று சீறினேன். இன்னும் சிறிது சென்றிருந்தால் அவளை மிருக வெறி கொண்டு தாக்கியும் இருப்பேன்.

அவள் ஒரு கணம் தயங்கி நின்றாள். அவள் வாய் எதையோ சொல்லத் துடித்தது; கண்கள் கலங்கின; உடலும் நடுங்கிற்று. ஆனாலும் என் நரசிம்மாவதாரத்திற்கு முன் அவள் பேசவேயில்லை. மெதுவாக வந்த வழிவே திரும்பிச் சென்றாள்.

எனக்கு இன்னும் ஆச்சர்யமாகத்தான் இருக்கிறது. அந்த நாடோடிப் பெண்ணிடம் எந்தப் படிப்பையோ, நாகரிகத்தையோ எவரும் காண முடியாது. அவளுடைய சொத்தெல்லாம் இயற்கையிலே உரம் பெற்ற அங்கங்களின் பூரிப்பும் அழகும்தான். ஆனால் அவளுடைய எந்த ஆத்ம சக்தி தன்னுடைய கதையை எழுத விரும்பிற்றோ? எனக்குத் தெரியாது.!

மூன்று வருஷங்களுக்கு முன் காசிப்பூர் ஆஸ்பத்திரியிலிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. சொக்கி தான் எழுதியிருந்தாள். ஆனால் அவள் எழுதச் சொல்லி வேறு யாரோ எழுதித்தான் இருக்க வேண்டும்.

"என்னுடைய உயிர், அதிகமாகப் போனால் இன்னும் ஒருவாரம் தான் நிற்கும் என்று இங்கு எல்லோரும் நினைக்கிறார்கள். நீங்கள் பிரிந்து போன பிறகு ஒரு நாளாவது, ஒரு நிமிஷமாவது உங்கள் ஞாபகம் இல்லாமல் இருந்தது கிடையாது. அது பழைய கதை; அது எதற்கு இப்பொழுது! என்னுடைய கதை எழுதி முடிந்ததா? முடிந்திருந்தால் ஒரு புஸ்தகம் அனுப்பி வையுங்களேன். நான் கண்மூடுவதற்குள் அதைப் பார்த்து விட்டுப் போக வேண்டும். என்னுடைய இடத்தை இப்பொழுது யார் அடைத்துக் கொண்டு இருக்கிறார்களோ? வணக்கம்

உங்கள்

சொக்கி.

என் கண்களை நான் நம்பவில்லை. இந்தக் கடிதத்தைப் பார்த்ததும், அவளுடைய பழைய நினைவுகள் மனதிற்கு வந்தன. இந்தக் கடிதம், இதற்கு முன் அவளிடமிருந்த என் வெறுப்பையெல்லாம் அழித்து விட்டது. என் மீது அவள் கொண்டிருந்த அன்பு அப்பொழுது தான் மனதை அழுத்திற்று. அவளைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் பிறந்தது. நான்

இரண்டு நாட்களில் புறப்பட்டு வருவதாகத் தந்தி அடித்தேன்.

வேளை எதற்கும் வேண்டு மல்லவா? பெருமழை பிடித்து ரயில் போக்குவரவே நின்று விட்டது. பாதை சீர்பட இரண்டு வாரங்களுக்கு மேல் ஆயிற்று. அந்தத் தடங்கல் அப்பொழுதே பின்னால் நிகழவிருந்த பெரு நிகழ்ச்சியை அறிவித்தது. இடையில் ஒரு நாள் அதே காசிப்பூர் ஆஸ்பத்திரி முத்திரையுடன் ஒரு கவர் வந்தது. அதில் சொக்கி எழுதியிருந்த கடிதத்துடன் ஆஸ்பத்திரி டாக்டரும் ஒரு குறிப்பு வைத்திருந்தார். அந்த நோயாளி தான் இறக்கும் போது இந்தக் கடிதத்தை எனக்கு அனுப்பும்படி வேண்டிக் கொண்டதாக டாக்டர் எழுதியிருந்தார்.

"நான் இன்னும் சில மணி நேரத்தில் புறப்படப் போகிறேன். தங்கள் நினைவாகவே போகிறேன். இது வரையிலும் என் மனதில் இருந்த ஒரு உண்மையை உங்களிடம் சொல்லி விட்டு இறந்தால் தான் என் நெஞ்சு வேகும் என்று நினைக்கிறேன்.

"நான் இது வரையிலும் எவனுடைய மனைவியாகவும் இருந்ததில்லை! இதை ஒருவரும் நம்ப மாட்டார்கள். என்னைக் காதலித்த ஒவ்வொரு ஆடவனையும் என்னை வெறுத்துக் கைவிடும்படி நடந்து கொண்டேன். ஏன் எனில் இதுவரையிலும் நான் எவரையுமே காதலிக்க வில்லை — உங்கள் ஒருவரைத் தவிர.

"நீங்கள் என்னைத் துரத்தின அன்றிரவு என் தகப்பனுக்கு உடல் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருந்ததால் தான் தங்களை விட்டுப் போயிருந்தேன், அது உங்களுக்கு வித்தியாசமாகப் பட்டு விட்டது. நான் இதுவரையிலும் என் கற்பை உங்களைத் தவிர வேறொருவருக்கும் அர்ப்பணம் செய்ய வில்லை என்று மட்டும் நீங்கள் நம்புவீர்களானால் என் ஆத்மா சாந்தி அடையும்.

என்னை எப்பொழுதாவது
நினைக்கவேண்டுகின்ற,

உங்கள்

சொக்கி.

இதுதான் எனக்குப் புரியவில்லை! ஏன் அவள் இந்தக் கடிதத்தை எழுதி என் மனதைச் செல்லாக அரிக்க வேண்டும்? என் மனம் அவளை நினைத்து படும்பாடு அவளுக்கு இனி எப்படித் தெரியும்? எந்த ஒரு பெண்ணைக் கண்டாலும் என் மனம் சொக்கியைப் பற்றி ஏன் நினைத்து அழுகிறது? அவளுடன் பழகின அன்றுவது இந்த உண்மை தெரிந்திருந்தால் கதையே வேறு மாதிரியாக இருக்கும்! இதைப் பொய்யென்று என் மனம் என்றுமே சந்தேகித்தது கிடையாது; ஏனென்றால் அவள் ஒரு பொழுதும் பொய் சொல்ல மாட்டாள். அது மட்டுமல்ல, இறக்கப் போகும் அவளைப் பற்றி, ஐநூறு மைல்களுக்கப்பால் இருக்கும் ஒரு கட்டை என்ன நினைத்துக் கொண்டால் என்ன?

சொக்கி! உன் ஆத்மா சாந்தி அடைந்து விட்டது! உன்னை நினைத்து ஏங்கும் இந்த ஆத்மாவிற்குச் சாந்தி எப்பொழுது?

★

தைக்குரவை

புன்னாகவராளி ராகம்] [திஸ்ர ஏக தாளம்

தன்னானே தானானே — தங்கம்
தன்னானே தானானே!

தையும் பிறந்ததம்மா — எங்குந்
தங்கம் பொலிந்ததம்மா!
செய்யும் விளைந்ததம்மா! — நல்ல
செங்கரும்பு வந்ததம்மா! (தன்னானே)

மாம்பூ மணந்ததம்மா — தலை
வாழைத்தார் போட்டதம்மா!
தேம்பால் சொரிந்ததம்மா! — வாழ்வு
தெவிட்டா தினிக்குதம்மா! (தன்னானே)

குயிலோசை கேட்குதம்மா — ஆயர்
குழலோசை கொஞ்சுதம்மா!
மயில்போல் நடம்புரிவோம் — புள்ளி
மானோடும் சோலையிலே! (தன்னானே)

ஆலோலம், ஆலோலம் — என்றே
அருவி பொழியுதம்மா;
ஏலேலம் ஏலவென்றே — இங்கே
ஏற்றச்சால் பாடுதம்மா! (தன்னானே)

மாதவிப் பூங்கொடியில் — ஒரு
மணிநகை காணுதம்மா!
காதலர் கண்மணியில் — அது
காணும் கனிநகையே (தன்னானே)

உளமோங்கி ஒற்றுமையாய் — இந்த
உலகெல்லாம் வாழுகவே!
வளமோங்கக் கொப்பிதட்டி — நாம்
மங்கலப் பண்ணிசைப்போம் (தன்னானே)

சுத்தானந்தபாரதி

மனித சுபாவம்

"சாமி"

ரயில் புறப்படுவதற்கு இரண்டு நிமிஷங்கள் தான் இருந்தன. மணியும் அடித்தாகி விட்டது. ஒரு பிரயாணி ஓடோடியும் வந்து, ஒரு மூன்றாவது வகுப்பு வண்டியின் முன் நின்று கொண்டு, கதவைத் திறந்தார். வண்டிக்குள் இருந்த பிரயாணிகளில் ஒருவர் "இங்கு இடமில்லை, முன் வண்டிகள் நிறைய காலியாயிருக்கிறது" என்று வண்டிக்கு வெளியே தலையை நீட்டிக் கொண்டு கத்தினர்.

"சரிதான் ஸார்! எல்லாம் இடமிருக்கு" என்று கூறிக் கொண்டே கதவைத் திறந்து கொண்டு அப் பிரயாணி உள்ளே நுழைந்தார். அவர் நுழைந்ததில் தங்களுக்குள்ள ஆட்சேபணையை, வண்டிக்குள் ளிருந்தவர்கள் எல்லோரும் ஏககாலத்தில் சத்தம் போட்டுத் தெரிவித்துக் கொண்டனர். ஆனல் அப் பிரயாணி அதைப் பொருட் படுத்தாமல், தன் சாமான்களை யெல்லாம், வெளியில் சுமந்து நின்று கொண்டிருந்த போர்ட்டரிடமிருந்து அவசர அவசரமாக வாங்கி, உள்ளே வைத்து விட்டு கூலியைக் கொடுத்தார். வண்டியும் நகர்ந்தது. புதிதாக வந்தவர் தன் சாமான்களை ஒழுங்கு படுத்தி வைத்து விட்டு, தனக்கு ஒரு இடத்தையும் தேடிக் கொண்டு உட்கார்ந்தார். ரயில் வேகமாக ஓட ஆரம்பித்தது. "எது வரையில் போகிறீர்கள்?" என்று புதிய பிரயாணியை வண்டியில் இருந்த ஒருவர் கேட்டார். இவர் தான் அப் பிரயாணி வண்டிக்குள் நுழைவதை ஆட்சேபித்தவர்.

"மதுரைக்குப் போகிறேன்" என்று பதில் கிடைத்தது.

"ஓகோ, மதுரைக்கா, நானும் மதுரைக்குத்தான் போகிறேன். நீங்கள் இருப்பது மதுரைதானே?"

"இல்லை, அங்கு ஜோலியாகப் போகிறேன்."

"நான் கூட காரியமாகத்தான் போகிறேன். ரொம்ப சந்தோஷம்; அது வரை பேசிக் கொண்டே போகலாம். உங்கள் கையிலிருப்பது இன்றைய பேப்பரா? கொஞ்சங் கொடுங்கள், பார்க்கலாம்."

இப்படியாக புதுப் பிரயாணியும், மற்றவர்களும் ரயில் நண்பரானர்கள். ஆரம்பத்தில் தகராறு, பின்னர் உறவு கொண்டாடுவது. இது மனிதசுபாவம்.

* * *

"என்ன சாஸ்திரிகளே! எப்போ வந்தீக பார்த்துகிட்டத்தட்ட நாலு வருஷமாச்சு. உங்க பையன் பெரியவன் என்ன பண்ரான்? பாக்கி பசங்கள் எல்லாம் சௌக்யமா?" என்று பட்டணத்திலிருந்து வந்த கணேச சாஸ்திரிகளை அவருடைய பழைய நண்பர் கேட்டார். "நேத்திக்கித்தான் வந்தேன். நிலங்களை குத்தகைக்கு விட்டுட்டு போகணும். பெரிய பையன் ராமு ஸர்வே டிபார்ட் மெண்டிலே குமாஸ்தாவா இருக்கான். அடுத்தவன் இந்த வருஷம் பி. ஏ. பரிட்சைக்குப் போருன். ஏதோ பகவான் புண்ணியத்திலே காலட்சேபம் நடக்கறது" என்று பதிலளித்தார் கணே சாஸ்திரிகள்.

"சம்பளம் என்ன வாங்கருன்?"

"ஐம்பது ரூபா"

"மேல் வரும்படியோ?"

"ஏதோ முப்பது நாப்பது கிடைக்கும்."

"போறது. அவன் கெட்டிக் காரன்; எப்படியோ பொழச் சிக்குவான்."

பட்டவர்த்தனமான பாஷையில் லஞ்சம் வாங்குவதைத் தான் 'மேல் வரும்படி' என்று கூறுவது. லஞ் சம் வாங்குவது நாணய மற்ற இழிவான செயல். ஆனால் நம் சமூகத்தில் இதுவும் மனிதசுபாவமா கத்தான் கருதப் படுகிறது. 'மேல் வரும்படி' யில்லாத உத்தியோகம்— அது எவ்வளவு பெரிதாக இருந்தா லும் சரி — நல்ல உத்தியோகமாக கருதப் படுவதில்லை. 'மேல் வரும் படி'யில் விருப்ப மில்லாது உத்தி யோகம் செய்பவனை, பிழைக்கத் தெரியாத முட்டாளென்றே நம் சமூகம் கருதுகிறது.

* * *

"..........படம் எப்படி? உங் கள் பத்திரிகையில் விமர்சனம் செய்து விட்டீர்களா?" என்று ஒரு சினிமா பத்திரிகையின் ஆசி ரியரை மற்றொரு பத்திரிகையில் சினிமா ஆசிரியராக இருக்கும் அவர் நண்பர் கேட்டார்.

"என்ன படம்; டைரக்ஷன் சுத்த மோசம். இவங்கள்ளாம் டைரக்டர்னு சொல்லிண்டு முன் னாலே வந்துடராங்க. ....டை ரக்ட் செய்த முந்திய படங்களும் இதே போலத்தான் அடாஸாக இருந்தன. இந்த ஆளை எனக்கு நேராத்தெரியாது. பார்த்தால் முகத்திற் கெதிரேயே சொல்லி விடுவேன்" என்று ஆத்திரத் துடன் பதிலளித்தார் சினிமா பத் திரிகையின் ஆசிரியர்.

மறுநாள் இந்த சினிமா பத்திரி கையின் ஆசிரியர் மற்றொரு நண் பருடன் ஒரு பட ஆரம்ப விழாவுக்குச் சென்றார். கூட்டத்தில் இவருக்கு அறிமுக மான ஒரு சினிமா பிரமுகர் இவ ரிடம் ஒரு கனவானை அழைத்து வந்து, இவர் தான் டைரக்டர்...... ......பல படங்களை டைரக்ட் செய் திருக்கிறார். சென்ற வாரம்...... தியேட்டரில் ஆரம்பமான......... படம் இவர் தான் டைரக்ட் செய் தது" என்று கூறி அந்த டைரக்ட ரிடம் சினிமா பத்திரிகை ஆசிரிய ரைப் பற்றியும் கூறி பரஸ்பரம் அறிமுகம் செய்து வைத்தார்.

"தாங்கள் மிக திறமையுடன் டைரக்ட் செய்துள்ள சிறந்த படங்கள் மூலம் நான் தங்களை முன்னமேயே பரிச்சயம் செய்து கொண்டு விட்டேன். நேரில் சந் தித்து தங்களுடைய நண்பனாகும் பாக்கியம் எனக்கு இன்று கிடைத் ததில் நான் பெருமை கொள்ளுகி றேன். தாங்கள் டைரக்ட் செய் துள்ள படங்கள் ஒவ்வொன்றும் முதல் தரமானவை. முகஸ்துதி யாக சொல்லுகிறேன் என்று நீங் கள் நினைக்கக் கூடாது. இந்தியா விலேயே தங்களைப் போன்ற முதல் தரமான டைரக்டர்கள் வெகு சிலரே தான் இருக்கின்ற னர். அதிலும் சென்ற வாரம் வெளியான படத்தைப் பார்த் தேன். ஹாலிவுட் டைரக்ஷன் கூட அதற்கு ஈடாகாது" என்று அடுக்கிக் கொண்டே போனார் அந்த சினிமா ஆசிரியர். இம் மனப் பான்மையை என்ன வென்று கூறுவது? இதுவும் மனித சுபாவம் தான்.

* * *

"கமலத்துக்கு இந்த தை மாச மாவது கல்யாணம் பண்ணவேண் டாமா? இப்படியே வர்ர வரன் களை யெல்லாம் தள்ளிண்டே போனா என்னதான் ஆறது?" என்று தன் கணவனிடம் குறைப் பட்டாள் ஜானகியம்மாள்.

"என்னை என்ன தான் செய்யச் சொல்றே? ஒத்தனாவது இரண்டா யிரத்துக்கு குறைஞ்சு கேக்க மாட்டேங்கறானே. இது இல்லா தே கல்யாணச் செலவு ஆயிரமா வது ஆகும். கொஞ்சங் கூட ஈவி ரக்க மில்லாதவங்களா இருக்

காங்க. ஆயிரம் ரூபாய் கையிலே கொடுத்து கல்யாணம் செய்து கொடுக்கிறேன்; அப்புறம் ஒவ்வொரு விசேஷத்திற்கும் நிறைய செய்ய ரேன்னு தான் நானும் சொல்லிண்டே வரேன். ஒண்ணும் சரியா வரவில்லை. என்ன பண்ற துண்ணும் தெரியல்லே" என்று ஆத்திரமும் விசனமும் கலந்த குரலில் அவர் பதிலளித்தார்.

"என்ன பண்றது. எப்படியாவது கல்யாணம் நடந்தாகணும். ஏதோ கிட்டத் தட்ட அவா கேக்கிறதுக்கு ஒத்துத் தான் போகணும். இது முடிஞ்சா நம்ப சீனுவுக்கு நல்ல வரனு பாக்கணும்" என்று சகதர்மிணி கூறினுள்.

சீனு கல்யாணப் பேச்சு காதில் விழுந்ததும் ஐயர் வாளுடைய தொனியே மாறி விட்டது.

"ரொக்கமாக ரூபாய் மூவாயிரம் கையில் வாங்காதே சீனு கல்யாணம் நடக்காது. அவனுக்கு என்னடி? இந்த வருஷம் பி. எஸ்ஸி பாஸ் பண்ணிப்பிட்டானு, மூவாயிரமில்லை ஐயாயிரம் கொடுக்கரேன்னு ஒவ்வொத்தனும் மின்னே வந்து நிப்பான். ஒண்ணு மாத்தரம் நிச்சயம். மூவாயிரத்துக்கு ஒரு செப்புக்காசு கூட குறைச்சு அவனுக்கு வாங்க மாட்டேன். சீனு மாதிரி நல்ல வரன் வேணும்னு எவனும் கதறிண்டு பணத்தைக் கொட்டுவான்" என்று தன் மனைவியிடம் கூறினர். இந்த உத்சாகத்தில் பெண் கமலாவுக்கு ரூபாய் இரண்டாயிரம் கேட்டதைக் கூட அவர் சீக்கிரமாக மறந்து விட்டார். இதையும் மனித சுபாவத் தோடு சேர்க்காமல் என்ன செய்வது?

இப்படியே தான் நம் மனித சமூகம் நடந்து கொண்டே போகிறது. இதை எப்படி மாற்றுவதோ?

தங்கமும் பச்சையுமாய்த்
தழைத்ததடி வசந்தம்
மங்கலப் பண்ணொலிப்போம்—குயிலே
மாங்கனிச் சோலையிலே...

தக்கத் தகெனத்திசை
தாளந் தெறித்தொலிக்கக்
குக்கூ எனக் கூவுவாய்—குயிலே
கூத்தாடக் கான் மயில்கள்...

"மோனம்"

புத்தக ஆராய்ச்சி

[பச்சைக் கிளி: (சிறுகதைகள்) ஆசிரியர்: கி. சந்திரசேகரன் எம். ஏ; பி. எல். பிரசுரம்: கலைமகள் காரியாலயம் மைலாப்பூர். விலை ரூ. 2]

கதைகள் எல்லாம் அழகான எளிய தமிழில் கவர்ச்சிகரமாக எழுதப் பட்டிருக்கிறது. கதைகளைப் படிக்கும் போது கதா பாத்திரங்கள் நம் இதயத்தோடு ஒட்டிப் போகின்றன. "தமிழ் நடையின் அழகும், வருணனையின் வளமும், அதிசயிக்கத் தக்க நிகழ்ச்சிகளும் அமைந்து உருவாகாத கதைகளை உள்ளடங்கிய கருத்திற்காக மட்டும் இலக்கியமாகக் கொள்ள இயலுமா" என்ற சந்தேகமே வேண்டாம்.

* * *

[திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன 24-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பத்தாண்டு ஆட்சி மலர்.]

திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமபுர ஆதீன 24-வது மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பீடாதி பத்தியம் ஏற்றுப் பத்தாண்டாகிறது. இவ்வாதீன பரம்பரைச் சிறப்பு, வரலாறு, ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானமவர்களின் ஆட்சிக் குறிப்புகள், சைவ சித்தாந்த ஆராய்ச்சிக் குறிப்புகள் முதலிய தமிழிலும் ஆங்கிலத்திலும் தரப்பட்டிருக்கின்றன. அதோடு ஆதீன சம்பந்தமான அநேக அழகிய படங்களும் சேர்க்கப் பட்டிருக்கின்றன. கண்ணுக்கும் மனதுக்கும் இன்ப மளிக்கும் அருமையான மலர்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஆக்ஞையின் படி வெளியான நூல்கள்.

திருக்கடவூர்த் தலவரலாறு: விலை அணா 2

புள்ளிருக்கு வேளூர்த் தல வரலாறு விலை அணா 2

கந்தரநுபூதி: விலை அணா 2

மேலே கண்ட மூன்று நூல்களும் கிடைக்குமிடம்: தருமபுர ஆதீன நூல் நிலையப் பரிசோதகர், தருமபுரம், மாயவரம்.

ஔவையார்: (நாடகம்) ஆசிரியர்: பி. எத்திராஜுலு நாயுடு. வெளியிடுவோர்: டி. கே. எஸ். சகோதரர்கள்.

ஆசிரியர் இந்நூலில், கர்ண பரம்பரையாக வழங்கி வரும் கதைகளை எல்லாம் நன்கு தொகுத்து நாடக ரூபமாக சிறந்த முறையில் எழுதி யிருக்கிறார். ஆசிரியரின் நடை உயிருள்ள நடை. இடையிடையே சிறந்த கவிஞர்களின் பாடல்களை சேர்த்திருப்பது பாராட்டத்தக்கது. தமிழ் இலக்கியத்திலே மறுமலர்ச்சி நாடகங்கள் குதிரைக் கொம்பாயிருக்கின்றன. தக்க தருணத்தில் இந்நாடகத்தை வெளியிட்டுதவிய டி. கே. எஸ். சகோதரர்களை எத்தனை முறை புகழ்ந்தாலும் தகும். அருமையான நாடகங்களை நடத்தி நாடகக் கலைக்குப் புத்துயிர் அளித்து வருவது போலவே, இம்மாதிரி இன்னும் அநேக நூல்களை வெளியிட்டு தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்வார்களாக.

நோயா-மருந்தா?

[ரா. நா]

"காதலாவது கத்தரிக்காயாவது" என்றார் ஒரு பிரபல ஆசிரியர். "காதல், காதல், காதல் — இன்றேல் — சாதல், சாதல், சாதல்" என்றார் கவிஞர். "காதல் தரையில் பரவாது இருக்கும் வரையில் உற்சாகமாயிருக்கும்; தரையில் பரவினால் வாழ்க்கை வறண்டு போகும்" என்று வர்ணிக்கிறார் ஒரு கதாசிரியர். "ஒருவன் காதலால் பீடிக்கப் பட்டிருக்கிறான் என்றால், அவன் முகத்தில் ஒரு மாதிரி அசடு வழியும்" என்று அதன் லட்சணத்தை சமத்காரமாகக் கூறியிருக்கிறார் மற்றொரு நூலாசிரியர். காமமின்றி காதலில்லை என்று அனுபவத்துடன் கூறினார் ஒரு வேதாந்தி.

இவ்வாறு கூறுவதிலிருந்து நான் காதலை கேலி செய்கிறேன் என்று நண்பர்கள் நினைக்கலாம். காதல் நோயால் பீடிக்கப் பட்ட ஒரு நண்பர் என்னைப் பார்த்து, "உங்களுக்கு இந்த அனுபவமே இல்லை போலிருக்கிறது; அதனால் தான் உயர்ந்த ஒரு மனோ பாவத்தை பொய் என்று சொல்லுகிறீர்கள்" என்று கோபித்துக் கொண்டார். காதல் என்பது பழமையானது. அதனால் பீடிக்கப் படாமல் தப்ப முடியாது. ஆனால் நம்நாடு உள்ள நிலையில், நம் சமூக அமைப்பு இருக்கும் நிலையில் காதல் மணத்துக்கு இடமே இல்லை. ஆகையால் என் போல் பலர் அந்த வலையிலிருந்து தப்பி விட்டார்கள்.

காதல் நோய் என்று நான் ஏன் இழிவாகச் சொல்லுகிறேன் என்று என்னை முன் கூறிய நண்பர் கேட்டது போல் பிறரும் கேட்கலாம். காதல் என்பது ஒரு வித மனப்பிராந்தி. ஈசுவர சிருஷ்டியில் ஏற்பட்டிருக்கும் மாறுபாடுகளுக்குள் ஏற்படும் கவர்ச்சிக்கு காதல் என்று பெயர் சூட்டப் பட்டிருக்கிறது.

மனப் பிராந்தி என்பது ஒருவித நோய். அதற்கு மருந்து நினைத்த எண்ணம் ஈடேறுவது தான். காதல் எண்ணம் எப்பொழுது உதிக்கும் என்று திட்டமாகச் சொல்ல முடியாது. பக்குவமான வயது வந்தவுடன் பார்வையே மாறுகிறது. அதற்கு முன் ஒரு பெண்ணைப் பார்த்தால் அலட்சியமாகப் போய்விடுவான். ஒரு பெண்ணைப் பார்த்தவுடன் ஸ்தம்பித்துப் போய் நின்றால், அல்லது ஒரு ஆசிரியர் கூறியபடி அவர் முகத்தில் அசடு வழிய ஆரம்பித்தால், அவரை காதல் நோய் பீடித்து விட்டது என்று திட்டமாகக் கூறிவிடலாம். எனக்குத் தெரிந்த ஒருவருக்கு ஒருநாள் தன்னுடைய காரியாலயத்திற்குச் சென்று கொண்டிருக்கையில் இந்த நோய் பீடித்து விட்டது. எதிரே பல பெண்கள் பள்ளிக் கூடத்திற்கு வந்து கொண்டிருந்தார்கள். அவ்வளவு பெண்களில் ஒருத்தியின் முகவெட்டு இவர் மனதைக் கவர்ந்து விட்டது.

சற்று அசட்டு பிசட்டென்று திரும்பிப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தார். பெண் பள்ளிக் கூடம் சேரும் வரையில் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த மனோ நிலையில் அந்தப் பெண்ணும் தன்னைப் பார்த்து பிரமித்ததாக நினைத்துக் கொண்டார். அப்புறம்

கேட்கவேண்டுமா? தினம் அவள் பள்ளிக் கூடம் வரும் சமயம் அவளைப் பார்ப்பது, திரும்பி பின்னல் தொடர்வது இப்படி நடந்தது. சில நாட்களுக்குப் பிறகு ஆஸ்தான மண்டபத்தை தேடிக் கண்டு பிடித்தார். பெண்யார், என்ன என்பதை விசாரித்தார். கனவுக்கும் உண்மைக்கும் சம்பந்தமே இல்லை என்று தெரிந்து கொண்டார். ஒழுக்கக் குறைவான குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதை அறிந்தார். ஏமாற்றம் மனதைத் துளைத்தது. கண்டதும் காதல் என்பது கானல் நீர் என்பதை அறிந்தார். சுய ஞாபகம் வந்தது; காதலை மூட்டை கட்டிவிட்டு காரியத்தை கவனிக்க ஆரம்பித்தார்.

மற்றொரு நண்பர். அவர் எப். ஏ படிக்கையில் தன் உறவினர் பெண் ஒருத்தி தனக்குத் துணைவியாயிருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். மனதை அவளுக்குப் பறி கொடுத்தார். ரகஸ்யமாக கடிதம் எழுதினர். பெண்ணும் தன்மேல் ஆசை கொண்டிருப்பதை அறிந்தார். அது வரையில் ஒரு முடிவுக்கும் வராதிருந்தவர் அவள் தான் தன் சகதர்மிணியாக வேண்டும் இல்லையேல் தனிமையாக வாழ வேண்டும் என்று சங்கல்பம் செய்து கொண்டார்.

சங்கல்பம் சுலபமாக செய்தாகி விட்டது. கை கூடுவது கஷ்டமென்பது தெரிந்தது. பெண்ணின் தாய் தவிர மற்றெல்லோரும் இந்த சம்பந்தத்தை எதிர்த்தனர். நண்பரின் பெற்றோர்கள் கடுமையாக எதிர்த்தனர். வேண்டாத இடத்தில் பெண்ணைக் கொடுப்பதா என்று பெண் வீட்டாரும் ஆத்திரமடைந்தனர். இந்த பாசத்தைத் தகர்ப்பதற்காக பெண்ணை தூர இடத்திற்கு அனுப்பினர். ஆனல் இவர்களுடைய பற்றுதல் அதிகரித்ததே ஒழிய தணியவில்லை. பையனுக்கு கலியாணம் பேச ஆரம்பித்தனர். வேறு வரன் பார்க்க வேண்டாம் என்று பையன் எச்சரித்து விட்டான். "இவ்வளவு முடுக்கா" என்று பெற்றோர் ஆத்திரப் பட்டனர். பையனை வீட்டை விட்டு அப்புறப் படுத்தினர். பள்ளிக்கூடச் செலவிற்குப் பணம் கொடுப்பதை நிறுத்தினர். ஆனல் சிறுவன் சலிக்கவில்லை. நண்பர்கள் உதவியால் படிப்பை முடித்துக் கொண்டான். பெரியவர்கள் பார்த்தார்கள். பையன் எதிர் காலம் வீணுகி விடப் போகிறதே என்று அஞ்சினார்கள்.

'உன் பூர்வ சொத்தில் பாகம் கேட்பதில்லையானல் சம்மதிக்கிறோம்" என்றனர். "அழியாத பொக்கிஷம் என்னிடமிருக்கிறது நசிவுறும் பொக்கிஷம் எனக்கு வேண்டாம்" என்றான். வேண்டா வெறுப்பாக பெரியோர் மணம் முடித்து வைத்தனர். ஆனல் இரு உள்ளங்கள் ஒன்று பட்டு உயரப் பறந்தன.

இவ்விரு உதாரணங்களும் இரு வகைப்பட்டவை. ஒருவர் மேல் பூச்சைக் கண்டு மோகித்தார். மற்றொருவர் வாழ்க்கைப் பூஷணமாயிருப்பதை வரித்து வைராக்கியத்துடன் அதை அடைந்தார். ஒன்று எச்சரிக்கை, மற்றொன்று வழிகாட்டி. நண்பர்கள் தங்கள் மனோதர்மத்தை உபயோகித்து நல் வழி நாடலாம்.

★

ஆசிரியர்
சரத்சந்திரசட்டர்ஜி

சாவித்திரி

மொழிபெயர்ப்பு:
ஆர். ஷண்முகசுந்தரம்.

ஆனால் உண்மையில் அழகில் ஒன்றுமே யில்லை. வாழ்க்கை பூராவும் கிடைக்காமல் அல்லல் படும் பொருள் கண்ணிற்கே தென்படுவதில்லை. எதை நாம் அதிகமாக நேசிக்கிறோமோ, எந்த வஸ்து கிடைக்காவிட்டால் இந்த உலகமே சாரமற்றதாகத் தோன்றுகிறதோ, அந்த வஸ்துவை நாம் வசப்படுத்த முடிவதில்லை. ஆகையால் கடவுள் பேரில் பாரத்தைப் போட்டு விட்டு கைக் கொள்ள வேண்டியது தான். ஆனால், மதிப்பற்றதும், இரண்டொரு நாளில் நாசமடையக் கூடியதும், கண்ணெடுத்துப் பார்த்தாலே குண தோஷங்கள் தெரியக் கூடியது மான பொருளுக்கோ பரிட்சைகள் நடப்பது சொல்லி முடியாது.

திவாகர், எல்லாம் பிடித்திருந்தால் ஒரு அற்ப விஷயத்திற்காக எங்கள் விரோதத்தைத் தேடிக் கொள்ளாதே. உனது எதிர்காலம் ஜகஜ்ஜோதியாகப் பிரகாசிக்க வேண்டுமென்று நான் ஆசீர்வதிக்கிறேன். நீ இந்த விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள். உலகத்திலே மனிதனுக்கு வெளி அழகு மட்டும் முக்கிய மானதல்ல. அது தவிர, அழகு ஆராய்ச்சி கலியாணத்தின் உத்தேசமுமல்ல.

திவாகர் தலை குனிந்து கொண்டு மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தான். உபேந்திரனும் சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டுக் கடைசியில், "சரி, நீ போ" என்றான்.

திவாகர் மெதுவாக, "அண்ணா, என் மனதுக்குப் பிடித்தமில்லை. மன்னித்து விடு. அவள் பெரிய வீட்டுப் பெண்" என்றான்.

இந்த எதிர் பாராத பதிலால் உபேந்திரன் கூடச் சிறிது நேரம் திகைத்துப் போய் விட்டான். இந்த, அதிகம் பேசாத திவாகரின் வார்த்தையின் முழு அர்த்தத்தையும் தெரிந்து கொண்டான். அதோடு எந்த விஷயத்திலும் தோல்வி அடைவது அவன் இயல்புக்கு ஒத்ததல்ல. காகிதம், பேனாவை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்து விட்டு, "அப்பா பிடித்த மில்லா விட்டால் வேண்டாம். சரி, பெரிய வீட்டுப் பெண் என்ன குற்றத்தைச் செய்து விட்டாள் என்பதைச் சொல்லு ?" என்றான்.

"இல்லை, குற்றத்தைச் சொல்லவில்லை. எனது ஏழ்மையைக் குறித்துச் சொன்னேன்."

"ஏழை வீட்டுப் பெண் பயபக்தியுடன் நடந்து கொள்வதைப்

போல பணக்கார வீட்டுப் பெண் நடந்து கொள்ள மாட்டாள் என்பது தானே இதன் அர்த்தம்? நான் உன்னிடம் ஒன்று கேட்கிறேன். நீ பெண்ணிட மிருந்து கௌரவமும், பக்தியும் எவ்வளவு தூரம் எதிர் பார்க்கிருய்? ஆனுல் நீ கலியாணமே செய்து கொள்வதில்லே என்று பிடிவாதமாக இருந்தால் அது வேறு விஷயம். ஆனுல் இதற்காக அந்நியர் பேரில் அகாரணமாகக் குற்றத்தைச் சுமத்தி விட்டு உன் தரித்திரத்தை மறைக்கப் பார்க்காதே. நமது புராண இதிகாசங்களேப் படித்திருக்கிருயா? அவைகளில் வரும் சீதை, சாவித்திரி முதலிய பத்தினிப் பெண்கள் ராஜ ராஜேஸ்வரர் வீடுகளில் பிறந்தும் ஒரு ஏழை வீட்டுப் பெண்ணேப் போல நடந்து கொள்ள வில்லேயா? பெரிய வீட்டுப் பெண்களேப் பற்றிக் கூறும் இந்த அபவாதத்தை காரணமில்லாமல் ஒத்துக் கொள்ள என்ஞல் முடியாது'' என்ருன்.

திவாகரோடு, சுரபாலாவும் மறைவில் நின்று கொண்டு இவ் வார்த்தைகளேக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் முந்தானேத் தலேப்பைப் பார்த்ததும் உபேந்திரன், “இங்கு கூடத்தான் ஒரு பெரிய வீட்டுப் பெண் இருக்கிருள். இவளுடைய அழகிலும், குணத்திலும் பாதி உடையவளாக சசி வந்தாலே எந்தக் கணவனும் தன்னேப் பெருத்த பாக்கிய சாலி என்று சொல்லிக் கொள்வானே.'' பிறகு சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு, “விருப்பமில்லே என்று நீ சொல்கிருய்.

குழந்தைப் பிராயத்தில் பள்ளிக் கூடம் போவதிற்குக் கூட விருப்பமில்லாது தானிருந்தாய். சிலருக்குத் தருமத்தில் கூட சிரத்தை உண்டாவதில்லே. தாய் நாட்டிடம் கூட சிலர் அசிரத்தையாய் இருக்கிருர்கள். ஆகையால் நாம் இந்த ருசிகளுக்கு அடிமையாகி விடுவதா?'' என்ருன்.

இந்தச் சமயத்தில் அலமாரிக்குப் பின்ஞலிருந்து வளேயல்களின் ‘கலகல’ சப்தம் கேட்கவே திவாகர் எழுந்து நின்று கொண்டு என்னவோ யோசித்தான். பிறகு சுரபாலா அருகில் சென்று, “மன்னி, உங்களுக்குச் சம்மதமானுல் நான் அண்ணுவிடம் கடிதம் எழுதச் சொல்லிவிடுகிறேன்'' என்ருன்.

சுரபாலா மெய்ம் மறந்து கணவனது பேச்சையே கேட்டுக்கொண்டிருந்தாள். சொல்ல முடியாத சாந்தியாலும், திருப்தியாலும், புளகாங்கித மடைந்து, தனது ஆசாபாசங்களனேத்தையும், கணவனது பாதத்தில் சமர்ப்பித்தாள். அவள் ஒன்றும் நிச்சயம் செய்ய வில்லே. இருந்தாலும் முந்தானேயால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, “அவர் எப்போதும் உண்மையைத் தவிர்த்து வேறு ஒன்றையும் கூறியது கிடையாது. உனக்கும் மங்களம் உண்டாகும், எனக்கும் சந்தோஷம் தான்'' என்ருள்.

திவாகர், உபேந்திரனேப் பார்த்தான். திறந்திருந்த சன்னல் வழியாக வரும் சூரிய கிரணம் பட்டு அவன் முகம் பிரகாசித்தது. அந்த முகத்திலே ஆத்திரமோ, அல்லது கெட்ட எண்ணமோ சிறிதும் தென்பட வில்லே. மிகத் தூய்மையாகவும், மங்களகரமாகவும் தென்பட்டது.

“உங்கள் இஷ்டம் போல் செய்யுங்கள். எனக்கு நேரமாகிறது, நான் போகிறேன்'' என்று கூறி விட்டு திவாகர் மெதுவாக வெளியே சென்ருன். அவன் போன பிறகு சுரபாலா வந்து

எதிரில் இருந்த சாய்வு நாற்காலி யில் உட்கார்ந்து கொண்டாள். நீர் நிறைந்த கண்களோடு கண வனைப் பார்த்துக் கொண்டு, "என் னையும் மன்னித்து விடுங்கள். நான் பெரிய தப்பு செய்து விட் டேன். உங்கள் பிரியம் போல் நடந்தால் சசிக்கு நன்மை தான் விளையும். திவாகரைப் போல என்னையும் மன்னித்து விடுங்கள்" என்றாள்.

உபேந்திரன் கடிதத்தை ஏறக் குறைய முடித்து விட்டான். அவன் தலை நிமிர்ந்து, "சரி" என்றான்.

இப்போது திவாகர் தனது விவாக விஷயத்தைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தான். சசி எப்படியிருப்பாள், என்ன செய்து கொண்டிருப்பாள், என்ன நினைத்துக் கொண்டிருப் பாள், என்ன படித்திருக்கிறாள், கலியாணமான பிறகு அவள் எப் படி நடந்து கொள்வாள் முதலிய இது போன்ற விஷயங்கள் தான் அவன் சிந்தனைக் குரிய விஷயங் கள். இப்போது இரவு நேரங் களில் படிப்பதில் அதிக தடை ஏற்பட்டது. இன்று அவன் மனம் போதை கொண்டது. போதை கொண்ட மனத்தால் ஒன்றையும் தெளிவாக நிச்சயிக் கக் கூடாமல் ஆகாயத்திலே இங்கு மங்கும் சிதறிக் கிடந்த நக்ஷத்திரப் புஷ்பங்களை மாலை தொடுக்க ஆரம்பித்தான். அவ னுக்கு ஒரு வேலையும் ஓடவில்லை.

பரிட்சையைப் பற்றிய பயம் தோன்றிய போதெல்லாம் அவன் அதை மறந்து வேறொரு கனவு காண ஆரம்பித்தான். எவ் வளவோ நேரம் இந்தத் தடுமாறிய மனத்தோடு அலைந்து திரிந்த பிறகு கூட அதை நேரான வழியில் கொண்டு வர முடியவில்லை. அப்போது காலம் வீணாகி றதே என்று பச்சாதாபப் பட் டான்.

ஆனால் இது எத்தகைய விசித் திரமான மாறுதல்! எந்த மோகத் தால் இவ்விதம் பைத்தியமடைந்து விட்டான்? இதை யோசிக்கவே அவன் அதிக வெட்கமடைந்து, "நான் இதைத் துளி கூட விரும்ப வில்லை. இதன் பேரில் எனக்குப் பெரிய வெறுப்பு. ஒரு பெரிய வரின் மனத்தைத் திருப்தி செய்ய வேண்டுமானால் அலட்சியமாகத் திருப்தி செய்வேன்" என்று கூறிக் கொண்டான். இதன் பிறகு அவன் இரு மடங்கு ஆத் திரத்தோடு படிக்க ஆரம்பித்தான். ஆனால் இன்று மனத்தை வசப் படுத்துவது சிரமமாகி விட்டது.

அவன் பாதியோடு விட்டு வந்த விளையாட்டை, வீசி யெறிந்து விட்டு வந்த நக்ஷத்திரப் புஷ்ப மாலையை மறுபடியும் தொடுப்ப தற்குச் சமயம் பார்த்துக் கொண் டிருந்தான். அவனுடைய கற் பனையின், இளம் தென்றலின் ஸ்பரிசமே அவனுக்கு இவ்வளவு இன்பத்தை யூட்டுகிறது! அவனைச் சூழ்ந்திருந்த இயற்கையின் எழில் கள் அவன் கண்களுக்கு இனிய விருந்தளித்தன. ஆஹா! அது தான் எவ்வளவு அழகாயிருக் கிறது. சூரியனைப் பார்த்து விட்டு கண்ணை மூடிக் கொண் டால் விதவிதமான வர்ண ஒளிகள் பிரகாசிக்கிற தல்லவா? அவ் விதமே பாடத்தைப் பார்த்ததும் அவன் மனதிலே விதவிதமான இன்ப நினைவுகள் ஊற்றெடுத்து தேக மெங்கும் பரவியது. அவ னது தொண்டை கட்டிக் கொண் டது. பார்வை மங்கலடையத் தொடங்கியது. இவைகளெல் லாம் சேர்ந்து அவனை ஒரு புதிய இன்ப வாரிதியில் மூழ்கடித்தது. அவன் எதிரில் கண்ணைப் பறிக் கும் தீபங்கள் பிரகாசித்தன;

காதருகில் பலவிதமான வாத்தியக் கோஷங்கள் முழங்கின; மனதிலே விவரிக்க முடியாத ஒரு பேருணர்ச்சி எழுந்தது; இவைகளுக்கு மத்தியில் அவன் தன்னை மணக்கோலத்துடன் காணவே தேகமெங்கும் புல்லரிப் பெடுத்தது! இதன் பிறகு, அவன் இதுவரையிலும் பார்த்திருந்ததும், கேட்டிருந்ததும், எல்லாம் வர்ணப் படங்கள் போல அவன் மனத்திரையிலே தோன்றலாயின. அவன் சிறிதும் சலனமின்றி இருக்க முடியவில்லை. அவன் ஒன்றையும் நிச்சயிக்கவும் முடியவில்லை. அவன் மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தான்.

எதிரில் புஸ்தகங்கள் குவிந்து கிடந்தன. தலைக்கு மேல் மண்ணெண்ணெய் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. எதிரிலிருந்த கடிகாரம் அவனை வீணாக அடிக்கொருதரம் எச்சரித்துக் கொண்டிருந்தது. வெகு நேரம் வரையிலும் அவன் இவ்விதமே உட்கார்ந்து கொண்டிருந்தான். திடீரென அவன் தேகத்திலே உண்டான ஒரு வேதனை உணர்ச்சியைச் சிரமப் பட்டுச் சமாளித்துக் கொண்டான். கற்பனை அவனை ஒரு பெரிய குடும்பத்திற்கு இழுத்துச் சென்றிருந்தது. விழிப்பு நிலையில் இருந்தும் கூட அவன் உணர்ச்சியுடன், தெளிவற்ற குரலில், "இனி நான் என்ன செய்ய முடியும்? இனி நானும் மற்றவர்களைப் போல பல பந்தங்களுக்கு அடிமைப் பட்டு சாதாரணமாக வாழ வேண்டியது தானே! ஐயோ! அதில் ஒரு விசேஷமோ, மகத்துவமோ இருக்காதே! சின்ன அண்ணா என்னைக் குட்டிச் சுவராக்கி விடுவார்! இருந்தாலும் நான் ஏன் இந்த சுதந்திரமான வாழ்க்கையை வீணாக்க வேண்டும்?" என்று கூறிக் கொண்டு உபேந்திரனுக்கு எதிராக் ஒரு கடுமையான சபதம் செய்து கொள்ள ஆயத்தமானான். ஆனால் வாயிலே அந்தச் சபதம் புறப்பட்டதும், நினைத்ததையெல்லாம் மறந்து விட்டான். அவனுக்கு சுரபாலாவின் ஞாபகம் வந்தது. தண்டகாருண்ய வனத்திலே, ராவணன் தேரிலே, சாக்ஷாத் லக்ஷ்மி அவதாரமான சீதாதேவியைப் பார்த்ததும், ஜடாயு வழிமறிக்கும் எண்ணத்தைக் கைவிட்டு, மரணத்தை ஆலிங்கனம் செய்து கொண்டான்.

அவ்விதமே இன்று சுரபாலாவின் அழகிய முகத்தாலும், ஆசீர்வாதத்தாலும் உபேந்திரனுடைய விருப்பத்தின் முன் திவாகர் தோல்வி அடைந்தான். உபேந்திரனுக்கு எதிராகக் கடுமையான சபதம் செய்ய முடியவில்லை. இதன் பிறகு இரவு வெகு நேரம் வரையிலும் யோசனை செய்து கொண்டிருந்தான். ஆனால் ஒரு வழியும் தென்படவில்லை. கடைசியாக தனது சுதந்திரமான வாழ்வை மாயையிடம் விட்டு விட்டு, கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்து நின்று கொண்டு, "இன்று இதிலே நிற்கட்டும்" என்று கூறிக் கொண்டு புஸ்தகத்தை மூடிவிட்டு, விளக்கைச் சிறிது பண்ணிப் படுக்கையில் படுத்துக் கொண்டான். அவனது சொந்த விஷயங்கள் எல்லாம் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டன. சுரபாலாவின் முகமும் ஆசீர்வாதமும் தான் நினைவிற்கு வரத் தொடங்கியது. இதற்கு முன் பல தடவைகள் அந்த முகத்தைப் பார்த்திருக்கிறான்; பேசியதைக் கேட்டிருக்கிறான்.

ஆனால் இன்றைய சம்பவங்களை நினைவு படுத்திக் கொண்டு எழுந்து உட்கார்ந்து சுரபாலாவை கை

கூப்பி வணங்கினன். கணவனிடம் அவளுக்குள்ள நம்பிக்கை தான் தேவ கட்டளை போல அவளுடைய புத்தியையும், வாழ்க்கையையும் மாற்றி அமைத்து விட்டது என்பதை உணர்ந்தான். உடனே தனக்கு வரப்போகும் மனைவியும் அப்படித்தான் இருப்பாள் என்று எண்ணினன். பேசும் போது சுரபாலாவின் உதடுகள் ஏன் நடுங்கின; கண்களில் ஏன் நீர் நிறைந்தது; முகத்திலே ஒரு திவ்ய ஒளி ஏன் பிரகாசித்தது என்பதையெல்லாம் அவன் யோசித்துப் பார்க்கவே சகல விஷயங்களும் சூரியப் பிரகாசம் போலத் துல்லியமாகத் தெரிந்தது. சமஸ்கிருத இலக்கியத்திலும், ஆங்கில இலக்கியத்திலும் உள்ள காவியங்களில் பாவத்தைப் பற்றிய வர்ணனைகளை அநேக தரம் உருப் போட்டிருக்கிருன். பெரும்பாலும் அவைகளெல்லாம் அவனுக்குப் புரியாமலேயே இருந்தன. ஆனல் இப்போதோ அவைகளெல்லாம் நன்கு புரிந்தது. அவைகளிலுள்ள இனிமையில் மூழ்கினன்.

இவ்விதம் அவன் தன் கற்பனைக் கனவுகளிலிருந்து எப்போது விடுபட்டான், எப்போது அவன் ஆண் பெண்களின் இன்ப துன்பக் காவியங்களிலிருந்து விடுபட்டு நித்திரை போனன் என்பது தெரியவில்லை.

ஏழாவது அத்தியாயம்

விபினுடைய விருந்திற்கு மறுநாள், சதீஷ்சந்திரன் படுக்கையிலிருந்து எழுவதற்கு மணி பத்து ஆகி விட்டது.. அறைக் கதவு அப்போதும் மூடியபடி தானிருந்தது. அன்று காலையிலிருந்தே சூரியன் மிக உக்கிரமாகக் காயத் தொடங்கினன். அதனல் கதவுகளும், சன்னல்களும் சூடேறியிருந்தது. மூடியிருந்த கதவு எவ்வளவு சூடேறியிருந்தது என்பதை சதீஷினுடைய தேகத்தைப் பார்த்தாலே கண்டு கொள்ளலாம். படுக்கை முழுவதும் வியர்வையால் நனைந்து போயிருந்தது. அவனது உள் இந்திரியங்களும் தாகத்தால் கொதிப் படைந்திருந்தன. தேகமும், மனமும் சோர்ந்து போய் எழுந்து உட்கார்ந்தான். பிறகு தலைமாட்டிலிருந்த சன்னலைத் திறக்கவே, அதன் வழியாக மிகக் கடூரமான சூரிய கிரணங்கள் வந்து அவன் மீது பட்டன.

இரவு முழுவதும் தூக்கங் கெட்டிருந்ததால் மிகச் சோர்வுடன், "பிஹாரி, பிஹாரி!" என்று கூப்பிட்டான்.

பிஹாரியும் ஓடி வந்தான்.

"சீக்கிரமாக ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டு வா?"

"புகையிலை வேண்டாமா?"

"வேண்டாம், தண்ணீர் கொண்டு வா."

"குளிக்க வில்லையா?"

"நீ முதலில் தண்ணீர் கொண்டு வா."

பிஹாரி மறுபடியும் போகவில்லை. "பூஜை........."

பூஜை என்று கேட்டவுடன் சதீஷ் எரிந்து விழுந்தான். "அயோக்கியப் பயலே, உனக்கென்னடா அதைப் பற்றி? போய்த் தண்ணீர் கொண்டு வா" என்ருன்.

கோபமாகப் பேசவே பிஹாரி தண்ணீர் கொண்டு வரப் போனன். சமயலறைக் கூடத்திலே உட்கார்ந்து கொண்டு சாவித்திரி வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டிருந்தாள். அவள் புன்

முறுவலுடன், "சதீஷ் பாபு, புகையிலை கேட்கிறாரா?" என்றாள்.

"இல்லை, தண்ணீர் கேட்கிறார்."

"குளிக்கவில்லையா? பூஜை செய்யவில்லையா? தண்ணீர் எதற்கு?"

"எனக்கென்ன தெரியும்? தண்ணீர் கொண்டு வா என்று 'உத்திரவு' பிறந்தது. கொண்டு போகிறேன்."

சாவித்திரி வெற்றிலை பாக்கை அங்கேயே வைத்து விட்டு எழுந்து கொண்டாள். "கொடு, நானே கொண்டு போகிறேன். நீ போய் 'ஐஸ்' வாங்கிக் கொண்டு வா" என்றாள்.

பிஹாரி அணாவை வாங்கிக் கொண்டு 'ஐஸ்' வாங்குவதற்காகச் சென்று விட்டான்.

சாவித்திரி மேலே சென்று, "குளிப்பதற்கு வாருங்கள். நான் அதற்குள் பூஜைக்கு ஆசனம் போட்டு வைக்கிறேன்" என்றாள்.

சதீஷ் மனத்திற்குள் மிகக் கோபமடைந்தான். "பிஹாரி, எங்கே போய் விட்டான்?" என்றான்.

சாவித்திரி சிரிப்பை அடக்கிக் கொண்டு, "அவன் 'ஐஸ்' வாங்கி வரப் போயிருக்கிறான். ஐயா, குற்றம் செய்தால் தண்டனை அடைந்துதான் தீர வேண்டும். அதனால் குற்றம் பரிகார மடைந்து விடுகிறது. நீங்கள் பூஜை செய்வதற்கு முன் எப்போதாவது தண்ணீர் குடித்திருக்கிறீர்களா? வாருங்கள், நேரம் செய்யாதீர்கள்" என்றாள்.

சாவித்திரியிடம் தர்க்கம் செய்வது வீண் எனக் கருதி எழுந்து வேஷ்டியைத் தோளில் போட்டுக் கொண்டு குளிக்கப் போனான். சாப்பாட்டிற்குப் பிறகு மறுபடியும் சதீஷ் தூங்குவதற்கு ஆயத்தம் செய்தான். அதற்குள் சாவித்திரி வந்து சேர்ந்தாள். சதீஷ், அவளைப் பார்க்காதவன் போல சுவர்ப் பக்கம் முகத்தைத் திருப்பிப் படுத்துக்கொண்டு தூங்கினான். சாவித்திரி மனதிற்குள்ளாகவே சிரித்துக் கொண்டு, "ராத்திரி நடந்ததெல்லாம் ஐயாவுக்கு ஞாபகம் இருக்கிறதா என்று கேட்டுப் போக வந்தேன்" என்றாள்.

சதீஷ் ஒன்றும் பேசவில்லை.

"சரி, தூக்கம் கலைந்ததும் தயவு செய்து என்னைக் கூப்பிடுங்கள். ஞாபகப் படுத்துகிறேன்" என்று சொல்லி விட்டுச் சாவித்திரி கதவை மூடிவிட்டுச் சென்று விட்டாள். சதீஷிற்கு நேற்று இரவு நடந்ததெல்லாம் ஞாபகம் இருக்குமா; அதெப்படி இருக்கும்?

விபின் பாபுவின் பிடியிலிருந்து நழுவி, அவன் எப்போது யாருடன் இங்கு வந்து சேர்ந்தான்? இவைகளெல்லாம் அவனுக்கு ஒன்றும் புலனாகவில்லை. இவைகளை எல்லாம் தெரிந்து கொள்வதற்கு அவனுக்கு விருப்பமில்லை என்றும் சொல்லிவிட முடியாது. ஆனாலும் ஒரு காரணமில்லாத வெட்கம் இதைத் தெரிந்து கொள்ள முற்படுவதைத் தடுத்தது. ஆனால் நேற்று மாலை நடந்த சம்பவங்கள் நன்கு ஞாபகத்திலிருந்தன. அதுதான் அவனது இருண்டிருந்த ஞாபக வானில் சுக்கிரன் போல ஒளி விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. சாவித்திரி நினைவு படுத்திப் போகவே அவனது தூக்கமெல்லாம் பஞ்சாய்ப் பறந்து விட்டது. நேற்று மாலை வேறு ஒரு வழியும் இல்லாமல் போக சட்டென தீபத்தை அணைத்தான். இதன் பலன்

என்னவாகும் என்று மனதிற்குள் வியாகூல மடைந்தான். ஆனல் அந்தச் செய்கையிலே எவ்வித மானங்கெட்ட எண்ணமும் கிடையாது.

அது ஒரு கெட்ட வேளே, என்று தன் மனதைத் தைரியப் படுத்திக் கொண்டான். குற்றம் செய்யா விட்டால் உண்டாகுமே ஒரு சத்திய பலம்; அதனுல் தனது வியாகூல மடைந்துள்ள மனதைத் தேற்றிக் கொண்டான். ஆனல் சாவித்திரி இப்போது என்ன சொல்லி விட்டுப் போனள்? இந்த அந்தகாரத்திலே அவள் காட்டிச் சென்ற வழியில் போவதற்கு தைரியம் எங்கே? அவன் இதற்கு முன்னும் போதை அடைந்திருக்கிருன். ஆனல் எப்போதும் போதை அடைந்து கீழே விழுந்தது கிடையாது. அவன் என்ன செய்தான், செய்யவில்லே என்பதை நிச்சயிக்க முடியவில்லே.

எத்தனேயோ குடிகாரர்கள் விழுந்து தடுமாறியதை இவன் கண்ணுரக் கண்டிருக்கிருன். இனி இவன் யாரைத்தான் குற்றம் சொல்ல முடியும்? இப்படி எல்லாம் இவன் நினேக்க நினேக்க மனம் மிக வேதனே அடைந்தது. அவன் எழுந்து உட்கார்ந்து இனி ஆயுளிலே எப்போதும் சாராயத்தைக் கையால் கூடத் தொடுவதில்லே என்று மறுபடி ஒருதரம் சத்தியம் செய்து கொண்டான். பிறகு சன்னலேத் திறந்து, “பிஹாரி” என்று கூப்பிட்டான்.

பிஹாரி, ராகால் பாபுவின் படுக்கையை வெயிலில் போட்டுக் கொண்டிருந்தான். தன்னேக் கூப்பிடுவதைக் கேட்டு ஓடி வந்தான். சதீஷ் அவனிடம், “நீ போய் உன் வேலையைப் பார். சாவித்திரியிடம் ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டுவரச் சொல்லு” என்றுன்.

“நானே கொண்டு வருகிறேன். அவள் இப்போது பூஜை செய்து கொண்டிருக்கிருள்” என்றுன் பிஹாரி.

சதீஷ் ஆச்சரியத்துடன், “பூஜையா?” என்றுன்.

“ஆமாம், அவள் தான் தினமும் செய்கிருளே. ஏகாதசியன்று ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக் குடிப்பதில்லே. நாங்கள் சொன்னுலும் கேட்பதில்லே. அவள் மீனும் சாப்பிடுவதில்லே. ராத்திரிச் சாப்பாடும் சாப்பிடுவதில்லே. என்ன இருந்தாலும் அவள் ஒரு பெரிய வீட்டுப் பெண் அல்லவா?”

சதீஷ் இன்னும் அதிக ஆச்சரியமடைந்தான். “பெரிய வீட்டுப் பெண்ணு?” என்றுன்.

“ஆம் பாபு, பெரிய வீட்டுப் பெண் தான்,” என்று சொல்லி விட்டு பிஹாரி போகத் தொடங்கினன். சதீஷ் அவனேக் கூப்பிட்டு, “இரவு சாவித்திரி சாதம் சாப்பிடாமல், வேறு என்ன சாப்பிடுகிருள்?” என்றுன்.

“என்னமாவது பலகாரத்தைச் சாப்பிட்டு விட்டுத் தண்ணீரைக் குடித்துக் கொள்வாள். ஒன்றும் சாப்பிடாமலும் இருந்து விடுவாள்.”

“விடுதியில் வேறு யாருக்காவது இது தெரியுமா?”

“சமையல்காரனுக்குத் தெரியும், எனக்குத் தெரியும். வேறு யாருக்கும் தெரியாது. சொல்ல வேண்டாமென்று சொல்லியிருக்கிருள்.”

“சரி, போய்த் தண்ணீர் கொண்டு வா.”

பிஹாரி இரண்டு அடி எடுத்து வைத்தான். அதற்குள் சதீஷ்,

"இதைக் கேளு, பிஹாரி" என்றான்.

"சொல்லுங்கள்."

"அவள் பெரிய வீட்டுப் பெண் தான் என்பது உனக்கு எப்படித் தெரியும்?"

"எப்படித் தெரியு மென்றால் என்ன சொல்வது? எனக்கு நன்றாகத் தெரியும். ரொம்ப நல்ல ஜாதிப் பெண்தான். ஏதோ கால வித்தியாசத்தால்.............."

"சரி சரி; போய்த் தண்ணீர் கொண்டு வா"

பிஹாரி போன பிறகு சதீஷ் படுக்கையில் குப்புறப் படுத்துக் கொண்டான். சாவித்திரியைச் சாதாரண வேலைக்காரிகளோடு சேர்த்து எண்ணுவதற்கே அவன் மனம் இடம் தராது. சாவித்திரியை அப்படி ஒரு வேலைக்காரி என்று எண்ணினலே அவன் இதயம் ரகசியமாக வெட்க மடையும். எதனாலோ? இதை இதுவரையிலும் அவன் அறிய முடிய வில்லை. இன்று பிஹாரி சொன்னதைக் கேட்டு அவன் ஆனந்தமும் ஆச்சரியமும் மட்டும் அடைய வில்லை; களங்கமடைந்திருந்த சர்வ அந்தக் கரணமும் புனித மடைந்தது! அவன், பிஹாரி கூறிய அனைத்தையும் முழுக்க முழுக்க உண்மை என்று நம்புவதில் துளியும் தடை ஏற்பட வில்லை.

தண்ணீர் கொண்டுவர நேரமாகியது. ஏதோ காரணத்தால் நேரமாகியிருக்கும் என்று நினைத்து சதீஷ் சிறிது நேரம் பேசாமலிருந்தான். பின்னும் பிஹாரி வரவில்லை. அவனுக்கு ரொம்பத் தாகமாக இருந்தது. மறுபடியும் பிஹாரியைக் கூப்பிடுவதற்காக எழுந்தான். அதற்குள் சாவித்திரி கையில் தண்ணீர் டம்ளருடன் வந்தாள். இந்த ஆசாரசீலமுள்ள அபாக்யவதியை இன்று ஒரு புதிய திருஷ்டியுடன் பார்த்தான். அந்தக் கண நேரப் பார்வையிலேயே அவனது இதயத்தில் கருணைப் பிரவாகம் பெருகியது. இன்று எதைப் பற்றிப் பேசவும் அவன் தயங்க வில்லை. அவன் டம்ளரை எடுத்து ஜலம் முழுதும் குடித்து விட்டுக் கீழே வைத்தான். பிறகு, "எவ்வளவோ பேச வேண்டி யிருக்கிறது" என்றான்.

சாவித்திரி மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"முதலில், என்னை மன்னித்து விட வேண்டும்."

"இரண்டாவது?"

"நான் நேற்று எப்போது வந்தேன்? எப்படி வந்தேன் என்பதைச் சொல்ல வேண்டும்?"

"ராத்திரி நடுச்சாம மிருக்கும். வண்டியில் வந்தீர்கள்."

"அதற்கப்புறம்?"

"நீங்கள் வாசலில் படுத்துத் தூங்க ஆரம்பித்தீர்கள்."

"சே, சே! இங்கு யார் கூட்டிக் கொண்டு வந்தார்கள்?"

"நான் தான்."

"வேறு யாராவது இருந்தார்களா? இவ்வளவு பெரிய ஜடத்தை மேலே எப்படிக் கொண்டு போனாய்?"

சாவித்திரி சிரித்துக் கொண்டு, "பயப்படாதீர்கள்! விடுதியில் யாருக்கும் ஒன்றும் தெரியாது" என்றாள்.

"அப்பாடா! இப்போது தான் உயிர் வந்தது. உன்னிடம் ஒன்றுமே தவறாக நடந்து கொள்ள வில்லையா?"

"இல்லை!"

சதீஷ் மிகுந்த சந்தோஷத்துடன், "சரி, நீ என்ன ஞாபகப்படுத்துவதாகச் சொன்னாய்?" என்றான்.

"உங்களுடைய சபதம் — சத்தியம்தான். இனிமேல் குடிப்பதில்லை என்று சத்தியம் செய்திருக்கிறீர்கள்."

"நானா, சத்தியம் செய்திருக்கிறேன்? இம்மாதிரி துர்ப்புத்தி என் மனதில் ஏன் உண்டாகியது?"

"ஒரு வேளை என்னால் உண்டாகியிருக்கலாம்?"

"ஆமாம், சாவித்திரி! எனக்கு ஞாபகம் வருகிறது. உன்னிடம் சத்தியம் செய்தேனல்லவா?"

சாவித்திரி பேசாமலிருந்தாள்.

"அப்படியே ஆகட்டும். நேற்று சாயங்காலம் நடந்த விஷயம் உனக்கு ஞாபகம் இருக்கிறதா?"

இதைக் கேட்டுச் சாவித்திரி சிரித்தாள். அவள் தலையை அசைத்துக் கொண்டு, "ஆமாம், இருக்கிறது" என்றாள்.

"இது எல்லோருக்கும் ஒரு வேளை தெரியக்கூடும். இதற்கு என்ன வழி செய்வது?"

"நீங்கள் ஏதாவது வேறு விடுதிக்குச் சென்று விடுங்கள். அல்லது ஊருக்குப் போய் விடுங்கள்"

"ஆனால் நீ?"

சாவித்திரியின் முகத்தில் எவ்வித உணர்ச்சியும் தென்படவில்லை. அவள் ரொம்ப சாதாரணமாக, "என்னைப் பற்றி நீங்கள் கவலைப் படாதீர்கள். இவர்கள் வைத்துக் கொள்ளா விட்டால் இன்னொரு இடத்தில் வேலைக்குப் போகிறேன். வேலை செய்தால் கூலி கிடைக்கிறது. வேறு என்ன சொல்வது?" என்றாள்.

சதீஷின் மனம் இதைக் கேட்டு சின்னா பின்னமாகியது, அவன் இங்கு இருந்தாலும் இல்லா விட்டாலும் சாவித்திரிக்கு ஒன்றும் ஆகப் போவதில்லை! இதைப் பற்றி வேறு என்ன சொல்வது என்று அவளே நேரில் சொல்லுகிறாள். அவன் எவ்வளவோ அவளிடம் பேச வேண்டுமென்று நினைத்திருந்தான். ஆனால் அவளுடைய இந்தப் பதிலினால் அவனுக்கு ஒரு வார்த்தை கூடப் பேசத் தோன்றவில்லை. சாவித்திரி டம்ளரை எடுத்துக் கொண்டு சென்று விட்டாள். சதீஷ் மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தான்.

என்ன விசித்திரப் பொருளடா மனிதனுடைய மனம்! இது எதைக் கண்டு சந்தோஷமடைகிறது? எதைக் கண்டு கோபிக்கிறது? இதற்கு ஒரு கணக்கே இல்லை. சில சமயங்களில் ஒரு சிறிய தாக்குதலினாலும் சுருங்கிக் கொள்கிறது. இன்னும் சில சமயங்களில் ஒரு பெரிய தாக்குதலையும் புன்னகையுடன் பொறுத்துக் கொள்கிறது. இதன் காரணத்தை அறிய முடிவதில்லை. ஆனால் இந்த மனதை வைத்துக் கொண்டு மனிதன் எவ்வளவு கர்வம் அடைகிறான்! தன்னால் வசப்படுத்த முடியாததை— அறிய முடியாததை— தனது என்று எப்படிச் சொல்ல முடியும்? அதை வைத்துக் கொண்டு எப்படி நிர்ப் பயமாக வாழ்க்கை நடத்துவது?

சாவித்திரி சென்ற பிறகும் ரொம்ப நேரம் வரையிலும் அவன் அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் மனம் துக்கத்தால் மட்டும் வாடவில்லை. ஏதோ ஒரு பெரு நெருப்பு உள்ளத்தைத் தகித்தது. யாரையாவது நாம் காதலித்தால், அவர் நம்மைக் காத

விக்காமல் வெறுத்தால், அந்த வெறுப்பைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் ஒருவருடைய காதலை அடைந்து விட்டோமென்று நாம் நினைத்துக் கொண்டிருக்கும் போது, அவர் நம்மை வெறுத்தால் அதைப் பொறுத்துக் கொள்வது ரொம்பக் கடினம்! முதல் விஷயமும் வேதனையையும், அவமானத்தையும் அளிக்கிறது. இந்த வேதனைக்கு ஒரு பதிலும் இல்லை. இந்த அவமானத்திற்கு ஒரு முறையீடும் இல்லை. யாரிடத்தில் காதலை எதிர் பார்ப்பதில்லையோ, அவர் காதலிக்கா விட்டால் அதற்காக என்ன குறை கூற முடியும்? ஆனால் சொல்லுவதற்கு இடமுள்ள இடத்தில் அங்கே ஒன்றும் சொல்ல முடியாவிட்டால், அவமானத்திற்காக முறையிடுவதற்குக் கூடச் சந்தர்ப்பம் கிடைக்கா விட்டால் மனம் ரொம்பப் புண்படுகிறது. வேதனைக்குக் காரணம் தெரியாமல் போவதினால் வேதனை இரு மடங்காகிறது.

என்னவானாலும் சரி; சாவித்திரியின் இந்தப் பேச்சு அவளுடைய இதயத்தை மாத்திரம் வெளிப்படுத்தவில்லை; சதீஷின் இதயத்தையும் துப்புறவாக வெளிப்படுத்தி விட்டது. இந்த இரண்டு இதயங்களைப் பற்றியே எண்ணிக் கொண்டு மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தான். ‘சாவித்திரி காதலிக்கிறாள், ஆனால் நான் தான் காதலிப்பதில்லை’ என்று அவன் நிச்சயமாக எண்ணிக் கொண்டிருந்தான். ஆனால் இன்றோ அதற்கு நேர்மாறாக இருக்கிறது. அவன் காதலிக்கிறான்; ஆனால் சாவித்திரி காதலிப்பதில்லை. இதை நினைக்கவே அவன் மிகுந்த வெட்கமடைந்தான். தனது இந்தக் கீழான மனப்போக்கிற்காக தன்னிடமே வெறுப்பு உண்டாகியது. கடந்த இரவு அவன் நடந்து கொண்டது ரொம்ப வெட்ககரமானது என்பதில் சந்தேகமில்லை. அவனது வாழ்க்கையில் இதற்கு முன் எத்தனையோ இரவுகள் இம்மாதிரி இருந்திருக்கிறன். ஆனால் இதற்கு முன் அவைகளெல்லாம் ரொம்ப லேசாகப்பட்டது.

இந்த விடுதியில் இனி ஒரு தினம் தங்குவது கூடக் கடினம் தான். அவன் இங்கு இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவளுக்கு ஒன்றும் கவலையில்லை என்பதை அவன் எவ்விதமும் ஒத்துக் கொள்ளவில்லை. துக்கத்தால் இதயமே வெடித்து விட்டாலும் சரி, இந்த அற்பத்தனமான விஷயத்தைப் பெரிதாக நினைத்துக் கொண்டு படுகுழியில் விழக்கூடாது என்று சபதம் செய்து கொண்டான்.

நேரம் கழிந்து கொண்டிருந்தது. ஆனால் சதீஷிற்கு இவை ஒன்றும் கவனத்தில் இல்லை. விடுதியிலுள்ளவர்கள் தங்கள் தங்கள் வேலைக்குப் போய் விட்டுத் திரும்பி வருவதைக் கண்டு திடுக்கிட்டான். சன்னலுக்கு வெளியே எட்டிப் பார்த்து விட்டு எழுந்து நின்று கொண்டான். உடனே ஒரு சொக்காயை எடுத்து மாட்டிக் கொண்டு மெதுவாக வெளியே கிளம்பி விட்டான். இனி, கை கால் அலம்பச் சொல்லும் சாக்காக சாவித்திரி மேலே வந்து சாப்பிடச் சொல்லுவாள். இன்று அவனுக்குத் துளி கூடப் பசி கிடையாது. ஆனால் இதைச் சாவித்திரி ஒத்துக் கொள்வாளா? வேண்டிக் கொள்வாள்; முடியா விட்டால் பிடிவாதம் செய்வாள். கடைசியில் வருத்தப் பட்டுக் கொண்டு செல்லுவாள். சிநேகிதையின் இந்த உபசாரத்தை தன் வாழ்க்கையிலேயே இன்று தான் உண்மையிலேயே வெறுத்துத்

தன்னை விடுவித்துக் கொண்டான்.

வழியில் சென்று கொண்டிருக்கும் போது சேணியர் வீதித் திருப்பத்திலே யாரோ, "சின்ன பாபு" என்று கூப்பிடுவது காதில் விழுந்தது.

சதீஷ் திரும்பிப் பார்த்ததும், "மோக்ஷதாவா?" என்றான்.

மோக்ஷதா ரொம்ப நாளைக்கு முன் சதீஷ் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தாள். லீவு வாங்கிக் கொண்டு கல்கத்தா வந்திருந்தாள். பிறகு போக வில்லை. அவள், "ஆம், நான் தான். சின்ன பாபு, எனக்கு ஒரு கடிதம் படித்துக் கொடுக்கிறீர்களா?" என்றாள்.

சதீஷ் சிரித்துக் கொண்டு, "இவ்வளவு பெரிய பட்டணத்திலே உனக்குக் கடிதம் படித்துக் காட்ட ஒரு ஆள் கிடைக்கவில்லை? எங்கே கடிதத்தைக் கொடு?" என்றான்.

"கடிதம் வீட்டிலிருக்கிறது, பாபு! என்ன எழுதி யிருக்கிறதோ, ஆகையால் தெரியாதவர்களிடம் கொடுக்க மனம் வரவில்லை. எங்கள் வீட்டிலே ஒரு பெண் இருக்கிறாள்; அவளுக்கு எழுதப் படிக்கத் தெரியும். ஆனால் அவளையும் இரண்டு நாளாகப் பார்க்க முடிகிறதில்லை. இரவு ரொம்ப நேரம் கழித்து வீட்டிற்கு வருவதால் நேர மிருப்பதில்லை" என்றாள்.

"உன் வீடு எவ்வளவு தூரத்திலிருக்கிறது?"

"இங்குதான்; இங்கிருந்து கொஞ்ச தூரந்தான். பெரிய வீதிக்குப் பக்கத்திலே ஒரு சந்திலே. பாபுஜி, உங்கள் இருப்பிடத்தைச் சொல்லுங்கள். நாளைக்கு நானே ஒரு ஆளைக் கூட்டிக் கொண்டு வந்து படித்துத் தெரிந்து கொள்கிறேன்."

சதீஷ் சரி யென்று தன் இருப்பிடத்தைத் தெரிவித்தான். எங்கு வந்து வரவேண்டு மென்பதையும் சொன்னான். சிறிது தூரம் சென்ற பிறகு வேலைக்காரி நின்று கொண்டு, "சொல்லுவதற்குக் கூடப் பயமாயிருக்கிறது. பாபு, நீங்கள் கொஞ்சம்............ வீடு ரொம்ப தூரமில்லை" என்றாள்.

சதீஷ் ஒரு கணம் யோசித்து விட்டு, "சரி, வா" என்றான்.

இன்று விடுதிக்குப் போவதற்கே அவனுக்குத் துளியும் விருப்ப மில்லை. இன்று ரொம்ப நேரம் கழித்து, சாவித்திரி வீட்டிற்குப் போன பிறகு விடுதிக்குப் போவது என்று மனதில் எண்ணிக் கொண்டுதான் வெளிக் கிளம்பினான். ஆகையால் சுலபத்தில் இணங்கி விட்டான். இரண்டு வீதியைக் கடந்த பிறகு ஒரு இரண்டடுக்கு மாடி வீட்டுக்கு முன் வந்து சேர்ந்தார்கள்.

'கொஞ்சம் இருங்கள்' என்று கூறி விட்டு மோக்ஷதா உள்ளே சென்று ஒரு மண் விளக்கை எடுத்துக் கொண்டு வந்தாள். பிறகு சதீஷை மேலே அழைத்துக் கொண்டு சென்றாள். மேலே மூலை அறையில் தீபம் எரிந்து கொண்டிருந்தது. அவள் அந்த அறையைக் காட்டி மிகவும் பணிவாக, "அங்கு உட்காருந்திருங்கள். இதோ வந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றாள். அந்தச் சின்ன அறையின் நேர்த்தியைக் கண்டு சதீஷ் திருப்தி அடைந்தான். ஒரு பக்கத்தில் நன்றாகத் தேய்த்துச் சுத்தம் செய்யப் பட்ட பித்தளைப் பாத்திரங்கள் வைக்கப் பட்டிருந்தன. அதற்குப் பக்கத்தில் ஒரு தூக்கில்

சில துணிகள் தொங்கிக் கொண்டிருந்தன. சுவரில் ஒரு சிறிய டைம்பீஸ் மாட்டப் பட்டிருந்தது. அதில் மணி எட்டு ஆகியிருந்தது. சதீஷ், நிலவுவாசல் படியருகில் செருப்பைக் கழற்றி விட்டு, பால் போன்ற விரிப்பு விரித்திருந்த கட்டிலில் போய் உட்கார்ந்து கொண்டான். இன்னும் அறையிலுள்ள சாமான்களை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான். முதல் முதலாக அவன் பார்வை அங்கு இருந்த சிறிய அலமாரியின் மேல் பட்டது. அதில் சில புத்தகங்கள் அழகாக அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. சதீஷ் ஒரு புத்தகத்தை எடுத்து முதல் பக்கத்தைப் புரட்டியதும் அதில் ஆங்கிலத்தில், 'புவன சந்திர முகோபாத்தியாய' இயற்றியது என்று எழுதியிருந்தது. அந்தப் புத்தகத்தை வைத்துவிட்டு, வேறு இரண்டு மூன்று புத்தகத்தை எடுத்துப் பார்த்தான். அனைத்திலும் ஒரே பெயரைப் பார்த்ததும் அவன் புத்தகங்களை ஒழுங்காக அடுக்கி வைத்து விட்டு வந்து உட்கார்ந்து கொண்டான்.

மோக்ஷதா ஹுக்கா கொண்டு வந்தாள். சதீஷ் ஹுக்காவைக் கையில் வாங்கிக் கொண்டு, "உன்னுடைய இந்த அறை வெகு சுத்தமாக இருக்கிறது. இதை விட்டுப் போவதிற்கே மனதில்லை" என்ருன்.

மோக்ஷதா புன்முறுவலுடன், "எதற்காகப் போக வேண்டும்? உட்காருங்கள். ஆனல் இந்த அறை என்னுடையதல்ல; இது வேருரு பெண்ணுடையது" என்ருள்.

"சரி, புவன பாபு எப்போது வருவார்?"

"யார் புவனபாபு?"

"புவன சந்திர முகர்ஜியை உனக்குத் தெரியாது?"

"ஓ ஹோ! நம்ம முகர்ஜியா? இல்லை இல்லை; இனி அவர் இங்கு எதற்கு வருகிருர்?"

"ஏன்? அவர் என்ன இறந்து விட்டாரா?"

"இல்லை, இறக்க வில்லை. இறந்திருந்தால் தேவலாமே. அவர் பிராமணர், குருநாதர். எங்களுடைய சிரோன்மணிதான். ஸ்ரீமந் நாராயணருக்குச் சமானம். அவரை தூஷிக்க நான் விரும்ப வில்லை. அவருடைய பாத தூளியை சிரமேல் தரிக்கிறேன். ஆனல் எப்போதாவது கண்ணில் கண்டால் எண்ணிக் கொண்டு துடைப்பத்தால் மூன்று அடி அடிக்காமல் விட்டால் என் பெயர் மோக்ஷதா அல்ல!"

இதைக் கேட்டுச் சதீஷ் சிரித்தான். "கோபத்திலே பிராமணனை பாவ புண்ணியத்திற்கு அஞ்சாமல் அடித்து விடாதே. ஆனல், பக்தியுடன் எண்ணிக் கொண்டு அடித்தால் ஒன்றும் பாபம் வராது, ஆனல் அவர் யார்?" என்ருன்.

"பாபு, அவனை யாரென்று சொல்லட்டும்? அவன் பிராமணனல்ல சக்கிலியன். இந்த அப்பாவிப் பெண்ணை இங்கே விட்டு விட்டுப் போய் விட்டான். இது தான் சொந்த மனிதனுடைய காரியமா? ராம், ராம்! ஒரு சாண் கயிற்றுக்குக் கூடவா பஞ்சம்?"

சதீஷ் மிகுந்த உற்சாகத்துடன், "அவர் யார்? அவர் என்ன செய்து விட்டார்?" என்ருன்.

திடீரென கதவுக்கு வெளியிலிருந்து பதில் வந்தது. "அவரை உங்களுக்குத் தெரியாது. அவரைப் பற்றிக் கேட்பதில் உங்களுக்கு என்ன லாபம்?"

சதீஷ் திடுக்கிட்டான்.

மோக்ஷதா மறுபுறம் திரும்பிக் கொண்டு, "சப்போ, நீ எப்போது வந்தாய்?" என்றாள்.

சாவித்திரி அறைக்குள் நுழைந்து கொண்டு, "இப்போது தான் வருகிறேன். சின்னம்மா, பாபு சாகப் எங்கே கிடைத்தார்?" என்றாள்.

"இவர் எங்கள் சின்னபாபு சாவித்திரி! அம்மாளிடமிருந்து கடிதம் வந்து இரண்டு நாளா யிற்று. இதை தயவு செய்து படித்துக் காட்டும்படி பாபுவிடம் சொன்னேன்.

"உன் அறைக்குக் கூட்டிப் போவது?"

மோக்ஷதா வருத்தத்துடன், "கோபமடையாதே சப்போ! என்னுடைய அறை பெரிய மனி தர்கள் உட்காருவதற்கு லாயக் கற்றது. இதனால் தான் உன் அறைக்குக் கூட்டி வந்தேன். இவர் ரொம்பப் பெரிய குடும்பத் தைச் சேர்ந்தவர். நீ இதற்காகச் சந்தோஷப் பட்டிருக்க வேண் டும்" என்றாள்.

"நான் ஏன் கோபிக்கிறேன் சின்னம்மா? கோபக்காரியின் பேச்சு ஒரு பேச்சா? ஆனால் இப் படிச் சும்மா தயவு செய்யச் சொல்லுகிறாயே! பாபுஜிக்கு ஏதா வது சாப்பிடுவதற்குக் கொடு. ஆமாம் பிராமணராச்சே; ஏதா வது சாப்பிடுவாரா?"

சதீஷ் மிகுந்த வெட்கத்துடன் தலை குனிந்து உட்கார்ந்து கொண் டிருந்தான். அவன் தலையை அசைத்துக் கொண்டு, "வேண் டாம்" என்றான்.

சாவித்திரி கேள்வி கேட்கும் தோரணையைக் கண்டு மோக்ஷதா திடுக்கிட்டாள். "அடீ, சாவித் திரி! இதை இப்படியா கேட்பது? பெரிய மனிதரோடு இப்படித் தான் பேசுவதா?"! என்றாள்.

சாவித்திரி சிரிப்பை அடக்கிக் கொண்டு, "நான் ஒன்றும் சொல் லக் கூடாததைச் சொல்லிவிட வில்லையே சின்னம்மா! சரி, நான் சாப்பிடுகிறீர்களா என்று அவ ரைக் கேட்கவில்லை. நீ கடைக் குப் போய் ஏதாவது வாங்கி வா. நான் அதற்குள் எல்லாம் தயார் செய்து வைக்கிறேன்" என்றாள்.

மோக்ஷதா என்னவோ முனகிக் கொண்டே அங்கிருந்து சென்று விட்டாள், அவள் போன பிறகு சாவித்திரி, "நேற்று ராத்திரியிலி ருந்தே உபவாசம். சாயங்காலம் எப்படி ஓடி வந்தீர்கள், துளி கூடத் தெரிய வில்லையே? எழுந்தி ருந்து பூஜை செய்து விட்டுச் சாப் பிடுங்கள். அந்தத் தூக்கில் துவைத்த துணி இருக்கிறது. எடுத்து உடுத்திக் கொண்டு என் னோடு வாருங்கள். நேரம் செய் யாதீர்கள்" என்றாள்.

"எனக்குப் பசி இல்லை என் றான் சதீஷ்.

"இல்லா விட்டாலும் சாப்பிட் டாக வேண்டும். முதலாவது, உங்களுக்குப் பசி இல்லை என் பதை நான் நம்ப வில்லை. இரண் டாவது........."

"இரண்டாவது காரணம் என் னவாகவே இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் முதல் கார ணம் ரொம்பச் சரி. நீ எந்த விஷ யத்திற்கும் பிடிவாதம் செய்கிறாய். உனது பிடிவாதத்திற்கு முன் பிழைக்க முடியாது."

சாவித்திரி சிரித்துக் கொண்டு, "பின் வீணாக எதற்கு முயற்சி செய்கிறீர்கள்?" என்றாள்.

(தொடரும்)

கோடையும் குளிர் நிழலும்

[வித்துவான். அ. கிருஷ்ணமூர்த்தி]

ஒரு பள்ளிக்கூடத்து மாணவனைப் பார்த்து, இரண்டொரு பாலைவனத்தின் பெயரைச் சொல்லு என்றால், சகாராப் பாலைவனமும், அரேபியப் பாலைவனமுந் தான் அவன் நினைவுக்கு வரும். இந்தியாவில் பாலைவனம் இருக்கிறதா? என்றால், தார்ப் பாலைவனம் இருக்கிறது என்று சொல்லக் கூடிய மாணவர்கள் குறைவாகவே இருப்பார்கள். சரி! இந்தப் பாலைவனங்களைப்பற்றிப் புத்தகத்தில் எவ்வளவோ படிக்கின்றோம். ஆனால் படித்தவர்கள் நம் நாட்டில் எத்தனை பேர் இருப்பார்கள்? நான் நினைக்கிறேன், அவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம் என்று. நாம் படிப்பதையெல்லாம் நேராகப் பார்த்து விட முடிகிறதா? முடிவதில்லை. ஆனால் படித்ததையும் கேட்டதையும் வைத்துக் கொண்டு, தன்னுடைய அறிவினால், தன்னுடைய மனக் கண்ணிலே ஒரு நொடியில் பெரிய பெரிய புதிய உலகங்களைப் படைத்து, அந்த உலகத்தில் உயிர்களைப் படைத்து, அவைகளை ஆளக்கூடிய பெரிய சக்தியையும் மனிதன் பெற்றிருக்கிறான்.

இந்த சக்தி இயற்கையாகவே அவனிடம் அமைந்திருக்கிறது. இதனால் மேலே சொன்ன பாலைவனங்களைக் கேட்டவுடனே, "எங்கு பார்த்தாலும் பரந்து கிடக்கிற மணல் வெளி; நினைத்ததும் நெஞ்சைச் சுடுகிற கொடிய வெயில்; அங்கும் இங்கும் சிதறிக் கிடக்கிற முள்ளுப் புதர்கள்; சில சில ஈச்ச மரங்கள்; எங்கேனும் புதர்கள் தீப்பிடித்து எரிதல்; தண்ணீர் ஓடுவது போலக் கானல் வீசுதல்; வெயிலின் வேகத்தோடு சேர்ந்து வீசுகின்ற நெருப்புக் காற்று; காற்றினாலே அள்ளி வீசப்படுகின்ற மணல் மாரி; இதற்கெல்லாம் தப்பித்து, அடிவானத்தை ஒட்டி, எங்கேனும் ஒரு மூலையில் செல்லுகின்ற ஒட்டகக் கூட்டம்— ஆகியவை நம் மனதில் தோன்றி மறைகின்றன. இத்தகைய பாலைவனங்களை நினைக்கும் போதும், நமது தமிழ் நாட்டில் பாலைவனம் இல்லை என்றே சொல்லலாம். காடு, மலை, நாடு, கடற்கரை — இந்த நாலு வகையான நிலத்தையே நமது நாட்டில் காணமுடிகிறது. இதனால் தான், தமிழர்கள், நிலத்திற்கு 'நானிலம்' என்று ஒரு பெயரையும் சூட்டினார்கள். ஆயினும், பழைய தமிழ் பாடல்களில், பாலை நிலத்தைப் பற்றிய வருணனைகள் அடிக்கடி வருகின்றன. அப்படியானால், ஏன் பாலை நிலத்தையும் சேர்க்க வில்லை? என்ற கேள்வி உண்டாவது நியாயந்தானே! நியாயந்தான் என்றாலும், அதற்குக் காரணம் உண்டு. தமிழர் கண்ட பாலைவனம், அரேபியா, சகாரா போன்ற பாலைவனங்கள் அல்ல.

புல்வெளி, மேட்டு நிலங்கள், மலைப்பாங்கான இடம்— இவையெல்லாம், வெயில் கொடுமையாக வீசுகின்ற கோடைக் காலத்திலே, தம் வளமெல்லாம்

கெட்டுப் பாழாய்ப் போகின்றன. பாழாகிப் பாலை நிலத்தின் குணத்தை அடையும் போது, அவை பாலை நிலம் என்று அழைக்கப் படுகின்றன. "அப்பா! என்ன பாலைவன மாதிரி எரிக்கின்றதே" என்று சொல்லுவதில்லையா? ஆம்; இப்படிப் பட்ட இடங்களைத் தவிரத் தனியாகப் பாலை நிலம் என்ற பகுதியே, தமிழ் நாட்டின் இயற்கை யமைப்பில் இல்லை. இந்தச் சின்னஞ் சிறு குட்டிப் பாலைவனங்களைப் பற்றி நமது புலவர்கள் பாடியிருப்பதைப் பார்த்தாலே நமது நெஞ்சு நடுங்குகிறது. உண்மையாகவே, அவர்கள் சகாராப் பாலைவனத்தைப் பார்த்து — அதன் துயரத்தில் அடிபட்டிருந்தால் எப்படிப் பாடியிருப்பார்களோ தெரியாது.

தெரிந்த வரையில், இந்தப் பாலைகள் பாழாய்ப் போன கொடிய நிலம். அங்கே உண்ண உணவுண்டா? இல்லை. குடிக்க நீருண்டா? அல்லது ஒண்ட நிழல் தான் இருக்குமா? மாதிரிக்கு ஒரு மனிதன் இல்லை; ஆறுதலுக்கு ஒரு ஓசை என்றால், அதற்கு ஒரு இனிய பறவை கூட இல்லையே; உலகத்திலே — உயிர்களால் — ஒதுக்கப் பட்ட ஒரு இடம், இந்தப் பாலைவனம் — அரக்கு நிலம் — நெருப்பு உலகம்.

எங்கேனும் சிலர் திரிவதைக் காணலாம்; அவர்கள் யார்? கொடிய கள்ளர்கள் அல்லது கொலைகாரர்கள்! செடிகள் படர்ந்திருக்கும்; அவை, கள்ளிச் செடியாக இருக்கும். மரங்கள் நிற்கும்; ஆனால் மொட்டை மரம். கொம்புகள் இருக்கும்; அவை தீப்பற்றி எரியும்! பறவையோ பருந்தும் கழுகும்; பாதையோ சிக்கல் நிறைந்தவை.

ஆம்; வாழ்க்கையிலும் பல சிக்கல்கள் உண்டு; அதில் வழி தெரியாமல் தடுமாறும் இளைஞர்களும் உண்டு. கள்ளியைக் கடந்து — கள்ளரைக் கடந்து — கழுகையும் கடந்தால், நெடுகவே பாலைவனமாகவா இருக்க முடியும்? உலக முழுவதுமே பாலைவனமா? ஒரு நாளும் இல்லை. பாலைவனத்திற்கு அப்பால் பசுமையான தென்றல் உண்டு. தென்றலை வீசும் கடற்கரைச் சோலையுமுண்டு.

முயற்சியிலே உந்தி ஏறி, ஊக்கத்திலே அடிவைத்து, உழைப்பிலே நடப்பவன் — ஆண் மகன் — அவனுக்கு உறுதியாக உண்டு இத்தச் சோலையும் மாலையும் தென்றலும். அவன் உண்மையைக் காதலிக்க வேண்டும்; கடமையை உணர வேண்டும்; வழியில் பல தவறுகள் வரலாம்; அவை தவறுகளல்ல. இந்த உண்மையை நன்றாக அறிந்தவர்கள், நமது தமிழர்கள். இன்றைக்கும் நமது கண்ணெதிரே பாக்கிறோம்; பல்லாயிரக் கணக்கான தமிழர், கடல் கடந்து பல நாட்டிலும் போய்ப் பாடு படுவதை. அவர்களுடைய ஊக்கமான நெஞ்சைப் பாராட்டுகிறோம். ஆனால், அவர் துயரத்திற்கு வருந்துகிறோம். ஏன்? அவர்களை அங்கு யார் அனுப்பி வைத்தார்கள்? நாமல்லவா? அதனால் தான்.

இவர்கள் போய் அந்த நாடுகளில் இன்று அடிமையாகவும், கூலியாகவும் இருக்கலாம். ஆனால், இவர்களுடைய உறுதியும் துணிச்சலும் இன்று நேற்றல்ல; பல்லாயிரக் கணக்கான வருடங்களாக இவர்களுக்குப் பரம்பரையாக வந்த பழக்கம். பழந் தமிழர்கள் மலை, காடு, ஆறு, கடல் என்று பார்க்காமல் சிந்தை போன இடத்தி லெல்லாம் போய் வியாபாரம் செய்து பொருள்

திரட்டினர்கள். "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்று சொன்னர்களே, என்ன அருமையான மொழி பாருங்கள்.

தற்காலம் போலப் பிறர் கையைப் பார்த்துக் குடும்ப வாழ்க்கையைத் தொடங்குவது பழைய காலத்து வழக்கமல்ல. ஒரு ஆண்மகன் ஓரளவு பொருளைத் தன் முயற்சியால் திரட்டிய பிறகு தான், ஒருத்தியை மாலை சூட்டி இல்லறத்தில் நுழைவது வழக்கம். நுழைந்த பின், அதிலேயே மயங்கிக் கிடப்பானு? அதுவுமில்லை; அப்பொழுது அவனுக்குப் பொருப்புணர்ச்சி வருகிறது; கடமையுணர்ச்சி வருகிறது. சில காலம் போய், மேலும் பொருள் திரட்டப் போவான். தமிழனுடைய உண்மையான பிறவிக் குணங்களை சங்க இலக்கியங்களில் நன்கு காணலாம். ஒரு இளைஞன் தன் காதலியைக் கலியாணம் செய்து, அவளோடு வேடிக்கை விநோதங்களை நடத்துவதைவிடத் தளராத ஊக்கத்தோடு மலையுங் காடுங் கடந்து—பாலைவனங்களைத் தாண்டிச் செல்லும் பகுதிதான் எங்கு பார்த்தாலும் கூறப்பட்டிருக்கிறது. ஏன்? அவர்கள் தங்கள் வாழ்க்கையின் பொறுப்பையும், கடமையையும் நன்குணர்ந்தவர்கள். ஆ! அந்த உணர்ச்சியின் வேகம், பாலைவனத்தின் கொடுமையைக் கூட அடிமைப் படுத்துகிறது!! பாலைவனத்தின் கொடுமை இருக்கட்டும்; காதலியைப் பிரிந்து செல்லும் கொடுமை, அதைவிடக் குறைவானதா? இந்த இரண்டு கொடுமையும் சேர்ந்தால்.........?

பாவம்! இளைஞன்! தலைமைக் குணமுண்டு; அதுமட்டுமா? நல்ல நெஞ்சழுத்தங்கூட; பரந்த மார்பு, நிமிர்ந்த தோள்கள்; கன்னங் கரிய தலைமயிர்; உறுதியைக் காட்டும் கண்கள்; வில்லேந்திய கை; அறிவு நிறைந்த உள்ளம்; நல்ல ஆண்மகன்; அழகன்; அவன் ஒரு தமிழன்.........

அவள் ஆசையின் கனி; சிவந்த மேனி; கரிய கூந்தல்; புன்னகை முறுவல்; மெல்லிய சாயல்; பெரிய தோள், சிறிய இடை; குழைந்த நெஞ்சு, தளர்ந்த நடை, பருவமோ இளமை, முதிர்ந்த அறிவு, அழகு பூத்த ஒரு பூங்கொடி; அந்த அழகை அள்ளி விடலாம். அவளோ ஒரு தமிழ் மகள்.

வாழ்க்கை என்பது ஒரு பூஞ்சோலை; அதிலே கட்டிய இல்லற ஊஞ்சலில் அழகியும் அழகனும் ஆடினர்கள். அதைத் திங்கள் அறியும்; தென்றலும் அறியும். சில காலம் அதில் ஆடிய பிறகு.........

ஒரு நாள்—உலக முயற்சிகளில் இவன் மனம் ஈடுபட்டது. பல நாள் தன் மனத்தோடு போராடினன். பலவிதமாக நினைத்தான்; இவளையும் பிரிவதா? அது எப்படி நடக்கும்? இது மாயம்: நெஞ்சே! நீ வஞ்சிக்கிருய்; என்று பலவிதமாகத் தயங்கினன். தயங்கி என்ன பயன்? உலகக் கட்டு விடுமா? எந்நாளும் இன்பமே உண்டா? இந்த இன்பத்தை அதிகப்படுத்துவது போல் அவன் பிரிய வேண்டிய துன்பம் வந்தது. எத்தகைய பிரிவு? காடு கடந்து, மலைகள் கடந்து — பாலைநிலங்களையும் கடக்க வேண்டிய பிரிவு! பொருள் தேடும் பிரிவு. ஒரு காட்சி:

கன்னி: ஐயோ, அவர் எந்த வழியில் செல்லுகிருரோ? வழியில் கள்ளர் பயம் என்று சொன்னர்களே! கல்லும் முள்ளும் நிறைந்த வழியில் அந்தக் கால்கள் எப்படி நடக்கும்! செஞ்சமே, நீ

சென்று அந்தக் கால்களைத் தாங்க மாட்டாயா? தோழீ! அவர் அன்பில்லாதவர் பிரிந்து போனார் என்று சொல்லுகிறாய்; நான் இதை நம்ப மாட்டேன்; எனக்குத் தெரியும் அவர் நெஞ்சு, என்னுடைய நெஞ்சு!

அவனுடைய கால்கள் பாலை வனத்தை மிதிக்கின்றன. ஓரடி எடுத்து வைக்கிறான், அவன் மனம் பின்னால் பத்தடி ஓடுகிறது! மெல்லிய பஞ்சணையை நினைக்கிறான்; கொடிய பாலையையும் நினைக்கிறான். விளக்கு வெளிச்சம் போய்க் கானல் வெளிச்சம் வீசுகிறது. பூங்கொடியைக் கண்ட கண்கள் பொறி பறக்கும் கள்ளிச் செடியைப் பார்க்கின்றன. கற்கள் குத்துகின்றன—நடக்கிறான்.

கன்னி: பாவம், எங்கே போகிறாரோ? நான் கூடப் போயிருந்தாலும் அவர் உடல் வருத்தமாவது தணியுமே! நெஞ்சே, நீ எப்படி அவரைப் போக விட்டாய்? எனது தோழர், எனது நண்பர், எனது காதலர், வாழ்க்கையின் சிற்பம்; சிந்தனைச் செல்வம்! இன்பத்தின் இருப்பிடம்; இந்தச் சூரியனுக்குத் தெரியுமா அவர் உடலின் அருமை! தோழீ! அவர் ஒரு விளையாட்டுக்காவது நம்மிடம் பொய் சொன்னதுண்டா! என்ன பெருங்குணம்! அவர் ஒரு பெரியவர் அல்லவா? அறிவாளிதானே? சிறந்த ஆண் மகன்!

ஊடற்காலத்தில் கூட, அவள் இனிமையாகத் தானே பேசுவாள், என்று நினைக்கிறான்; ஆனால் அங்குக் குழறிக்குழறிக் கூவுகின்றது கோட்டான். அழகிய மாளிகையின் மேல் தளர்ந்த பூங்கொடி போல் அவள் நிற்பதை நினைக்கிறான். இந்தப் பாலையில் மரங்கள் வறண்டு நிற்பதையும் பார்க்கிறான். அழகிய வீதிகள் இல்லை; சிக்கலான பாதைகள், வீடுகள் இல்லை; குன்றும் குழியும் உண்டு. பாலைவனமும் சுடுகிறது; அவன் காதல் மனமும் சுடுகிறது.

கன்னி: அவரைப் போக்விட்டு, என் நெஞ்சும் உயிரும் இங்கு ஏன் இருக்க வேண்டும்? இந்தப் பஞ்சணையில் ஒருகாலத்தில் அவர் இருந்தது உண்மைதானா? ஆம்; உண்மைதான். வஞ்சி! என்று சொல்லி இந்தப் பஞ்சணையிலே அவர் கொஞ்சினாரே அந்தப் பஞ்சு போன்ற நெஞ்சு இப்பொழுது என்ன பாடுபடுமோ? ஏ! மாமணி விளக்கே! என்னுடைய அழகு எனக்குமில்லாமல்; அவருக்குமில்லாமல், இப்படியும் கெடுவதா? தோழீ! யாரோ இடுகின்ற அன்பில்லாத உணவைத் தானே உண்பார்; அந்த உணவை என்னுடைய கை தொட்டுப் பல நாளாயிற்றே!

நெருங்கிப் போகப் போக நெருப்புச் சுடுகிறது; பிரிந்து போகப் போகக் காதல் சுடுகிறது; நெருப்புச் சுடுவது வெளியே, காதல் சுடுவது உள்ளே; நினைப்பின் வேட்கை பெருகிற்று; நீரின் வேட்கையும் பெருகிற்று. இவனைத் துரத்துகிறது அவளுடைய மெல்லிய நெஞ்சம்; அதை எதிரேற்று அழைப்பது போலப் போகிறது இவனுடைய காதல் உள்ளம். உள்ளமும் வெந்தது, உடலும் வெந்தது. நண்பர்கள் இல்லை, நாய்கள் உண்டு. தோழர்கள் இல்லை, கள்ளர்கள் உண்டு. ஒரு காலத்தில் அவன் ஆடிய ஊஞ்சலை நினைக்கிறான்; கூடவே அசைந்த பூங்கொடியையும் நினைக்கிறான்; அந்த இளமை ஆசை பின்னுக்கு இழுக்கிறது; பொருளின் ஊக்கம் முன்னுக்கு இழுக்கிறது. அந்த ஊஞ்சலைப் போலவே

முன்னும் பின்னும் அசைந்தது, அந்த ஆண் மகனின் அசையாத நெஞ்சம்.

தனது நெஞ்சின் ஆட்டத்தைச் சிறிது நிறுத்தினன். தலைமையும், பெருமையும், ஆண்மையும், அழுத் தமும் ஆண் மகனுக்கல்லவா? இவ்வளவு தூரம் வந்த நீ, நெஞ்சே! இனித் திரும்புவதும் அழகா? வீரமா? வெட்கமில்லை! பாலைவனத்தின் கொடுமையை உனக்கு முன்னமே சொன்னேன். நீ நடு வழியில் வஞ்சனை செய்வாய் என்று எத்தனை நாள் உன்னோடு நான் போர் செய்தேன்; அந்தி மாலை, நிலா வெளிச்சம், யாழின் இன்பம், மந்தமாருதம், மல்லிகை மணம், மெல்லிய சாயல் இவைகளைப் பலதரம் உனக்குச் சொன்னேன், நினைப்பூட்டினேன்; இவ்வளவு செய்தும் என்னை இட்டு வந்தாய்; அங்கே வஞ்சமில்லாத அவள் நெஞ்சை வஞ்சனை செய்தாய்; இங்கு—இந்தக் கொடும் பாலையில்—நடு வழியில், என்னை வஞ்சிப்பதா? திரும்பிச் செல்வது ஆண்மையா? உன் கடமை உணர்ச்சிக்கு அது ஒரு அழகாகுமா? உன்னைச் சுற்றியுள்ள உலகத்தோடு உனக்கு வேறு பொறுப்பு கிடையாதா? அவளைத் திரும்பிப் போய்க் காணவேண்டுமா? அவள் மாலையை ஆசைப் படுகிருயல்லவா? முன்னலே போ, அடியை நீட்டி நட; பொருளைத் திரட்டு விரைந்து; விரைவிலே அவளைத் திரும்பவும் பெறலாம். ஊக்கங் கொள்; உம்! நீ தானே புறப்பட்டாய்; படு; துயரமா? போகட்டும் பொறு; எழு.

கன்னி: போக வேண்டாம் என்று எவ்வளவு சொல்லியும் போனரே; அன்று, முதல் நாள், சோலையிலே, என் கையை தன் மாணிக்கக் கையால் பற்றி, “உன்னைப் பிரியேன், பிரிந்தால் உயிர் வாழேன்” என்று சொன்ன சொல்லையும் மறந்தாரோ! தோழீ! எங்கள் மாலைகள் ஒன்றை ஒன்று தழுவின; இரண்டு பேர் உள்ளமும் கலந்தது அன்று. இன்றோ; உள்ளம் ஒன்றுதான், மாலையோ நெடுந்தூரம் பிரிந்தது! அவரும் என்ன துயரம் அடைகிருரோ? அடவியிலே எனை மணந்த மணவாளா!

மனதை உந்தி உந்தித் தேற்றிக் கொண்டு சென்றவன், வழியிலே சிறுகூட்டத்தாரோடு சேர்ந்தான்; அவர்கள் வியாபாரிகள் கூட்டம். பாழும் பாலையில் அடிபட்டு ஓரிடத்திலே இராப் பொழுதில் படுத்தான்; சூரியன் புறப்பட்டதும் தானும் புதிய உணர்ச்சியுடன் புறப்பட எண்ணி: அதற்குள் எத்தனை எத்தனையோ கனவுகள்! அந்த ஆசையை அடக்க முடியுமா? புலம்புகிருன், “கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே, உன்னுடைய நிழலுக்கு நான் என்று வருவேன்” என்று.



பீபி நாச்சியார்

[ஜெயலட்சுமி ஆர். ஸ்ரீனிவாசன்]

இந்த இனிய காற்றிலே, என்ன அமுதத்தையா கலக்கிக் குழைத்திருக்கிறது? ஆகா! ஆனந்தம் ஆனந்தம் பரமானந்தம்! அடடா! என்ன, இந்த மலைச் சாரல் முழுதுமே பார்க்கப் பார்க்க ஒரே பரவசமாக இருக்கிறதே? இங்கென்ன காட்சி? புற்று. இந்தப் புற்றிலே ஏதோ சோபை ஜொலிக்கும் போல் இருக்கிறதே. அதோ, அழகாக ஆடி அசைந்து வரும் அந்தப் பசு ஏன் இங்கே நிற்கிறது? பாலைப் பொழிகிறதே. வெள்ளம் போல் பொழிகிறதே! என்ன விந்தை இது? யார் அங்கே "வா அப்பா, வாருங்கள். இந்த விசித்திரத்தைக் கொஞ்சம் எனக்கு விளங்கச் சொல்லுங்கள். இங்குள்ள துளசிச் செடியின் வனப்பும் வளப்பமும் இதற்கு முன் நான் பார்க்காத மாதிரி இருக்கிறதே. அடடே, என்ன பதில் பேசப் பயப் படுகிறீர்களே" என்று தனக்குள் பேசிக்கொண்டிருந்த அந்தப் பெரியவர், பக்கத்தில் வந்த அந்த இருவரிடமும் கேட்டு நிறுத்தினர்.

வந்த ஆட்கள் தோட்டத்திற்குப் போய் வேலை செய்வதையும் மறந்து பெரியவர் கேட்ட கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று அறியாமல் நின்று விட்டார்கள். பிறகு அவர்கள் மூலம் இது தினம் தினம், நடக்கும் காரியம் என்பதைக் கேட்டு பெரியவருக்கு சட்டென்று ஒரு யோசனை தோன்றுகிறது. அவர்கள், "தாழ்ந்த சாதிக்காரர்கள்" என்று சொல்லியதை வெறுப்புடன் கேட்டு, "சாதியிலே தாழ்ந்தது உயர்ந்தது என்று இல்லை. எல்லாம் கற்பனையில்லாக் கசடர் செய்த வேலை" என்று சொல்லிவிட்டு மீண்டும் ஆலோசனையில் ஆழ்ந்து விடுகிறார். பிறகு, "அப்பனே, நான் விரைவில் திரும்பி விடுகிறேன். இந்த இடத்தைப் பாங்காகப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து அந்தப் பெரியவர் புறப்பட்டு விடுகிறார்.

* * *

பனிரண்டாவது நூற்றாண்டின் ஆரம்ப காலம். ஆங்காங்கு சிறு சிறு குழப்பங்களும் கலகங்களும் நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது. டில்லியிலே பாதுஷா அஹமத்ஷாவின் அந்தப்புர நந்தவனத்தைச் சேர்ந்த ஒரு பளிங்குக் கல் மேடையிலே, பாதுஷாவின் குமாரி மும்தாஜ் உல்லாசமாக உட்கார்ந்திருக்கிறாள். யமுனை காலடியில் பிரவகித்து ஓடுகிறது. அவள் அருகே இன்னுயிர்த் தோழி, மந்திரியின் மகள் சுபத்திரை வீற்றிருக்கிறாள். இருவரும் ரொம்ப ரசமாகப் பேசிக் கொண்டிருந்த பேச்சின் மத்தியில் சுபத்திரை, "வெளியே இருக்கிற நிலைமையில் நாம் ஒன்றாகச் சேர்ந்திருப்பது ஆச்சரியம் இல்லையா?" என்று சொல்கிறாள். மும்தாஜ் அதைக் கேட்டுச் சிரித்தாள். "இது என்ன பிரமாதம்? என் செல்வன், நான் வணங்கும் இதயத் தெய்வம் உனக்குத் தெரியுமல்லவா?" என்

கிருள். அவள் கண்கள் ஏனே ஆனந்தத்தால் விரிகிறது. தோழி சிரித்துக் கொண்டே, "எங்கள் ராதை, கண்ணனை தியானித்ததை விட இது ஆச்சர்யம் தான்" நீ அந்த விக்கிரகத்தை (செல்வன்) அன்பு மலரால் துதிப்பதற்கு என்ன உபமானம் சொல்லட்டும் என்று சொல்கிருள். வேடிக்கையாகப் பேசிக் கொண்டே, "இன்று உன் செல்வனை சிங்காரித்து அழகு படுத்தி ஒரே அற்புதமாகக் காட்டுகிறேன் பார்" என்கிருள்.

மும்தாஜ் முகமும் உள்ளமும் மலர்கிறது.

அரண்மனையின் தனி அறை ஒன்றிலே, மல்லிகை முல்லை பரப்பிய பூமணம் மிகுந்த பஞ்சணையைச் சுற்றி 'ஜம்'மென வாசம் வீசும் ஊதுவத்திகள். காஷ்மீரத்துக் கம்பளி தரையை அலங்கரிக்கிறது. அங்குள்ள வர்ண விளக்குகளின் வர்ண விஸ்தாரம் வர்ணிப்புக்கு அடங்காது!

மும்தாஜின் பள்ளி அறை அலங்கரிப்புக்குப் பிறகு, தோழி விடை பெற்றுச் சென்று விடுகிருள். மறுநாள் இரு தோழிகளும் சந்திக்கையில் மும்தாஜின் முகம் சோர்ந்திருப்பதைக் கண்டு சுபத்திரை சோர்ந்து போனுள். "என்ன காரணம்?" என்று பதட்டத்துடன் கேட்டாள். "காரணமா? தந்தை கலியாணம் செய்து கொள்ளும் படி சொல்கிருர். எங்கெங்கிருந்தோ வந்திருக்கிருர்கள். பாரசீகத்து நவாப் துருக்கி சுல்தான்.........இன்னும் எத்தனையோ இடத்திலிருந்து...... கேட்கிருர்கள்"

"என் மணம் செய்து கொள்வதற்கு என்ன?"

"நான் தான் என் செல்வனை (மூர்த்தியை) உள்ளத்தில் வரித்தாயிற்றே. இனி, வேருெருவருக்கு இங்கு இடம் எங்கே?"

இதைக் கேட்டு சுபத்திரை சிரித்தாள். இந்த விசித்திரக் காதலின் விளைவு என்ன ஆகுமோ என அவள் அஞ்சினுள்.

பாதுஷாவும் தன் பெண்ணின் போக்கைக் கண்டு பச்சாதாபப் பட்டான். என்ன செய்வதென்று அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. இப்படி யோசித்துக் கொண்டே ஒரு நாள் தன் அறையில் உட்கார்ந்திருக்கும் போது, யாரோ ஒரு பெரியவர் அவனைப் பார்க்க வந்திருப்பதாக சேவகன் வந்து தெரிவித்தான். வந்த பெரியவரைக் கூப்பிட்டுக் காரணத்தைக் கேட்டான்.

"ஒரு மூர்த்தியைத் தேடி வந்திருக்கிறேன்"

"மூர்த்தியா? என்ன அது?"

"இங்கே ஒரு விக்கிரகம் இருக்கிறது"

"விக்கிரகம் ஒன்றுமில்லை. என் மகளுக்கு என்னவோ கிரகம் தான் போல் இருக்கிறது"

"இல்லை, இல்லை அந்த மூர்த்தி உங்கள் மகளிடமே இருக்கிறது. கனவில் கண்டேன். ஆதலால் ஓடி வந்தேன்"

எப்படியோ மகளுடைய போக்குத் திருந்தினல் நல்லது என பெரியவரைத் தேடிப் பார்த்து எடுத்துக் கொள்ளும்படி பாதுஷா அனுமதி தந்து விட்டான். வெகு நேரம் தேடிக் கடைசியாக, அந்தப் பெரியவர் தான் தேடும் பொருள் கிடைத்து விட்டதென்று எடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

யமுனையிலே விளையாடி விட்டு தன் ஆசைத் தோழியுடன் வந்த மும்தாஜின் உள்ளத்தில் என்னவோ சுருக்கெனத் தைத்த மாதிரி

இருந்தது. "ஐயோ, என் செல்வன் என்னை விட்டுப் பிரிந்துவிடுவாரோ?" என்று சுபத்திரையிடம் கேட்டாள்.

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?"

"அன்பர்களை விட்டு வேறு இடத்தைத் தேடிப் போவதுதான் செல்வன் செயல் ஆச்சே. என்னிடமும் அப்படித்தான் செய்வாரா?"

சுபத்திரை சும்மா இருந்தாள்.

மாலைக் கிரணங்கள் யமுனையின் நீரிலே பட்டு பலவித விசித்திரமான வர்ணங்களை நிகழ்த்திக் காட்டிக் கொண்டே இருந்தது. அவள் உள்ளத்திலும் அப்படியே தான் ஒரு நூதன 'நாடகம்' நடந்து கொண்டிருந்தது,

அவள் எண்ணியது சரிதான் என்பது வீடு திரும்பியதும் தெரிந்து போயிற்று. செல்வன் இருக்க வேண்டிய இடத்தில் இல்லை! ஓடினாள், தேடினாள். ஆனால்...இதயத்தில் ஒரு காட்சி மின்னியது. புலனாகாத ஒரு வழி தென் பட்ட மாதிரி இருந்தது.

உடனே குதிரை லாயத்திற்கு ஓடினாள். தன் அன்புக் குதிரை ஒன்றிலே அமர்ந்து காற்றெனப் பறந்தாள். அவள் விருப்பத்தை அறிந்த மாதிரி அந்தக் குதிரை வேகமாகப் பறந்தது.

*　　*　　*

மேலுக் கோட்டையில் அன்று ஒரே கொண்டாட்டம். பெரியவர் ராமானுஜர் மூர்த்தியுடன் வந்து தக்க ஏற்பாடுகளைச் செய்து எல்லாப் பெரியார்களையும் அங்கு கூட்டியிருந்தார். அந்தக் கும்பாபிஷேக விழாவிலே பெரியவர் கட்டளைப்படி, குறிப்பிட்ட இடத்தைப் பாங்காக கவனித்த 'அன்பர்கள்' இருவரும் கலந்து கொண்டார்கள். இந்த ஆனந்தத்தின் மத்தியில் குதிரையிலே வேகமாக வந்த அந்தப் பெண் திடீரென அங்கு சாய்ந்தாள். புரவியும் அவள் போன இடத்தைப் பின்பற்றியது! ராமானுஜர் கண்களுக்கு, ஒரு ஜோதி அவளிட

மிருந்து தோன்றி, ஆண்டவனேடு ஐக்கிய மாகி விட்ட மாதிரி இருந் தது.

ராமானுஜர் கட்டளைப் படி மும் தாஜின் உடலை மலைச்சாரலின் கீழே உள்ள இரு குன்றுகளுக் கிடையே அடக்கம் செய்து ஒரு கோரியைக் கட்டினர்கள்.

இரண்டு வருஷங்களுக்குப் பிறகு ஒரு வசந்தகால மாலை நேரத்திலே இந்தக் கோரியின் கீழே ஒரு உருவம் உருக்கமான வணக்கத்தைச் செலுக்திக் கொண் டிருக்கிறது. "பெற்றேருக்காக ஆண்டவனிடம் அருள் வேண்டி நிற்கும் பிள்ளைகளைத்தான் உலகில் காண்கிறேம். குருவுக்கு வணக் கம் செலுத்தும் மாணுக்கர்கள் தான் எங்கும் உண்டு. ஆனல் நீ உயிருடன் இருக்கும் போது உன் மகிமை தெரியவில்லை. அம்மா மகளே! என்னை மன்னித்துவிடு!"

பாதுஷாவின் இந்த உருக்க மான வேண்டுகோளைக் கேட்டுத் தானே என்னவோ ஒரு குயில் மாவிலைகளைக் கோதியபடி தீங்கா னம் இசைத்துக் கொண்டிருந்தது.

இன்றைக்கும் அங்கொரு அதி சயத்தைப் பார்க்கலாம். மற்ற மரங்கள் இலை யுதிர்க்கும் போது அங்கேயுள்ள மாமரம் காய்த்துக் கனி குலுங்க நிற்கும்!

[கர்ண பரம்பரைக் கதையைத் தழுவி எழுதியது]

அட்டைச் சித்திரம்:

மங்கல வள்ளி

அழகு சொட்டும் திருவே — பர
மானந் தத்தின் உருவே — நீ
பழகும் இல்லறத்தில் — சௌ
பாக்கியங்கள் வளர்க!
மனைவி மக்கள் கணவர் — எங்கள்
மாடு சுற்றமெல்லாம் — காலை
வன மலர்கள் போலே — மன
மகிழ்வு பொங்க வேண்டும்.
பசுக்கள் செம்பு செம்பாய் — நல்ல
பால் சுரக்க வேண்டும் — எங்கள்
சிசுக்கள் இன்ப மழலை — பேசிச்
சீப்பிக் குடிக்க வேண்டும்!
தென்னை வாழை கரும்பு — விளை
செந் நெல் ஓங்க வேண்டும் — நிதம்
அன்ன தானம் செய்தே — நாங்கள்
அன்பொ டுண்ண வேண்டும்!
கற்புத் தெய்வ மேற்றும் — சாயங்
காலத் தீபந் தன்னின் — உன்
அற்புதப்புன் னகையை — மணிபோல்
அள்ளி வீச வேண்டும்!
ஆண்மை யோங்க வேண்டும் — பெண்மை
அன்பி னேங்க வேண்டும்...
கேண்மை யோங்க வேண்டும் — தாயே
கீர்த்தி யோங்க வேண்டும்!

— கதிரவன்

கலைக் கோயில்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

இப்போதும் அடிக்கடி கம்ப ராமாயணம் நடந்தே வந்தது. ஐயருக்குப் பிறகு கம்பனைப் படித்து வந்தவன் கந்தனே. கந்தன் சிவநேசத்தின் குமஸ்தாவானாலும், சமவுரிமையுடன் பேசினான். படித்தவன், அறிவாளி என்று சிவம் அவனை நன்கு மதித்தார், சிங்கத்திடம் அவனுக்குஉயிர். முத்தையா பிரிந்து சென்று குப்பையாக் கூட்டத்துடன் செய்யும் அநியாய லீலைகளைக் கந்தன் உளவறிந்து டாக்டர் சிங்கத்திடம் சொல்லி வந்தான். முடிவில் சுடலையாடியின் சித்தர் கூட்டத்தைப் பற்றியும் கப்ஸாமாயைப் பற்றியும் நகை ததும்பச் சொன்னான். டாக்டர் சிங்கம் சித்தர் கூட்டத்தை ஒருநாள் தரிசித்து வந்து, கந்தனை இரகசியமாகக் கூப்பிட்டு "சிவநேசத்திற்கு எச்சரிக்கை செய்" என்றார். கந்தன் அவ்வாறே செய்தும் சிவம் கேளாமல் ஹோரா சாமியுடன் சென்றான்.

20. சிவனே! சிவனே!

ஒருவாரம் ஓடிப்போனது. பத்திரிகை வாணங்களும் எதிர் வாணங்களும் காற்றைப் பிளந்து கொண்டிருந்தன; ஊர்ப்பறை போர்ப்பறை போல் அதிர்ந்தது. ஆனால் காரியம் ஒன்றும் கைகூடவில்லை; டாக்டர் சிங்கம் பத்திரிகைச் சரடுகளை நம்பவில்லை; அவர் பராங்குசத்தையே கேட்டார். "உளவு நடக்கிறது; களவு வெளிப்படும்; எல்லாரும் வியப்பீர்கள்" என்றார் பாராங்குசம்.

ஆனால் சிவநேசம் எங்கே? என்னவானார்? அவரை வஞ்சித்து மடக்கிய காவிக்—கள்ளர் யாவர்? சுடலையாடிச் சாமி எங்கே? பூதகணங்கள் எங்கே? கந்தனும் வேலனும் எங்கே? எல்லாம் புதிராயிருந்தன. சம்பவம் நடந்த வீடு வெளியில் பூட்டியிருந்தது. நெல்மண்டியும் போலீஸ் காவலில் இருந்தது. இரண்டையும் போலீஸ் வீரர் தினம் வலம் வந்து கொண்டிருந்தனர். மறுநாள் அங்கே வந்த பரதேசிகளையெல்லாம் கைதுசெய்து பராங்குசம் விசாரணை நடத்தினார். "எங்களுக்கொன்றும் தெரியாது சாது; சிவமுண்டு, வயிறுண்டு; கப்பறையில் சோறு விழுந்தால் உண்பது; திண்ணை கிடைத்தால் உறங்குவது — இரண்டே எங்கள் தொழில். கட்டையிருக்குமட்டும் கப்பறைச்சோறுண்டு கண்மூடிச் சிவபதம் சேருவதைத் தவிர நில்லா வுலகில் நேசமென்ன — வாழ்வாவது மாயம், இது மண்ணுவது

திண்ணம்......" என்று எல்லாரும் சாதித்தனர். மொகல் தெருவுக்கோ மங்கமாரித் தெருவுக்கோ இப்போது பரதேசிகள் வருவதேயில்லை — போலீஸ் பயம்! பல பரதேசிகள் இரங்கூனைவிட்டு மாங்தளைக்கு ஓடிப்போனுர்கள். டாக்டர் சிங்கத்தின் குறிப்பு மட்டும் வேருேரிடத்தில் இருந்தது — உல்லாச மாளிகையில். அவன் எங்கே டை (முத்தையா) என்றே ஆவலாகத் தேடினுன். டையின் பூட்ஸ் சத்தம் ஒருவாரமாக மொகல் தெருவில் காணும். அவனது நண்பன் குப்பையாவின் அட்டகாசத்தையுங் காணும். ஆட்டம் பாட்டமெல்லாம் அடங்கிப்போயிருந்தன. உல்லாசமாளிகைக் கதவும் அரிதாகவே திறந்தது. அங்கே பிஜிலி இருப்பதும் இல்லாததுங்கூடத் தெரியவில்லை— எல்லாம் குட்டாயிருந்தன. டாக்டர் சிங்கம் தன் அரிமாநோக்கை அங்கேதான் நாட்டினுன். அவன் உலகையும் மனிதவியல்பையும் வடிகட்டிப் பார்த்தவன். ஆகையால் இச்சம்பவத்தில் அவன் சிலரைச் சந்தேகித்துத் தன் உளவு வேலையை அடக்கமாக நடத்திக்கொண்டிருந்தான். சில காவி வேட்டிச் சாமிகளை அவன் வலை போட்டுத் தேடினுன். போலீஸ் பயத்தால் காவி ஆவியாய்ப் போயிற்று. கப்பறைச் சத்தம் அஞ்சி அடங்கிப் போனது.

முகல் தெரு என்ருலே சாமியார்கள் பயப்பட்டார்கள்.

அங்கே தைரியமாக நடமாடிய சாது ஒரே ஒருவரே — சட்டிச்சாமி; ஆகாசம் போன்ற திறந்த பேர்வழி; காற்றைப்போன்ற சுதந்திரர். இச்சம்பவம் நடந்த மறுநாள் சட்டிச்சாமி நெல்லு மண்டி முன் அரைமணி நேரம் நின்று போலீஸ் தடபுடல்களைப் பார்த்துக் கொண்டிருந்தது. பிறகு ஒருவாரம் சாமியை யாரும் பார்க்கவில்லை.

ஒரு நாள் டாக்டர் சிங்கம் நண்பருடன் சிவநேசத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். "சிவநேசம் பதினுயிரத்தில் ஒருவர்; ஈகைச் செல்வர்; இரக்கமே வடிவானவர்; சிறந்த தெய்வ பக்தர்; சுயநலமற்ற பரோபகாரி — ஆ அவருக்கும் ஆபத்து வந்ததே. அவரைக் கண்ணுல் காண்போமா...—" என்னும்போதே, "சாமி உடனே மோட்டார் போட்டு வரவேண்டும்..." என்று ஒரு குரல் கேட்டது — சட்டிச் சாமியார் அவசரமாக உள்ளே வந்தார்.

டாக்டர்: சாமி தங்களை எதிர்பார்த்தேன், சாப்பிடட்டுமே — உள்ளே வாருங்கள்.

சாமி: சாப்பாட்டிற்கு இது நேரமில்லை. சிங்கம் பாய்ந்து வரட்டும். தாமதம் கூடாது.

டாக்டர்: எங்கே? என்ன செய்தி

சாமி: பேச நேரமில்லை — உடனே மோட்டாரில் போவோம்; சிங்கம் தாவி வரட்டும்.

சட்டிச்சாமியிடம் சிங்கத்திற்கு அபாரமான பக்தியுண்டாதலால், உடனே மோட்டாரை முடுக்கினுன். சாமிசொன்னபடியெல்லாம் டாக்டர் வண்டியை ஓட்டினுர். மோட்டார் ஐராவதி நதிக்கரையில் ஒரு காட்டில் நின்றது.

மஞ்சள் வெயில் மறைந்தது; வானம் இரத்த நகை புரிந்தது. உலகில் நடக்கும் இரத்தக் கொடுமையைக் கண்டு கூனப்பிறை விசனப் புன்னகை புரிந்து நின்றது. வானோங்கிய மஹாகனி, தேக்கு தேவதாரு, கருங்காலி, வேங்கை முதலிய மரங்கள் அடர்ந்த ஐராவதிக் காட்டின் பசுமை கூட

இரத்த நகை யுமிழ்ந்தது. மலர்களின் உள்ளத்திற் புன்னகையில்லை. கனிகளின் இரத்தினச் சிரிப்பில் கோபக் கனல் வீசியது. புட்களெல்லாம் குரலடங்கிக் கூடடைந்தன. மனிதனின் வீணாப்புகளை நையாண்டி செய்வது போலச் சில் வண்டுகளே கத்திக் கொண்டிருந்தன. ஐராவதி நதி மட்டும் உலகின் சுபஸ்வரத்தையோ அபஸ்வரத்தையோ கவனிக்காமல் பற்றற்ற ஞானிபோலத் தன் சுதந்திரப் பாட்டைப் பாடிச் சென்றது. ஆற்றுப் பாட்டைப் பிளந்து கொண்டு வீசிய காற்றுப் பாட்டில் மட்டும் 'சிவனே! சிவனே!' என்ற சத்தம் ஊடுருவி வந்தது.

சத்தம் வந்த இடத்திற்கு மோட்டார் விரைந்தது. "நிற்கட்டும்" என்றார் சட்டிச்சாமி. சில காட்டுக் குடில்கள் முன்னே மோட்டார் தென்பட்டது. ஒரு குடில் திறந்தது.

"கந்தா, திற" என்றார் சாமியார்; மூங்கில் கதவு மெல்லத் திறந்தது. சிங்கமும் சாமியாரும் உள்ளே சென்றனர். கந்தன் அவர்களை வரவேற்றான். "ஆ கந்தனா?" என்று வியக்கும் போதே "சிவனே" என்ற சோகக் குரல் அவரை அழைத்தது. சிங்கம் பாய்ந்து சென்றார்.

இதோ சிவம்! ஒரு பாயில் விழுந்து கிடக்கிறார்; நினைவில்லை; உணர்வில்லை; தலையில் நல்ல அடி; கந்தன் பச்சிலை கட்டியிருக்கிறான்; காலில் ஒரு வெட்டுக்காயம், கந்தன் காயங் கட்டியிருக்கிறான். சிங்கம் திகைத்து நின்றார்.

சாமி: சிங்கம் சிவனை உடனே மோட்டாரில் உமது வீட்டிற்குக் கொண்டு செல்வோம். பிறகு மற்றக் கதை.

சிங்கம்: ஆம்; காரியம் முன்னே; கதை பிறகு — தூக்கும்.

இச்சமயம் அக்கம் பக்கத்திலிருந்து சில காட்டு மக்கள் கஞ்சி கொண்டு வந்தனர். ஒரு பெண் "ஐயா கஞ்சி குடித்துப் புறப்படலாமே" என்றாள்.

சாமியார் சிங்கத்திடம் அந்த அம்மையைக் காட்டி, "சிங்கம், உலகில் அன்பு என்ற அரிய பொருள் எங்கே என்றால் இந்த அம்மையின் உள்ளத்திலே தான்" என்பேன். இந்த அம்மையே சிவனைக் காத்தாள். நாளை இவளை அழைத்துச் சென்று உபசரிப்போம். வேலாயி உனக்கு மனக் குறை வேண்டாம். உன் கஞ்சியை நானும் சிவமும் குடித்தே செல்கிறோம்.

சாமியார் சிவனுக்கு மெல்லக் கஞ்சி புகட்டித் தானும் குடித்து கந்தனுக்கும் தந்தார். "தாயே நாளை வந்து உன்னை அழைத்துச் செல்வோம்" என்றார் சாமியார். "ஐயா குணமாக வேண்டும் — ஆண்டவன் கண் பார்க்க வேண்டும்" என்றாள் வேலாயி.

"சிவனே! பரமசிவனே" என்று சிவநேசம் மற்றொரு முறை கூறினான். மோட்டாரும் பூம்பூம் படபட என்றது. காட்டு நண்பர் துணையால் சிவத்தை மெல்ல மோட்டாரில் வைத்தனர். கந்தனும் சாமியாரும் ஏறியமர்ந்ததும், டாக்டர் சிங்கம் ஒரே தாவில் முன்னே அமர்ந்து விசையைத் திரிகினான். "ஐயா நல்லாயிருக்க வேண்டும்" என்று வேலாயியும் காட்டு மனிதர்களும் வாழ்த்தினர். அந்த வாழ்த்து காற்றுப் பாட்டிலும் ஆற்றுப் பாட்டிலும் கலந்து காடெல்லாம் எதிரொலித்தது. மோட்டார் காட்டுத் தனிமையை மெல்லக்கடந்து, இரங்கூன் தெருக்களை விரைவாகக் கடந்து வீடு சேர்ந்தது. கந்தனும் சாமியாரும் சேவகரும் சிவனை மெல்லக் கொணர்ந்து கட்டிலில் மல்லாத்

தினர். "சிவனே! என்னப்பனே!" என்றொரு தரம் சிவநேசன் முறையிட்டான்; பிறகு பேச்சில்லை......" டாக்டர் சிங்கம் உடனே பராங்குசத்திற்கு ஆளனுப்பி விட்டுத் தன் வேலையைத் தொடங்கினன் — நோயாளியை வைத்தியரிடமே நிம்மதியாக விட்டு நாமும் சிறிது காட்டிற்குள் செல்வோம்.

21. காட்டு நாகரிகம்

நாட்டிற்கும் காட்டிற்கும் எவ்வளவோ வித்தியாசம்; அது மனிதன் சிருஷ்டி; இது இயற்கையின் விளக்கம்; அங்கே கூட்டம்; இங்கே தனிமை. காட்டில் புலி நரி, ஓநாய், பாம்பு, விஷப் பூச்சிகள் எல்லாம் உருவாக நடமாடும்; நகரில் புலி, நரி, பாம்புக்கூட்டங்கள் அருவாகி, மனித மனப்புதர்களில் மறைந்து வஞ்சனையுடன் தாவிப் பாயும். காட்டுப் புலி இரவில் இரைதேடும். மனித மனப்புலி இரவு பகலின்றி எப்போதும் ஆட்களை விழுங்கக் காத்திருக்கும். அடர்ந்த காட்டில் அமைதியுண்டு; நகர வாழ்க்கை அலைபுரண்டு கவலைப்புயலே வீசும். இதனல் நான் எல்லாரையும் ஊரை விட்டுக் காட்டிற்கு ஓடச் சொல்லவில்லை — மனப் புலி நரிகளை ஓட்டிவிட்டு, நகரத்திலேயே மனிதர் அன்புடன் வாழவே வற்புறுத்துகிறேன். அன்பு? ஆ, அதுதானே அருமையாயிருக்கிறது — வயிற்றுப்பல் அன்பை இரகசியமாகக் குதறி யெறிந்து விடுகிறது. இந்த அன்பு செல்வரின் இரும்புப் பெட்டகத்தை விட்டுப் பரம ஏழைகளின் உள்ளத்தில் புகுந்திருக்கிறது. இந்த அன்பு, படிப்பில்லாத காட்டு மக்களிடம் குடிப்புகுந்திருக்கிறது.

ஐராவதி நதிக்கரையில் காடும் மலையும் அடர்ந்த ஓர் இடம்; புலி நரி பாம்புகள் சாம்ராஜ்யமே; எனினும் அதிற் சில மனிதரும் வசித்து வருகின்றனர். அவர்களுக்குச் சாதிமதம் கிடையாது. எழுத்துத் தெரியாது. சட்டை தொப்பி — வாலாக்கள் அவர்களைக் காட்டு மிராண்டிகள் என்பர். அவர்கள் காட்டு மக்களே; ஆனல் அவர்கள் வாழ்வும் மனமும் பசுங்காடு போலவே இயற்கையானவை. அவர்கள் கூலி வேலை செய்தும், தாமே உழைத்தும் பிழைக்கிருர்கள். வயிற்றிற்கே அவர்கள் பாடுபடுகிருர்கள். யானைகளைப் பிடித்துப் பழக்குதல், புலிவேட்டை யாடுதல், புலித் தோலுரித்து விற்றல், யானைத் தந்தம் விற்றல், பச்சிலைகள் விற்றல், தேக்கு மரம் வெட்டுதல், காட்டு விறகு விற்றல், மூங்கிலரிசி விற்றல், தேன் சேர்த்தல், தங்கள் தேவைக்குப் பயிர்த் தொழில் செய்தல், மாடு வளர்த்தல் — இவையே அவர்கள் தொழில். யாரையும் வஞ்சனை செய்யாமல், மோசடியில்லாமல், எளிய முறையில் அவர்கள் பாடுபட்டுப் பிழைக்கிருர்கள்.

அவர்களுக்குச் சட்ட நூலில்லை; ஆனல் கட்டுப் பாடுண்டு; சாதியில்லை; நீதியுண்டு; சமயமில்லை — சமத்துவமுண்டு; அவர்கள் எந்தக் கோயிலும் கட்டவில்லை; எந்த உருவையும் நாட்டவில்லை; மணியடிக்கவில்லை. உலகமெல்லாம் கோவில்; சூரியனே கடவுளின் வடிவு; அவன் வஞ்சமில்லாமல் ஒளி தருவதுபோலவே மனிதன், வஞ்சமில்லாமல் பிறருக்கு உதவி செய்து வாழ்வதே அவர்களுடைய சமயம். அன்புதான் அவர்களுக்குச் சமயம். அவர்களை நாகரிகப் படுத்த புத்த பிக்ஷுக்களும், கிறிஸ்துவப் பாதிரிகளும் அடிக்கடி வருவதுண்டு. உபதேசம் செய்வதுண்டு. "ஐயா, புத்தரும் கிருஸ்துவும் என்ன சொல்லுகிருர்கள்? அன்பைத்தான்; இதோ நாங்கள்

அன்பாகத்தான் இருக்கிறோம்; எவரையும் வஞ்சிப்பதில்லை; மோட்சத்தின் சாவியைக்கூட கடவுளிடமே கொடுத்து விட்டோம். அதோ அவன் மௌனமாக ஒவ்வொரு பகலும் வந்து செல்லுகிறான். நாங்களும் மௌனமாக அவனை வணங்கி, அவனைப்போலச் சுறுசுறுப்பாக உலகிற்குப் பயனுள்ள ஒரு வேலை செய்து பிழைக்கிறோம். எங்களுள் சண்டை கிடையாது. நாங்களும் யாருடனும் சண்டையிடுவதில்லை. தயவு செய்து எங்களைக் கடவுளுக்கே விட்டுவிடுங்கள்!" என்பார்கள் இக்காட்டு மக்கள். "உங்களைக் கடவுளே காக்கவேண்டும்!" என்று பாதிரிமார் சொன்னால் 'அதுவே சரி! ஐயா கொஞ்சம் தினைமா சாப்பிட்டுச் செல்லுங்கள்' என்று உபசரித் தனுப்புவார்கள்.

இக்காட்டு வேதாந்திகள். அவர்களை யாரும் ஏமாற்றவோ, மாற்றவோ முடியாது. அவர்கள் கேட்கும் கேள்விக்குப் படித்தவர்களும் பதில் சொல்ல முடியாது திகைப்பர். இவர்கள் அன்பாகவே நடப்பர்; ஆனால், அக்கிரமத்தையும், அயோக்கியத் தனத்தையும், குள்ளநரித் தன்மைகளையும் பொறுக்க மாட்டார்கள். நியாய விரோதிகளைச் சக்கையாக வெளுத்து அலறடிப்பார்கள். இவர்களுக்கு இரக்கமுண்டு; ஆனால் கோழைத் தனமில்லை. இவர்கள் மகா பலசாலிகள் — ஆறடிக்குக் குறையாமல் உயரம், 45 அங்குலத்திற்கு குறையாமல் மார்பு, வைரம் பாய்ந்த உடல், நிமிர்ந்த நடை உடையவர்கள். இவர்களிடம் யாரும் வாலைக் காட்ட முடியாது.

தடியடி விழும். வில் — தெறித்தல், வாள் வீச்சு, சிலம்பம், குஸ்தி வேட்டை முதலியவற்றில் இவர்கள் சூரர்கள். இவர்களுக்கென்று ஓர் இரகசியமான நரம்பு வித்தையுண்டு. ஜப்பானியரின் ஜியு ஜித்ஸுவை விட, அது கடுமையானது. மனிதனிடமுள்ள 7000 நரம்புகளையும் இவர்கள் அறிவார்கள்; பளிச்சென்று ஒரு நரம்பைப் பிடித்து ஆளை அழுத்தி வீழ்த்தி, அலறவைக்க இவர்களுக்குத் தெரியும். ஆதலால் இவர்களிடம் நாகரிக மக்களுக்கு அச்சமே.

நாம் எவ்வளவோ சீர்த்திருத்தங்களை மேடையதிர மேஜையைக் குத்திப் பேசுகிறோம். இவர்கள் எவர் பிரசங்கமும் கேளாமல் ஓரினம், ஓர்நிரையாக வாழ்கிறார்கள். இவர்களுள் ஆணும் பெண்ணும் சரி நிகர் சமானமே. ஒருவரையொருவர் பெயர் சொல்லியே அழைத்துக் கொள்வர். "ஏலே, வாடி போடி, உம்மைத்தானே, ஐத்தான்" என்பதெல்லாம் இவர்களிடம் கிடையாது.

ஆணுக்கு இருபத்தைந்து, பெண்ணுக்கு இருபது வயது வந்த பிறகே இவர்கள் ஜோடி சேர்வது வழக்கம் — ஆனால் கலியாணச் சடங்கு புரோகிதம் எதுவும் இல்லை. காட்டில் வேலை செய்யும் போதே ஒரு வாலிபன் ஒரு யுவதியை வசீகரிப்பான்; கண் ஒன்றும்! இருவரும் தொழில் செய்வதில் ஒருவருக்கொருவர் உதவியாயிருப்பர்; இரண்டாண்டுகள் இவ்வாறு பழகி ஒருவருக்கொருவர் பிடித்துப் போனால், அதுவே போதும். காதலன் காட்டு மூங்கில் வெட்டி ஒரு குடிலமைப்பான். இருவரும் அதில் குடித்தனம் செய்வார்கள். இவர்களுக்கென்று ஆடல் பாடல் உண்டு; நாட்டியத்தில் இச்சனங்கள் மோகங் கொண்டவர்கள். நிலாக்காலங்களிலும், வசந்த காலத்திலும் இவர் காட்டு மலர்களால் அலங்கரித்துக் கொண்டு, பாடிப்பறை கொட்டிப் பரவசமாக நடனமாடுவார்கள். சமுதாயத்தில் ஏதாவது தீமை

நேர்ந்தாலும் சூரியனை வேண்டி நடனமாடுவார்கள். இந்த நடனத்தில், ஆண் பெண் இரு பாலாரும் சேர்ந்து கொள்வதுண்டு; இந்த நடனத்தில் கைகோத்து நின்று, ஒருவருக்கொருவர் மாலை சூட்டிக் கொண்டாலே காதலர் காதல் உறுதியாய்விடும். மனமொத்த புதிய காதலர், தமது செலவில் கூட்ட நடனம் வைத்து, சமுதாயத்திற்கு முன் மாலை சூட்டிக் கொண்டு, கைகோத்துப் பாடி ஆடத்தொடங்குவர், பிறகு மற்ற தம்பதிகளும் அவர்களுடன் கைகோத்து நடம் புரிவது வழக்கம். நடனமானதும், எல்லாரும், தேனும் தினையும், பாலும் பழமும் உண்பதுண்டு; இந்த விருந்து புதிய காதலர் செலவில் நடக்கும். நாம் திருமணம் என்பதையே இவர்கள் மனமொத்த வாழ்வு என்பர்.

ஒரு தரம் கூடினவர் பிறகு பிரிவதில்லை; அயல்மனை நோக்குவதுமில்லை. ஆதலால் இவர்களிடம் விபசாரமோ, வேசித்தனமோ கிடையாது. காதலி எப்போதும் காதலனுடனே தான் இருப்பாள். இருவரும் கைகோத்து, தோள்மேல் கைபோட்டு நடப்பதுண்டு. அன்புள்ள காதலரை இக்கூட்டத்தார் கௌரவப் படுத்துவார்கள். காதலருள் கொடிய பிணக்கு வந்து பிரிவதனால், அவள் மனைவியிறந்த ஒருவனை, இவன் கணவனிறந்த ஒருவளையே தேடிக்கொள்வது வழக்கம். மறுபடியும் புதிய ஜோடிகள் விருந்தும் நடனமும் வைத்துச் சமுதாயத்தின் முன்னிலையில் கைகோத்து நிற்கவேண்டும்; அப்போதே அவர்கள் காதல் உறுதியாகும். ஒருவனுடன் வாழும் பெண்ணை வஞ்சிப்பதும், கள்ளப் புணர்ச்சியும் இவர்களிடையே மிகக் கேவலமாகக் கருதப்படும். அதேமாதிரி ஒரு பெண்ணும் இன்னொருவள் கணவனுடன் கூடமாட்டாள். "காதலுக்கு உண்மையானவன், கடவுளுக்கும் உண்மையானவன்" என்றொரு பழமொழி இவர்களிடையே வழங்குகிறது. ஆண் பெண் இரு பாலாரும் நரம்புவித்தையும் உடற் பயிற்சியும் பெற்ற பலசாலிகள். ஆதலால் ஒருவரையொருவர் மதித்தே நடப்பர். சமையல் வேலைகூட இருவரும் சேர்ந்தே செய்வர்; அவளுக்குச் சௌகரியமில்லாவிட்டால் இவன் சமைப்பான். பெண்கள் தமது காதலரிடம் உண்மையன்புடன் மிகப்பிரியமாக நடப்பார்கள். காதலனை யாராவது திட்டினால், அவன் மேல் பிறர் கை வைத்தால், காதலி பொறுக்க மாட்டாள் — உடனே கருங்காலித் தடியைத் தூக்கிக் கிளம்புவாள். ஆள் பயந்தோடுவான்.

இவர்களிடம் திருட்டுப்புரட்டுக் கிடையாது. யாராவது நாட்டில் திருடிக் காட்டில் ஒளிந்தால், அவனைச் சரியானபடி உதைத்தனுப்புவர். இவர்கள் கொச்சையான பர்மியம் பேசுவர்; ஆனால் தமிழ்க் கூலிகளுடன் அடிக்கடி கலந்து வேலை செய்வதால், இவர்கள் கொச்சைத் தமிழும் அறிவர். இவர்களுடன் பிற இனத்தாரும் சம்பந்தப்படலாம். ஆனால் சமுதாயக் கட்டுப்பாட்டிற்கு இணங்க வேண்டும்: (1) வானுலகம் கோயில்; சூரியனே கடவுள் வடிவம் (2) அன்பும் உண்மையுமே மதம், (3) தன் உணவை உழைத்துண்ணல் (4) ஆண் பெண் சமவுரிமை (5) கள், திருட்டு, விபசார மின்மை (6) கூட்ட நடனத்தில் கலந்து கொள்ளல் முதலியவை இவர்கள் கட்டுப்பாடுகள். இக்கட்டுப்பாடுகளுக்கு இணங்கித்தான் வேலாயி ஒரு காட்டாளைக் காதலித்து இவர்களுடன் கலந்து வாழ்ந்தாள்.

வேலாயி நாகப் பட்டினத்தில் பிறந்த ஏழைப் பெண். அவள் எட்டு வயதுச் சிறுமியாயிருந்த போது, ஆத்தாளுடன் சந்தைக்குச் சென்ருள். ஒரு கங்காணி, பொரியுருண்டை வாங்கித் தருவதாக அவளைக் கூட்டத்தில் இட்டுச் சென்று மயக்கிக் கப்பலேற்றி விட்டான். வேலாயி அழுதென்ன? அலறியென்ன? கப்பல் பர்மாத் துறைமுகத்திற்கு வந்து விட்டது.

வேலாயி இந்தக் காட்டு மலையில் விளையும் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யலாயிற்று. ஆருண்டுகள் கழிந்தன ; வேலாயி பூப்பெய்தினள். அவள் வரிசையில் பல காட்டு மக்களும் வேலை செய்தனர் ; அவர்களுடன் இவள் ஒட்டுறவாகப் பழகினள். நல்ல உழைப்பாலும், காற்றும் வெயிலும் பட வாழ்ந்ததாலும் வேலாயி உறுதியான உடல் பெற்ருள். வாலிபர் கண் அவள் மேல் பாய்ந்தது ; இவளைக் குறி வைத்தான் ஒரு கங்காணி. அவன் கலியாணமானவன் ; பிள்ளை குட்டிக் காரன் ; காமத்தினவால் இந்த இளம் பெண்ணைக் கெடுக்க அவன் சூழ்ச்சி செய்தான். வேலாயி அவன் முகத்தைக் கூடப் பார்க்கவில்லை. ஒரு நாள் பலாத்காரமாக அவளைக் காட்டிற்குள் இழுத்துச் சென்ருன் கங்காணி. "ஐயோ காடா" என்றலறினள் இளம் பெண்.

காடன் "ஹா, ஹத்" என்று ஓடி வந்தான் ; நடந்ததை அறிந்தான் ; கங்காணியைச் செம்மையாகத் தீட்டினன் ; வேலாயியைத் தன் வீட்டிற்கு அழைத்து வந்து காத்தான். இந்த நன்றிக்காக வேலாயி தன்னையே அவனுக்குத் தந்தாள். காடன் அவளுடன் தேயிலைத் தோட்டத்திலே வேலை செய்பவனே. இருவரும் ஒரே வரிசையில் வேலை செய்து வந்தனர். அவன் இவளுக்கு அடிக்கடி உதவி செய்தான் ; இவள் தன் கஞ்சியை அவனுடன் பகிர்ந்துண்டாள். ஒரு சமயம் வேலாயி நோயாகப் படுத்தாள். காடன் பச்சிலை தந்து குணப்படுத்தினன். அது முதல் இருவர் உள்ளமும் கலந்தன. "எனக்கு நீ—உனக்கு நான்" என்று அவர்கள் உறுதி செய்து கொண்டனர். காடன் அவளைத்தன் சமுதாய நாகரிகத்தில் பழக்கினன். அவன் தமிழ் கற்ருன் ; இவள் கொச்சை பர்மியம் கற்ருள். சமுதாய முறைப்படி இப்போதே அவளுக்குத் தக்க வயது வந்தது. அவளைக்குறி வைத்துத் தொல்லை செய்த காமுக ரெல்லாம் காடனைக் கண்டு பயந்தோடினர். காடன் வேலாயி கையைப் பற்றி, ஒரு நாள் கூட்ட நடனத்தில் கலந்து ஆனந்தக் கூத்தாடினன் ; இனிய விருந்து வைத்தான். சமுதாயம் இருவரையும் வாழ்த்தியது.

காடனும் வேலாயியும் உயிரும் உடலும் போல நேசித்தனர். இருவர் அன்பும் சமுதாய நன்மையாகப் பரவியது. இருவரும் தேயிலைத் தோட்ட வேலையை விட்டு விட்டனர். காடன் மூங்கில் வெட்டிக் கைத்தடிகளும், கத்திப் பிடியும் செய்து வந்தான் ; வேலாயி மூங்கிலைச் சீவிக் கூடைகள் செய்தாள் ; நாளடைவில் இருவரும் நெசவு கற்றுப் பாய் நெய்தனர். இவற்ருல் இவர்கள் பிழைத்து வந்தனர். வேலாயி அன்புமயம் ; காட்டினப் பெண்களுக்கு அவளிடம் மரியாதையும் நம்பிக்கையும் அதிகம். அவள் இனிய குரலெடுத்துத் தமிழ்ப் பாட்டுப் பாடுவாள் ; அழகாக நடனமாடுவாள் ; அடிக்கடி இனிய பண்டங்கள் செய்து விருந்திடுவாள். அவள் ஒழுக்கமே ஒரு வசீகரமாயிருந்தது. காடனும் அவளுடன் மனமொத்திருந்தான்.

(தொடரும்)

தமிழிசை விமரிசை

"ஆனந்தன்"

சூரியன் அன்று காலை வழக்கத்தை விட அதிகப் பிரகாசமாக உதிக்கத் தொடங்கினான். கடல் அலைகள் விசேஷ ஆரவாரத்துடன் ஒலிக்க ஆரம்பித்தன. மலர்கள் அன்று அழகாகவும் விரிவாகவும் மலர்ந்தன. இயற்கையில் நிகழ்ந்த இந்த அற்புதத்தைப் போலவே ஜனங்களுடைய உள்ளங்களிலும் களிப்பு உண்டாயிற்று. அதற்கு முன் எப்போதுமே கண்டிராத குதூகலமும் ஆனந்தமும் அவர்களிடம் பிரகாசித்தது. இந்த அதிசயம் எப்படி ஏற்பட்டது? அந்த அதி அற்புதமான சம்பவம் என்ன?

1943-ம் வருஷம் டிசம்பர் மாசம் 23-ம் தேதி சென்னைப் பட்டினத்து அரமனைக் காரத்தெரு செண்ட் மேரீஸ் ஹாலில் அந்த அருமையான காட்சியைக் கண்டவர்களுக்கு 'ஆகா! இது கனவா, நினைவா?' என்ற ஆனந்தாச்சரியம் உண்டாகியே தான் இருக்கும்.

அழகிய அந்த மண்டபத்திற்கு உள்ளேயும் வெளியேயும் திரண்டிருந்த பிரமாண்ட மான கூட்டத்தைப் பார்த்தால் ஏதோ ஒரு கோலாகல மான இனிய விழாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் போல் இருந்தது. ஆம், தமிழ் இசை மகாநாடும், அதைத் தொடர்ந்து பனிரண்டு நாள் நடைபெற்ற தமிழ் இசைக் கச்சேரிகளும் அருமையான விழாவைப் போல சிறப்பாக நடந்தேறியது.

சென்ற பத்துப் பனிரண்டு வருஷங்களாக பாட்டுக் கச்சேரி என்றால் என்ன என்பது நமக்கெல்லோருக்கும் நன்றாகத் தெரியும். கச்சேரிக்கு வருகிறவர்கள் தங்களுடைய சொந்தக் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருப்பார்கள். ஒரு பக்கம் பேச்சு, மற்றோர் பக்கம் உலக விஷயம், இன்னொரு பக்கம் அரைத் தூக்கம்! (நன்றாகவே தூங்கி விடுவதும் உண்டு) ஆனால் சங்கீத வித்வான் மட்டும் தம் வித்வத்தைக் காட்டி ஜமாய்த்துக் கொண்டிருப்பார். அரைத்தூக்க, முழுத்தூக்க ஆசாமிகளைப் பற்றி அவருக்கு அக்கரையே கிடையாது. கடைசியாகச் சின்னத் தமிழ்ப் பாட்டு ஒன்று பாடுவார். உடனே சபையைப் பார்க்க வேண்டுமே!

திடுக்கிட்டு தூக்கம் கலைந்து விழித்துக் கொள்கிறவர்களும், அந்தத் தமிழ்ப் பாட்டிலே மெய்ம் மறந்து போய் கைதட்டி ஒரே சந்தோஷ ஆரவாரம் செய்வார்கள். ஆனால் சபை என்னதான் ஆரவாரம் செய்தாலும் 'துக்கடா' என்ற பெயரோடு தமிழ்ப் பாட்டு ஒதுக்கப் பட்டே நாளது தேதி வரை வந்து விட்டது, இது பழைய சங்கதி. என்னைப் போலவே மற்றவர்களுக்கும் இந்த அனுபவம் ஏற்பட்டுத்தான் இருக்கும்.

ஆனால், தமிழ் இசைச் சங்கத்தார் பழைய முறைக்கு ஒரு முழுக்குப் போடும் படி செய்து விட்டார்கள். அத்தனையும் தமிழ்ப் பாட்

டாக இருந்தால் எத்தனையோ இன்பத்தை அநுபவிக்கலாம் என்பதை நிதர்சனமாக நடத்திக் காட்டி விட்டார்கள். 23-ம் தேதி நடந்த மகா நாட்டில் பிரசங்கங்கள் மூலம் இது தெளிவாக்கப் பட்டது.

டி. கே. சி யின் அருமையான பிரசங்கத்தைக் கேட்ட பிறகும் இசைச் சங்கத்தைப் பற்றிக் கொஞ்சம் கூட யாருக்குமே சந்தேகம் தோன்ற இடமே இருந்திராது. ஆனால் சிலருக்கு என்னவோ சந்தேகம் இருந்து கொண்டே தான் இருந்தது. அந்தச் சிலரும், அவர்களைச் சேர்ந்த பத்திரிகைகளும் ஓயாமல் 'வாழ்த்திக்' கொண்டேதான் இருந்தார்கள். மியூசிக் அகாடமியார் புதிதாகத் தோன்றிய இந்த இசைச் சங்கத்துக்கு நல்ல புத்தி உண்டாவதாக. அவர்கள் திரும்பி நம் வழிக்கு வருவார்களாக" என்று ஆசீர்வாதமும் செய்தார்கள்.

இப்படியாக அவர்களெல்லாம், ஆசீர்வதிக்கும் படியான என்ன காரியம் நடந்தது? தமிழிலே பாடி, எல்லோரும் இன்பமடையும்படி தமிழ் இசைச் சங்கத்தார் செய்தார்களே அதுவா 'பிரார்த்தனை'க்கு உரிய விஷயமாயிருந்தது?

பார்க்கப் போனால் எதிர்த்தவர்களுடைய பரிதாப நிலைக்கு இரங்க வேணும் போல் இருந்தது. எதிர்ப்பா? அதெல்லாம் தான் இருந்தவிடம் தெரியாமல் தவிடு பொடியாகி விட்டதே!

கொஞ்சம் அந்த வேடிக்கையைப் பார்க்கலாம். என்னென்னவோ காரணத்தைச் சொல்லி தமிழிசையைத் தாக்கினார்கள். டி. கே. சி அருமையான பிரசங்கம் செய்து கலையின் நுட்பத்தை எடுத்து விளக்கினால் என்ன! ராஜா சர், 'இதில் சூழ்ச்சிக்கு இடமில்லை' என்று பகிரங்கமாகச் சொன்னால்தான் என்ன?

ஸ்ரீ சம்பந்த முதலியார், கல்கி, ராஜாஜி முதலானவர்கள் இசையின் சிறப்பைப் பற்றி பேசித்தான் என்ன? சர். ஆர். கே. எஸ், மேல்—கீழ் நாட்டு அநுபவங்களுடன் அற்புதமாக எல்லா விஷயத்தையும் விளக்கி, தமிழ் இசையைப் போற்றித் தான் என்ன? 'இதில் என்னவோ இருக்கிறது' என்று பொதுவில் தாக்கினார்கள். பிறகு, தனிப்பட்டவர்களைத் தாக்கினார்கள். அதில் எல்லாம் ஒன்றும் பலிக்கவில்லை என்பதைக் கண்டதும், இசையின் மேன்மையை எடுத்துக் கொண்டு 'அலச' ஆரம்பித்தார்கள்.

இசைக் கலையை ஆதரித்தவர்களிடையே ஒருமுகமான அபிப்பிராயம் இல்லை போல் தோன்றுகிறது என்று அவர்கள் சொன்னார்கள். ஒரு வேளை தங்களிடையே 'இல்லை' என்பதை மறைக்கத்தான் இப்படி அவர்கள் சொல்லியிருக்க வேண்டும். கர்நாடக சங்கீதம் சிறப்பு வாய்ந்தது என்று பறை சாற்றுகிறார்களே அப்படி சிறப்பு வாய்ந்த கர்நாடக சங்கீதம், தெலுங்கிலோ அல்லது தமிழைத்தவிர வேறு பாஷையிலோ தான் இருக்க முடியும் என்று சாதிப்பதைப் போன்ற பைத்தியக் காரத்தனம் வேறென்ன இருக்க முடியும்? தமிழிலுள்ள எத்தனையோ பாடல்களைப் பற்றி இங்கு நான் சொல்ல வில்லை. தமிழ் இசைச் சங்கத்தாருக்கு தெலுங்கு, சமஸ்கிருதம் முதலிய பாஷைக



அலங்காரமான தமிழ் இசை மண்டபம்

ளிடம் வெறுப்போ துவேஷமோ இல்லை என்பதையும் நிகழ்ச்சியில்
காட்டி இருக்கிறார்கள். ஆனால், "தற்காலத்தில் நம்மிடையே அரிய
கவிஞர்கள் கிடையாது. புதிதாகத் தோன்றும் மட்டும் காத்திருக்க
வேண்டும்" என்று ஒரு 'சப்பைக் கட்டு' வாதம் செய்கிறார்கள் அல்
லவா? அது எவ்வளவு கண் மூடித்தனமானது என்பதற்கு சுவாமி சுத்
தானந்த பாரதியாரின் கீதங்களை இங்கு குறிப்பிடுவது ரொம்ப அவசிய
மாகிறது. தமிழிசைக் கச்சேரிகளிலே சுவாமிகள் பாடல்களுக்கு
அதிக இடம் அளித்திருந்தார்கள். ஆகா! சுத்தானந்தர் பாடல்களிலே
அந்த தமிழ்ப் பாடல்களிலே ராகசஞ்சாரத்திற்கு இடமும் மனோ தர்மத்
திற்கு இடமும் கற்பனைக்கு எட்டாத அற்புதமாயிருந்தது. இதயத்தி
லிருந்து பொங்கிய அபூர்வ கீதங்களிலே நெஞ்சைப் பறி கொடுக்காத
வரை நான் காணவில்லை. மோனத் தனித்தவத்திலே நின்று பேருண்
மைகளை நெஞ்சகத்தே கண்ட பெரியார் அல்லவா? இசையின் போக்
குகளை அறிந்து உயர்ந்த கீதங்களை இசைத்திருந்தார். மற்ற பாஷை
மகான்கள் பாட்டை விட சுவாமிகள் பாடல்கள் நூராயிரம் மடங்கு
உயர்வாயிருந்தது. இது என் அபிப்பிராயம் மட்டும் அல்ல. பல்லா
யிரக் கணக்கான தமிழ் மக்களுடைய அபிப்பிராயம் இது. இன்னும்
நூற்றுக் கணக்கான தமிழ்ப் பாடல்கள் சுவாமிகள் இயற்றி வைத்தி
ருக்கிறார் என்னும் சேதி, நமக்கு தேம்பாகு மதுரமாயிருக்கிறது.
பழக்கப் பட்ட செவியும், இதயமும் தான் உயர்ந்த சங்கீதத்தை அநுப
வித்து ஆனந்த மடைய முடியும் என்ப தெல்லாம் அர்த்த மற்ற பேச்சு
என்பதும் உண்மையாகி விட்டது. எங்கோ அந்தப் புரத்திலே ஒரு

சிறு கூட்டமாக என்னவோ ரகஸ்யம் மாதிரி கர்நாடக சங்கீதத்தை அநுபவிப்பது என்பதையும் 'தெருவுக்'குக் கொண்டு வந்து விட்டார்கள். இதெல்லாம் இருக்கட்டும். எதிர்த்த மகாநுபவர்களுடைய அபத்தத்திற்கு இங்கே பதில் சொல்லிக் கொண்டிருக்க இடமில்லை. தவிர, ஸ்ரீமதி சுந்தராம்பாள் கச்சேரியன்று, ஆர். கே. எஸ் எதிர்ப்புக்கெல்லாம் ஆணித்தரமாக பதில் சொல்லியிருக்கிறார். ஒன்று விடாமல் எடுத்துக் கொண்டு, அலசி ஆராய்ந்து இனி எதிர்ப்போர் வாய் திறப்பதற்கில்லாமல் உள்ளத்தில் தைக்கும்படி அற்புதமாகப் பதில் சொல்லி விட்டார். இனி, அதைப் பற்றி யாரும் கவலைப் பட வேண்டியதில்லை.

அந்தப் பனிரண்டு நாளும் தமிழிசைக் கச்சேரிகளின் விமரிசைகளையும், அங்கு வந்து ஆனந்த மடைந்தவர்களையும், இன்பகரமான காட்சிகளையும் பார்ப்போம்.

சாதாரணமாக இசைக் கச்சேரிகள் அமைக்கிறவர்கள் கட்டிடம், மேடை, முதலான காரியங்களை அவ்வளவாக கவனிப்பது வழக்கமில்லை. ஆனால் தமிழ் இசைச் சங்கத்தார் கச்சேரிக்கு வந்து விட்டு பொது மக்கள் பத்திரமாக வீடு திரும்பிப் போவது வரை சர்வ ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொண்டார்கள். சென்னையிலே சிறப்பான 'ஹால்' எனச் சொல்லப் படும் செண்ட் மேரீஸ் ஹால் உள்—வெளித் தோற்றம் தமிழ்ப் பண்பாட்டுடன் ஒட்டியதாக அலங்கரிக்கப் பட்டிருந்தது.

உள்ளே தாண்டவ மூர்த்தியின் அழகிய தோற்றம், மலர் ஏந்தி வழிபடும் மங்கை, நந்தா விளக்கு, மற்ற சுடர் விளக்குகள் முதலானவை போற்றுதற் குரியதாயிருந்தது. ஒரு புனிதமான உணர்ச்சியை மனதில் நிறைத்து கண்ணும் மனமும் ஆனந்த மடையச் செய்தது.

மேடையைப் பார்த்ததும் சட்டென்று எனக்கு ஒரு ஞாபகம் வந்தது. சமீபத்தில்தான் சிலப்பதிகாரக் கட்டுரையில் ஆர். கே. எஸ். அவர்கள் இசையரங்கின் அளவைக் குறிப்பிட்டிருந்தார்கள். மேடையின் அளவும் அழகும், கலை ரசிகர்கள் அந்தக் காலத்தில் அமைக்கும் விதத்தைக் குறிப்பிட்டிருந்தார். தமிழ் இசைச் சங்கத்தாரும் ஏறக்குறைய அந்த அளவுப் படியே மேடையை அமைத்திருந்தார்கள்.

தண்டபாணி தேசிகர்

முதல் நாள் தண்டபாணி தேசிகருடைய கச்சேரி. தேசிகருடைய கச்சேரியை இதற்கு முன் எத்தனையோ தரம் நான் கேட்டிருக்கிறேன். இயற்கையாகவே உருக்கமும், உணர்ச்சியும் நிறைந்தது அவரது குரல். பாவ பூர்வமாக பாடும் ஆற்றல் பெற்றவர். அன்று அதை ஊர்ஜிதப் படுத்திக் காட்டினார். ராகமாலிகையில் 'யாமறிந்த மொழிகளிலே' என்னும் பாடலை அவர் அபூர்வமாகப் பாடியதைப் போல வேறு எங்குமே யாம் கேட்டதில்லை! அவ்வளவு குழைவு, தெளிவு, நுட்பம், எல்லாம் அதில் கலந்திருந்தது. சுவாமி சுத்தானந்த பாரதியார் இசைத்த "இல்லை யென்பான் யாரடா?" இசையரசின் இனிய சாரீரத்தில் கலந்து ஒலித்த போது விவரிக்க முடியாத கிளர்ச்சி உள்ளத்

தில் எழுந்தது. அர்த்தம் தெரிந்த பாடலைப் பாடினால் தான் ஜனங்களால் அநுபவிக்க முடியும் என்னும் உண்மை துலாம்பரமாக விளக்கமாயிற்று. இசைக்கு அரசு என்பதை அன்று நமது இசைஅரசு தண்டபாணி தேசிகர் அவர்கள் நிலை நாட்டி வந்திருந்த எல்லோரையும் ஆனந்த பரவசத்தில் ஆழ்த்தினர். பக்கவாத்தியங்கள் அதற்கேற்ப அருமையாக அமைந்திருந்தது.

சங்கீத ரசிகர்களுக்கு இசைவாணர் தியாகராஜ பாகவதரிடம் அலாதியான பற்று உண்டு. அதனால் தானோ என்னவோ பாகவதர் உள்ளே நுழையக்கூட அவர்கள் இடம் விடுவதில்லை! இரண்டாம் நாள் பாகவதருடைய கச்சேரியின் போது ரசிகர்கள் தங்கள் ஆவலைப் பூர்த்தி செய்து கொண்டார்கள். பாகவதரும் ரசிகர்கள் கேட்ட மாத்திரத்தில் அவைகளைப்பாடி இன்பக் கடலில் ஆழ்த்தினர். இன்பத் தமிழை மறந்திருந்து காலத்தை வீணாக்கி விட்டதை எண்ணி "இத்தனை நாள் என்ன செய்தாய்?" என்று ஆரம்பித்த போது, அந்த ஹாலே அதிரும்படி கைதட்டும், சிரிப்பொலியும் எழுந்தது. 'ஆகா! தமிழின் நயத்தை இப்படி யல்லவா தெரிந்து கொண்டோம்' என்றே எல்லோரும் எண்ணியிருக்க வேண்டும். ஆலங்குடி ராமச்சந்திரன் கடம் பேஷாயிருந்தது.

ஸ்ரீமதி பட்டம்மாள்

கான சரஸ்வதி ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் வழக்கம் போல் அருமையாகப் பாடினர். கல்யாணி ராக ஆலாபனை அற்புதம். "சித்தம்



குழலின் கனவு

அரித்த மூங்கிலிலே — தொளை
ஆக்கி வைத்து விட்டால்
சரிகம பதநி — என்னுந்
தமிழ் இனிமை வருமோ?
வட்டத் தொளைகளிலே — கலை
வல்லவன் உயிர்த்தால்

எட்டுத்திசையினிலும் — இசை
ஏறிப் பறந்திடுமே...
மண்ணை அணைத்துறங்கும் — இந்த
மானிடக் குழலில்,
புண்ணியப் பண்ணொலிக்கத் — தெய்வப்
புலவன் வாரானோ?

— அருணன்

எப்படியோ" என்பதை எப்படி எப்படி யெல்லாமோ இனிமை ததும்ப எடுத்துக் காட்டினர். கொஞ்ச நாளைக்குப் பிறகு மீண்டும் ஸ்ரீமதி பட்டம்மாளுடைய கீதத்தைக் கேட்கையில், புது இனிமை அதில் கலந்திருந்தது. பக்கவாத்தியம் ரொம்ப கச்சிதம்.

டி. என். ராஜரத்தினம் பிள்ளை, பி. எஸ். வீருசாமி பிள்ளை

இசை உலக ஜோதி டி. என். ராஜ ரத்தினம் பிள்ளை அவர்களும், வித்வ சிரோமணி பி. எஸ். வீருசாமி அவர்களும் தவுல் அரசு நீடாமங்கலம் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை அவர்களும் வாசிக்கிறார்கள் என்றால் அதில் தனிச் சிறப்பு இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆம், அன்றைய கச்சேரி ஒரே அற்புதமாயிருந்தது. நாதஸ்வரத்தின் நயம், தவுலின் இன்ப நாதம் எல்லாம் கலந்து ரசிகர்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது,

நாதஸ்வரக் கச்சேரிக்குப் பிறகு அன்று கும்பகோணம் ஸ்ரீமதி பானுமதி கோஷ்டியார் பரத நாட்டியம் நடை பெற்றது, நன்றாக அநுபவிக்கும் படி இருந்தது. உணர்ச்சிகளைத் தெளிவாக முக பாவத்தின் மூலம் காட்டினர். பார்ப்போரை கூடவே அனுபவிக்கும்படி செய்தார். மேடை அலங்காரம், உடை முதலியவைகள் சிறப்பாயிருந்தன.

மதுரைமணி

மணியாகப் பாடும் மதுரை மணி அய்யர் கச்சேரி அற்புதமாயிருந்தது. காம்போதி, சங்கராபர்ணம் முதலிய ராகங்களின் இனிமை நயத்தை அப்படி அப்படியே கொண்டு வந்து கண் முன் நிறுத்தினர்! உள்ளம் ஒரு நாளும் மறக்க முடியாது. அன்றைய கச்சேரியில் பழனி சுப்ரமணிய பிள்ளை அவர்களின் மிருதங்கம் புரிந்த விந்தை வர்ணனைக் கெட்டாதது. மாயவரம் கோவிந்தசாமி பிள்ளை பிடிலும், நடேசப் பிள்ளை முகர்சிங்கும் ஜோராயிருந்தது.

எம். எஸ். சுப்புலக்ஷிமி

ஸ்ரீமதி சுப்புலக்ஷிமியின் கச்சேரி என்றால் கேட்கவா வேண்டும்! அதைப் பற்றிச் சொல்லத்தான் வேண்டுமா! ஆகா! அன்றைய கச்சேரியின் அற்புதத்தை என்ன வென்று வர்ணிப்பது? இந்த மாதிரி அமுத கானத்தை எல்லோரும் அனுபவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஒலி பெருக்கியின் மூலம் 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம்' சங்கத்தார் செய்தார்களோ? சபாஷ்! உள்ளேயும், வெளியேயும் திரண்டிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் பரிபூரண ஆனந்தத்தை அடைந்தார்கள். எம். எஸ் ஸின் ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு விதத்தில் தனிச் சிறப்புடன் பிரகாசித்தது.

ஸ்ரீமதி வசந்தகோகிலம்

ஸ்ரீமதி என். சி. வசந்த கோகிலத்தின் கோகில கானத்தைக் கேட்பதிலே இசை அபிமானிகளுக்குள்ள ஆர்வம் எல்லையற்றது. அடடா! அந்த அருமையை என்ன வென்று புகழ்வது? 'காதலெல்லாம்

தமிழ் இசையை உளங்குளிரப் பருகுகிறார்கள்

கொள்ளை கொண்டாய்' என்ற ஒரு பாடலில் ரசிகர்கள் உள்ளத்தைத் கொள்ளை கொண்டு விட்டார். மனோ தர்மத்தைச் செலுத்தி அலை அலை யாக உல்லாச உலகிற்கு இசையின் மூலம் அழைத்துச் செல்லலாம் என் பதை சந்தேகத்திற்கு இடமின்றி ஸ்ரீமதி வசந்தகோகிலம் நிலை நாட்டினார்.

கீவளூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை

இன்னிசை பொழிவதோடு புதிய வர்ண மெட்டுகளிலே பாடல்கள் இயற்றும் கீவளூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களுடைய கச்சேரி அருமையாக இருந்தது. தம்முடைய சொந்த பாடல்களைப் பாடி மகிழ்ச்சி யடையச் செய்தார்.

பிருந்தாவும், முக்தாவும்

கீவளூர் கச்சேரி இரண்டு மணி நேரம் நடைபெற்ற பிறகு ஸ்ரீமதி பிருந்தாவும், முக்தாவும், அபிராமசுந்தரி பிடில், திருக்கோகர்ணம் ரங்கநாயகி மிருதங்கம் — இவைகளுடன் கச்சேரியை ஆரம்பித்தார் கள். உயரிய சங்கீதம். நல்ல சங்கீத பரம்பரையில் தோன்றியவர்கள் என்பதற்கு ஏற்ப, உண்மையான சங்கீத ஞானம் இன்னது என்று உணரும்படி செய்தார்கள். பூர்வ பண்புடன் கூடியதாய், கச்சேரி அற்புதமாக அமைந்திருந்தது. பக்க வாத்தியங்கள் மெச்சும்படி இருந்தது.

ஜி. என். பாலசுப்ரமணியம்

ஜி. என். பி. என்று கேட்டவுடன் ரசிகர்களுக்கு ஆனந்தம் உண்டாவதை நானும் கவனித்திருக்கிறேன். அவருடைய கச்சேரிக்கு கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை பிடிலும், பாலக்காடு மணி மிருதங்கம், பழனி சுப்ரமணிய பிள்ளை கெஞ்சிராவும் அமைந்திருந்ததால் ரசிகர்களுக்கு மேலும் மட்டற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று.

பொதுவிலே நல்ல பாடல்களைக் காது குளிர, மனங் குளிரக் கேட்கலாம் என்றுதான் பாட்டுக் கச்சேரிக்கு என்னைப் போன்றவர்கள் போவது வழக்கம். கச்சேரிகளில் ராகம், பல்லவி, என்பதாக போடுகிறார்கள் அல்லவா? ஏதாவது ஒரு ராகத்தை எடுத்துக் கொண்டு, விரிவாக பல்லவியை சுரத்துடன் பாடிக் காட்டுவதுதான் அதன் தாத்பரியம். ஆனால் எல்லா பல்லவியையும் சுரத்துடன் பாடிக் கொண்டே 'வித்வத்தை'க் காட்ட ஆரம்பித்து விட்டால் கேட்பவர்களுக்கு சகிக்காது. பாடகர்கள் இதை உணர்ந்து பாடினால் தான் சபையைக் கவர முடியும். அன்று ஜி. என். பி. ஒரு தெலுங்குப் பாடலை எடுத்துக் கொண்டு தம் 'வித்வத்'தை காட்ட ஆரம்பித்து விட்டார். அது சகிக்கக் கூடியதாக இல்லை. தமிழிசைக் கச்சேரிகளில் இந்தமாதிரி செய்வது சுத்த அபத்தம். ஆனால் தமிழ்ப் பாட்டுகளை விரைவாகப் பாடினாலும், ரசிகர்கள், தமிழைத்தான் அனுபவிக்கிறார்கள் என்பதை பாடகர்கள் கட்டாயம் உணர வேண்டும்.

சிதம்பரம் ஜெயராம் பிள்ளை

தமிழ் இன்னிசைப் பிரயோகர் இன்னிசைப் பிரயோகம் செய்யப் போவதை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தேன். ஆம், இசையை ரொம்ப அருமையாக பிரயோகித்தார். ஜெயராமன் ரொம்பவும் முன்னுக்கு வரக்கூடியவர். இந்த மாதிரி இளம் பாடகர்களுக்கு தமிழபிமானிகள் ஆதரவு தந்தால் இன்பத் தமிழ் இசை வளர்ந்தோங்கும் என்பதில் சந்தேகமே கிடையாது.

திருப்பாம்புரம் சுவாமிநாத பிள்ளை

திருப்பாம்புரம் புல்லாங்குழல் கச்சேரி என்றால் எனக்கு எப்போதுமே ஆனந்தம் அதிகம். மாயக் கண்ணனின் அமுத கானம் போல் ரொம்ப அற்புதமாக வாசித்தார். அன்று ராதை, மாயக் கண்ணன் குழலிலே எவ்விதம் மயங்கிப் போய் நின்றாள்? கோபால கிருஷ்ணனின் மந்திர சக்தி என்ன என்பதை எல்லாம் அனுபவிக்க கொடுத்து வைத்தது. குழல் வழியாக மதுர நாதம் பொழிந்து உள்ளங்களைக் கனியச் செய்தார். ஆகா! இன்னும் நெஞ்சில் அந்த இன்பமயமான இசை ஒலித்துக் கொண்டே இருக்கிறது. புரொபசர் வெங்கடசாமி நாயுடு பிடில் என்றால் அதில் எவ்வளவோ நயம் அடங்கி யிருக்கிறது என்பது எல்லாருக்கும் தெரியும். தஞ்சாவூர் ராமதாஸ் மிருதங்கம் அனுபவிக்க வேண்டியது. கலை அன்பரான சேத்தூர் ஜமீன்தார் அவர்கள் கெஞ்சிரா. ஆகா! ஜமீன்தார் அவர்கள் கலை ஆர்வத்தை என்ன வென்று சொல்லுவது! அன்றைய கச்சேரி பலே பேஷ். ஒரே அற்புதம்.

ஆலத்தூர் சகோதரர்கள்

ஆலத்தூர் சகோதரர்கள் பாட்டு, கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை பிடிலுடனும், புதுகோட்டை தக்ஷிணாமூர்த்தி மிருதங்கம், சுவாமிநாதப் பிள்ளை கெஞ்சிராவுடனும் ஆரம்பமாயிற்று. தெளிவாகவும் இனிமையாகவும் பாடினார்கள். ராஜமாணிக்கம் பிள்ளையின் இனிய இழைந்த பிடில் இசையுடன் கச்சேரி ரொம்ப கச்சிதமாயிருந்தது. காம்போதி, தோடி, ராக ஆலாபனைகள் வெகு ஜோர்.

கே. பி. சுந்தராம்பாள்

ஸ்ரீமதி சுந்தராம்பாள் பாடலுக்கு எப்போதுமே இசை அபிமானிகளிடையே நல்ல செல்வாக்கு உண்டு. கம்பீரமான இனிய சாரீரம். அலாதியான குழைவு. நல்ல எடுப்பு. இவ்வளவும் சேர்ந்து இன்பத்தைத் தந்தது.

ஸ்ரீமதி சுந்தராம்பாள் கச்சேரி ஆரம்பமாவதற்கு முன், டி. கே. சி. அவர்களும் சர். ஆர். கே. எஸ். அவர்களும் அற்புதமான பிரசங்கம் செய்தார்கள். பாவம், ராக, தாளம், இவைகளை ரொம்ப தெளிவாக விளக்கி, தமிழிசை சங்க விழா வெற்றிகரமாக நடை பெற்றதில் உண்டான தம்முடைய மகிழ்ச்சியை டி. கே. சி. தெரிவித்துக் கொண்டார். 'இதயம் பேசுகிறது' என்பதற்கு உதாரணமாக இருந்தது டி. கே. சி. யின் பேச்சு.

சர். ஆர். கே. எஸ், எதிர்ப்புகளை எல்லாம் சுக்கு நூறுகும்படி அருமையான பிரசங்கத்தைச் செய்தார். சந்தோஷ ஆரவாரத்தால் அந்தக் கட்டிடமே எங்கே அதிர்ந்து விடப்போகிறதோ என்று எனக்கு பயமாயிருந்தது! இப்படியாக தமிழிசை மகாநாடும், கச்சேரிகளும் அமோக மாக நடந்தேறியது. அதில் பங்கெடுத்துக் கொண்ட அன்பர்களை யெல்லாம் தனியாகப் பாராட்ட வேண்டும். இசைச் சங்க தயாரிப்பான மலர், நிகழ்ச்சி மலர், மற்ற பிரசுரங்கள் எல்லாம் சிறப்பாயிருந்தன. ரூபாய் 38—ஆயிரத்துக்கு டிக்கெட் விற்பனை ஆகியிருக்கிறது என்றால் தமிழிசையை ஆதரித்து அனுபவித்த தமிழ் மக்கள் பாக்கியசாலிகளே தான். ரேடியோவிலும் பாடல்களை ஒலிபரப்பினார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். தமிழிசை மகா நாட்டுத் தீர்மானங்கள் எல்லோராலும் நியாயமாக ஒப்புக் கொள்ளப் பட்டு போற்றப்பட வேண்டியவை.

சர். ஆர். கே. எஸ் முதல் நாள் சொல்லியபடி வாழ்க்கைக்கு வேண்டிய முக்கிய அம்சம் இரண்டு. ஒன்று சங்கீதம். இரண்டாவது சாப்பாடு. கச்சேரிகள் முடிந்த பிறகு, சங்கீத அபிமானிகளுக்கு விருந்து நடை பெற்றது. குமாரி சூடாமணியின் கச்சேரியும் நடந்தது. அப்போது இந்த உண்மையை உணர்ந்தேன்.

இப்போது எல்லாவற்றையும் கூட்டி நினைத்துப் பார்க்கையில் "ஆகா! நம்முடைய டி. கே. சி யும், ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களும், சர். ஆர். கே. எஸ். அவர்களும் எத்தகைய அரிய அற்புதமான காரியத்தைச் சாதித்து விட்டார்கள், இது தமிழர்களின் தமிழ் நாட்டின் பாக்கியம் அல்லவா?" என்று தோன்றுகிறது; ஆம். என்னைப் போலவே எல்லாருக்கும் இந்த நினைவு தோன்றி நெஞ்சில் நிலைத்தே தீரும்.

மலர்மணம்

முகப்புப் படம்:

பொங்கலிடுதல்.

பொங்கல் விழாவில் அழகிய காட்சியுடன் வசந்த மலர் விரிகிறது. இந்த விழாவின் பொருள் என்ன? அட்டைச் சித்திரத்திற்கு அருமையாகக் கவிதை (69-ம் பக்கம்) புனைந்த கதிரவன் வர்ணிக்கிறார். "பொங்கல் நன்னாளில் தை விளைவான நெல், வாழை, இன் கரும்பு, தேங்காய் எல்லாம் வைத்து பசுவை அலங்கரித்து எதிரே கட்டி திரு விளக்கேற்றி வீட்டின் அரசியான மங்கலத்திரு கற்புத் தெய்வம் 'எங்கள் மனை வாழ்வு நலம் பெறுக' என்று செல்வத் திருமகளை மங்கல வள்ளை பாடி வணங்குதல் வழக்கம். தமிழர் நாகரிகத்தின் மங்கல வடிவமே இந்த அழகான படம். நமது சமுதாய வாழ்விற் பொலியும் அழகும் எழிலும் இதில் குலுங்குகின்றன." தமிழரின் ஒப்புயர்வற்ற நாகரிகத்தை விளக்கவே இப்பகுதி ஆரம்பித்திருக்கிறோம். கதிரவனின் உயரிய கவிதைகள், கற்பனையைத் தூண்டும். இந்த மலரில் பிரகாசிக்கும் வர்ணப்படங்களுக்கு பொருத்தமான பாடல்கள் சேர்த்திருப்பது மற்றொரு அலங்காரம்.

பொங்கல் விழாவோடு தமிழிசை விழாவும் கலந்து இன்பமளிக்கிறது. தமிழிசை விழாவில் நிகழ்த்திய டி. கே. சியின் அதி அற்புதமான பிரசங்கத்தை 'வசந்தம்' அன்பர்களுக்கு இவ்விதழில் அளித்துள்ளோம். உன்னத கவிதையைப் போல் மீண்டும் மீண்டும் சுவைத்து பயன் பெறலாம். 'தமிழிசை விமரிசை'யையும் எப்படி என்று பாருங்கள். இரண்டு விழாக்கள் என்றா சொன்னேன்? இல்லை, சர். ஆர். கே. எஸ். அவர்களின் பொருளாதாரக் கட்டுரையைக் கண்ட கண்களுக்கு அதுவும் ஒரு விழாவே தான். ஏனென்றால் அவ்வளவு ஆவலுடன் ரசிகர்கள் அதை எதிர்பார்த் திருக்கிறார்கள். 'யுத்தச் செலவு' பற்றி கவர்ச்சிகரமாக எழுதி இருக்கிறார். இதனால் நாட்டிற்கு விளையும் பெருத்த நன்மையை எண்ணி மகிழ்வெய்துகிறோம்.

இன்னும் பொங்கல் இதழே ஒரு நல் விருந்து தான். சொக்கியின் கதை, மனிதசுபாவம், குழலின் கனவு, மற்றுமுள்ள எல்லா அம்சங்களையும் அனுபவியுங்கள்.

— ஆசிரியர்

தயாரிப்பு பூரணமடைந்து வருகிறது

எம். யு. ஏ. சி. யின்

மானசம்ரக்ஷணம்

(தமிழ்)

நடிகர்கள் :

எஸ். டி. சுப்புலக்ஷிமி
வி. என். ஜானகி
சி. டி. ராஜகாந்தம்
ராவ்பகதூர் கிருஷ்ணராவ் பான்ஸலே
டி. ஆர். ராமச்சந்திரன்
காளி. என். ரத்தினம்
ஜி. பட்டு அய்யர்
ராஜகோபால் அய்யர்

இன்னும் திறமை வாய்ந்தோர் நடிப்பது.

டைரக்ஷன்:

கே. சுப்ரமணியம் பி. ஏ. பி. எல்.
சி. எஸ். வி. அய்யர்

பாடல்கள் :

பாபநாசம் சிவன்
ராஜகோபால் அய்யர்

ஸ்டுடியோ : நியூடோன்

(விநியோகிப்பவர்கள்)

சௌத் இந்தியா பிக்சர்ஸ் (லிமி)
காரைக்குடி

கிளைகள்: பெஜவாடா, பங்களூர், கோயமுத்தூர்.

S.I. PUBLICITIES

எதிர்பாருங்கள் வருகிறது!

ஜுபிடரின்

நக்ஷத்திரங்கள் ஜ்வலிக்கும்
உன்னத தயாரிப்பு

மஹா மாயா

(தமிழ்)

நடிகர்கள்:

பி. யு. சின்னப்பா
கண்ணும்பா
எம். எஸ். சரோஜா
எம். கே. மீனலோசனி
ஆர். பாலசுப்ரமணியன்
டி. ஆர். பி. ராவ்
மற்றும் பலர் நடித்தது

டைரக்ஷன்:

T. R. ரகுநாத் & "இளங்கோவன்"

ஸ்டுடியோ: நியூடோன்

விநியோகிப்பவர்கள்

சௌத் இந்தியா பிக்சர்ஸ் லிமிடெட்
காரைக்குடி

கிளைகள்: பங்களூர், கோயமுத்தூர், பெஜவாடா.

S.I.
PUBLICITIES

நான்கோ

ரப்பர் ஒர்க்ஸ்

கவர்ண்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்ட எல்லா விதமான ரப்பர் மற்றும் எபொனைட் சாமான்களும் தயாரிப்பவர்கள்

★

"நான்கோ"

ரிபீல்ட் டயர்

குறைந்த செலவில் மைல் கணக்கில் நீடித்து உழைக்கும்

★

NANCO RUBBER WORKS

LAWLEY ROAD Post **COIMBATORE**

Tel : "NANCO" *Phone :* 247

THE
COCHIN TEXTILES

(Proprietors : The west coast Agencies Limited)

[Incorporated in COCHIN STATE)

MANAGING DIRECTOR:

RM. ALAGAPPA CHETTIAR,

M. A., BAR-AT-LAW, D. LITT.

TELEGRAM:
' TEXTILES, TRICHUR '

TELEPHONE
TRICHUR 40.

PUDUKAD MILLLS POST. COCHIN STATE

Working Spindlage
29880 Spindles

★

MANUFACTURERS OF

BEST QUALITY SWADESHI YARN IN FINER COUNTS 40s. 60s. & 80s. TO SUIT THE REQUIREMENTS OF THE CONSTITUENTS.

★

Also manufacturers of the Cneese, Cone and Doubled Yarn.

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளீன், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹ்மதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

யுத்தகால விலைவாசிகள்
உங்கள் பணத்தின் மதிப்பைக்
கெடுத்து விட்டன

★

எனவே

பணத்தை சேமித்து

தற்காப்புப் பத்திரங்களிலும் நேஷனல்
சேவிங்ஸ் செர்ட்டிபிகேட்டுகளிலும்

போட்டு வையுங்கள்

பொங்கல் புது வருடத்தில்!

முத்தமிழ் கலா வித்துவரத்தின

T. K. S. சகோதரர்களின்

" புதிய நாடகங்கள் "

○

1944 ஜனவரி மீ 1௳

● " வீர சிவாஜி "
(டி. கே. ரத்தினசாமி)

● " காளமேகம் "
(டி. கே. முத்துசாமி)

● " பில்ஹணன் "
(ஏ. எஸ். ஏ. சாமி)

ஈரோடு செண்ட்ரலில்

உரிமையாளர்கள் :
T. K. S. சகோதரர்கள்

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔசதங்
களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம்
செய்யுங்கள்

★

ஆர்யவைத்ய

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய
பார்மசி

திருச்சி ரோடு   கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக
அனுப்பி வைக்கப்படும்.

THEY KEEP YOUR ENGINE RUNNING AT ITS BEST

★

BOC

★

SHELL MOTOR SPIRIT

OILS

BOC MOTOR SPIRIT

★

DAY & NIGHT SERVICE

CHELLAM & PALGHAT ROAD

STAND PUMPS

OF

MESSRS. A. N. MARUDACHALAM CHETTIAR

&

A. KRISHNASWAMY CHETTIAR.

AGENTS, BURMAH SHELL, COIMBATORE

தி சென்டரல் பேங் ஆப் இந்தியா, லிமிடெட்

(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)

(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)

அதிகாரம் பெற்ற மூலதனம்	... ...	ரூ. 3,50,00,000
வாக்களிக்கப் பட்ட மூலதனம்	... ...	ரூ. 3,36,26,400
செலுத்தப் பட்ட மூலதனம்	... ...	ரூ. 1,68,13,200
ரிசர்வும் மற்ற நிதிகளும்	... ...	ரூ. 1,48,32,000
டிபாசிட்டுகள் 30–6–1943ல் இருந்தபடி	...	ரூ. 72,27,68,300

தலைமை ஆபீஸ்:

மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தாபனங்களும் பெற்றது.

மானேஜிங் டைரக்டர்:- Mr. H. C. கேப்டன், J. P.

டைரக்டர்கள்:–

Sir. H. P. மோடி K. B, E. (தலைவர்)
நூர்முகமத் M. சினய்
ஹரிதாஸ் மாதவதாஸ்
பாபுஜி தாதாபாய் லாம்
ஆர்டிஷர் B. துபாஷ்
தரம்ஷே முல்ராஜ் காட்ட்ரவ்
டின்ஷா D. ரோமர்
சர். ஆர்டிஷர் டலால் Kt.,
விதல் தாஸ் கான்ஜி
ஹார்மஸ்ஜி பிரேம்ஜி கனிஷாரியட்

லண்டன் ஏஜண்டுகள்:– மெஸர்ஸ், பார்க்லேஸ் பேங் லிமி., மிட்லண்ட் பேங் லிமி.

நியூயார்க் ஏஜண்டுகள்:– தி காரன்டி டிரஸ்ட் கம்பனி ஆப் நியூயார்க்

எல்லா விதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்து விவரங்களை ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

தென் இந்தியாவின் கிளை ஸ்தாபனங்கள்:—

அடோனி, ஆலப்பிளை, ஈரோடு, பங்களூர், பெஜவாடா, கள்ளிக் கோட்டை, கொச்சி, கோயமுத்தூர், கட்ப்பை, தோணி, எர்ணுகுளம், குண்ட்க்கல், கோவில்பட்டி, கர்நூல், மதராஸ், மதுரை, நந்தியால், பொள்ளாச்சி, சேலம், திருப்பூர், திருச்சூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை, விருதுநகர்.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனு பஜார் மதராஸ்

AMERICAN RADIOS

ORDERS BOOKED NOW

FOR

ARRIVING Models of

★ R. C. A.

★ PHILIPS

★ WESTING HOUSE

AT

GOVNT. CONTROLLED PRICES

MARCONI VALVES

AND

SPARES IN STOCK

SRI RAMA VILAS SERVICE Ltd.,

202-203, MOUNT ROAD, MADRAS.

(Sole distributors for MARCONIPHONE radios for the MADRAS PRESIDENCY including states.)



T.V.S. முன்னிற்கிறது!



T.V.S. கியாஸ் பிளாண்டுகள் மூன்று வருஷகாலமாக விற்பனையாகி வருகின்றன. இந்தியாவில் இன்று 4,000-க்கு மேல் உபயோகத்திலிருக்கின்றன- இதன் சிறந்த உழைப்பையும், சிக்கனச் செலவையும் கண்டு, கார், டிரக் சொந்தக்காரர்கள் பூரண திருப்தி அடைந்திருக்கின்றனர். தமது வெகுநாளைய அனுபவத்தால்தான் T.V.S இஞ்சினீயர்கள் தலைசிறந்த கியாஸ் பிளாண்டுகளைத் தயாரிப்பது சாத்தியமாகிறது.

இந்தப் பிளாண்டின் திறமையைப் பிரத்யக்ஷமாக காண்பிக்கும்படி டிஸ்ட்ரிப்யூடர்களிடம் கேளுங்கள்.

பிரதான அம்சங்கள்

ஸ்டார்டிங் அதிசுலபம்:—சீக்கிரத்தில் ஸ்டார்ட் ஆகிவிடும்.

சமகனம்:—டயர் தேய்வு குறைவு, பிரேக்கிற்கு பந்தோபஸ்து அதிகம்.

மும்முறை வடிகட்டும் வசதி:—சுத்தமான கியாஸ். மேற்பார்வை செலவு குறைவு.

மிகவும் நம்பிக்கையானது:—ஆரம்பத்திலிருந்து முடிவுவரை நம்பிக்கையான உழைப்பு.

நேர்த்தியான தோற்றம்:—மற்றெல்லா பிளாண்டுகளையும்விட சிறந்ததோற்றம்.

வாங்கு முன் மாதிரிகளைப் T·V·S **கியாஸ் பிளாண்ட் பாருங்கள்.**

)கார், லாரிகளுக்கு ஏற்றவை)

T.V. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ், லிமிடெட்

மதுரை & சென்னை.

TVSK-7TM

19792
சென்னை 600 008

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

வசந்தா மில்ஸ்

(லிமிடெட்.)

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ஞ கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சி பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:

20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முருக்கு, காரம், சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

மல் சர்டிங்

லாங்கிளாத் சதர்

வேஷ்டிகள் டவல்

தயாரிக்கிறோம்

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை, எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாருதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

சென்ட்ரல் ஸ்டுடியோஸ் லிமிடெட்

கோயம்புத்தூர்

நவீன யந்திர சாதனங்களைக் கொண்டு தென் இந்தியா விலேயே மிகப் பிரக்யாதி வாய்ந்த அநேகம் தமிழ்ப் படங்களைத் தயாரித்த இணையற்ற ஸ்டுடியோ!

★

இப்பொழுது தயாராகி வரும் படங்கள்

★

ஹரிதாஸ் — ராயல் டாக்கீஸ்

ஜகதலப்பிரதாபன் — பக்ஷிராஜா பிலிம்ஸ்

வால்மீகி — சென்ட்ரல் ஸ்டுடியோஸ்

சாலிவாகனன் — பாஸ்கர் பிக்சர்ஸ்

மற்றும் இரு அற்புதமான தமிழ்ப் படங்கள்

★

5 APR 1944

Printed at the Vasanta Mills Press, and Published by A. Krishnaswamy at 4/12. A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam.